Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 066 | ஞாயிற்றுக்கிழமை | தை 18 ஆம் நாள் 31 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16+24 | விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111



## நாம் நாட்டில் எங்கும் விகாரை அமைப்போம்

ஹெகலிய திமிர்ப் பேச்சு

கொழும்பு, ஜன. 31

விகாரைகளை நாட்டின் எந்தப் பகுதியிலும் அமைக்கலாம். அவ்வாறு அமைக்கக்கூடாது என்று 15 ➤

# கே.கே.எஸ்ஸில் 100 அடி விகாரை

## தனியார் காணியில் ஆக்கிரமிப்புக்கு அடிக்கல் நட்டார் இராணுவத் தளபதி



யாழ்ப்பாணம், ஜனவரி 31

வலி. வடக்கில் அனுமதி பெறாமல் எந்தக் கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படக் கூடாது என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி 24 மணித்தியாலங்களுக்குள்ளேயே அதனைத் தூக்கி கடாசி எறிந்து விட்டு, தனியார் காணியில் 100அடி உயரமான விகாரை அமைப்பதற்கான அடிக்கல்லை நட்டார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா. 15 ➤

## ஐ.நாவுடன் அரசு 'டீலுக்கு' முயற்சி

கொழும்பு, ஜன. 31

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் கடைசி நிமிட பேச்சுக்க 15 ➤

## திஸ்ஸ விகாரைக்கு அடிக்கல் பின்னணியில் அங்கஜன்தான்!

யாழ்ப்பாணம், ஜன. 31

திஸ்ஸ விகாரைக்கு அடிக்கல் நடப்பட்டதன் பின்னணியில் அங்கஜன் உள்ளார். இதனால்தான் அவர் வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் நேற் 15 ➤

## திஸ்ஸ விகாரைக் கட்டுமானம் இதற்காகவே தீர்மானம் எடுப்பதற்கு மறுத்தேன்!

அங்கஜன் எம்.பி. சலாப்பல்

யாழ்ப்பாணம், ஜன. 31

தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படக்கூடாது என் பதற்காகத்தான் விகாரைகள் 15 ➤

## வடக்கில் 3,000 பேருக்கு நேற்றுத் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜன. 31

வடக்கு மாகாண மருத்துவமனைகள் ஊடாக மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொரோனா 15 ➤



## அனுமதி பெறாத கட்டடம்; வழக்குத் தாக்கல் செய்வோம்

தவிசாளர் சுகிர்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

இராணுவத் தளபதியால் அடிக்கல் நடப்பட்ட விகாரைக் கட்டுமானத்துக்கு பிரதேச சபையிடம் அனு 15 ➤

## கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் மாவை.சேனாதிராசா

வவுனியா, ஜன. 31

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவைக் களமிறக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு 15 ➤

## அங்கஜனுக்கு சூடுபோட்ட கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன. 31

வார்த்தைகளில் மிகவும் கவனம் தேவை. ஒரு தரப்பினரை இழிவுபடுத்தும் வகையில், புறந்தள்ளும் வகையில் நீங்கள் கருத்து வெளிப்படுத்தக்கூடாது. இவ்வாறு 15 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
* நிபந்தனைகளுக்குட்பட்டது.
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
Dialog
எதிர்காலம் இன்றே.

பொன்னொளி நகர் வீட்டுத்திட்டம்

# குடியமராதோரின் காணியை கையகப்படுத்தத் தீர்மானம்!

## வாடகைக்கு விட்டவர்களின் நிலையும் அதுவே

**யாழ்ப்பாணம், ஜன. 31**

**சங்கானை பொன்னொளி நகர் வீட்டுத்திட்டத்தின் கீழ், வீடுகள் கிடைக்கப்பெற்றும் இன்று வரையில் குடியமராதவர்களினதும் பிற நபர்களுக்கு வாடகைக்கு வழங்கியுள்ளவர்களினதும் வீடுகளை மீண்டும் கையகப்படுத்துவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.**



சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் சங்கானை பிரதேச செயலகத்தில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், எமக்கு நீண்ட நாள்களாக வீட்டுத் திட்டங்கள் தரப்படவில்லை. காணிகள் அற்றவர்களாக இருக்கின்றோம். ஆனால் வீடுகள் தேவையற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக சங்கானை பொன்னொளி நகரில் வீட்டுத் திட்டங்கள் பெற்ற பலர் அதன் பயனாளர்களாக இல்லை. இவ்வாறிருக்கையில் ஏன் அவர்களுக்கு மேற்படி வீடுகள் வழங்கப்பட்டன? என்று கேள்வி எழுப்பினார்.

இதை குறித்த பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலரும் பிரதேச செயலரும் இணைத்தலைவருக்கு உறுதிப்படுத்தினார்கள். இதையடுத்துக் கலந்துரையாடப்பட்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

குறித்த வீடுகளைப் பெற்று அதைப் பயன்படுத்தாதவர்களின் செயலுக்கான நியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய வீடுகள் அடையாளம் காணப்பட்டு ஒரு வார அவகாசம் வழங்கப்பட்டு அந்தந்த வீடுகளின் முன்னால் எச்சரிக்கைப் பலகையொன்றைக் காட்சிப்படுத்துங்கள். அந்த ஒரு வாரத்துக்குள் அவர்கள் மீண்டும் வீடுகளுக்கு வந்து பொறுப்பேற்கவில்லையென்றால் அவர்களின் பதிவுகளை நீக்கி விடுங்கள். இறுக்கமான - மிகச் சரியான கண்காணிப்பின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு உரிய வீடுகள் பொருண்மியத்தில் மிகவும் நலிந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-319)

### பாடசாலைகளில் சிறப்புக் கவனம்

யாழ்ப்பாணம், ஜன. 31

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிய ஏழு பாடசாலைகள் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளன என்று அதன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுமுன்தினம் சுட்டிக்காட்டப்பட்டது.

போர்க்காலத்தின் முன்னர் குறித்த பகுதிகளில் இயங்கிய பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம், காங்கேசன்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, காங்கேசன்துறை சிங்கள மகா வித்தியாலயம், பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன தற்போது இயங்காத நிலையில் உள்ளன. அத்துடன், வயாவிளான் சிறி வேலுப்பிள்ளை வித்தியாலயம், மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, காங்கேசன்துறை மகா வித்தியாலயம் ஆகியன இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் இயங்குகின்றன. இந்த நிலை பின்னடைவைத் தருகின்றது. இந்தப் பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில் இடம்பெற வழிவகை செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், விடுவிக்கப்பட்ட கலைமகள் வித்தியாலயத்தைச் சுற்றி இராணுவம் நிலைகொண்டுள்ளதால் மாணவர்கள் நிம்மதியாகக் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (ம-319)



### கொரோனா தடுப்பூசியை சகலரும் பெறவேண்டும்!

*காரைநகர் ஒருங்கிணைப்புக் குழுவில் மருத்துவர்கள் கூட்டாகக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 31

கொரோனாத் தடுப்பூசியை அனைத்து மக்களும் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும். இது தொடர்பில் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம். நாங்கள் தடுப்பூசியைப் பெற்ற பின்னரே இந்தக் கோரிக்கையை உங்களிடம் முன்வைக்கின்றோம் . இவ்வாறு மருத்துவ அதிகாரிகள் இருவர் காரைநகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுக் கோரிக்கை முன்வைத்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்று இன்று (நேற்று) சுகாதாரத் துறையினருக்குப் போடப்பட்டாயிற்று. நாம் இந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வருவதற்கு முன்னர் அதைப் பெற்றுக்கொண்டே இங்கு வந்துள்ளோம். ஆனால், மக்கள் மத்தியில் இந்தத் தடுப்பூசி தொடர்பில் தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. தடுப்பூசி போட்டுக்கொண்டால் இறந்துவிடுவார்கள் என்றும்கூடச் சொல்லப்படுகின்றது. இதெல்லாம் தவறான உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள். தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாம் இங்கு இயல்பாகவே உள்ளோம்.

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி யதுநந்தன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார் ஆகியோரே மேற்படி கோரிக்கையை முன்வைத்தவர்களாவர். (ம-319)

சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட

## காணிகள் இல்லாதோருக்கு பளையில் இடம்கொடுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31

சங்கானை பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் காணிகள் இல்லாமல் உள்ளவர்களுக்கு குறைந்த பட்சம் பளையிலாவது இடம்கொடுக்க முன்வாருங்கள் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரன்.

சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் காணிகள் அற்றவர்களின் விடயம் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணிகள் அற்றவர்களின் பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. வரவிருக்கும் ஒரு லட்சம் காணித்துண்டுகளில் இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும். அல்லாவிட்டால் பளைப் பகுதிகளில் உள்ள காணிகளிலாவது அவர்களைக் கொண்டுசென்று குடியமர்த்த வேண்டும். எவரெவரோ அங்கு காணிகளை உடைமையாக்கிக் கொள்கின்றனர். அங்கு இந்த மக்களையாவது குடியேற்றலாமே - என்றார். (ம-319)

வட்டுக்கோட்டை தெற்கு

## நிர்க்கதியான குடும்பங்கள் வீடுகளுக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

வட்டுக்கோட்டை தெற்குப் பகுதியில் நீண்டகாலமாக உரிமை கோரப்படாத காணியில் வசித்துவரும் 12 குடும்பங்கள் குறித்த காணியில் தமக்கு வீடுகள் அமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று நடைபெற்ற சங்கானை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

வட்டுக்கோட்டை தெற்கு ஜே/165 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்டகாலமாக ஒரு காணித்துண்டில் நாங்கள் வசித்து வருகின்றோம். அந்தக் காணி எவருடையது என்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை. எனவே அந்தக் காணியை எமக்குரியதாக்கி அதில் வீடுகளை அமைத்து ஒரு சுபீட்சமான வாழ்வுவாழ ஆவன செய்ய வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். இதற்குப் பதில் வழங்கிய பிரதேச செயலர் "குறித்த காணியை உங்களுக்கு உரியதாக ஆக்குவதிலேயோ அல்லது அதில் வீட்டுத் திட்டங்களைத் தருவதிலேயோ ஏராளமான சட்டச்சிக்கல்கள் உள்ளன. அது அரச காணியல்ல. திடீரென ஒருவர் உரிமை கோரினால் பிரச்சினையாகிவிடும். வீட்டுத்திட்டம் என்பது அரச சொத்து. அதை இவ்வாறான காணிகளில் வழங்க முடியாது" என்று தெரிவித்தார். இதற்குப் பதில் வழங்கிய குறித்த பகுதியைச் சேர்ந்த ஒருவர், "அவ்வாறெனில் எந்த அடிப்படையில் கிணறுகளையும் மலசல கூடங்களையும் அதில் அமைக்க அனுமதித்தீர்கள். எந்த அடிப்படையில் தற்காலிக வீடுகளுக்கு மின் இணைப்புத் தந்தீர்கள்'' என்று கோரிக்கையை விடுத்தார். இதையடுத்து உரிய பொறிமுறையின் கீழ் குறித்த பகுதியில் அறிவித்தல் பலகையொன்று நடப்பட்டு நீண்டகால படிமுறைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ம-319)

# கொழும்பு துறைமுக விவகாரம்; பேச்சுத்தான் தீர்வுக்கு ஒரே வழி

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு




**கொழும்பு, ஜன.31**

**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதால் எவ்வித பயனும் எவருக்கும் கிடைக்கப் பெறாது. பேச்சின் ஊடாகவே தீர்வு காண முடியும் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேசிய வளங்களை விற்கும் கொள்கை அரசுக்குக் கிடையாது என்பதை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்கள். கிழக்கு முனையம் தொடர்பில் கடந்த அரசு இந்தியாவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. கிழக்கு முனைய விவகாரத்தில் சிறந்த தீர்மானத்தை எடுக்க ஜனாதிபதியால் எழுவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினர் கடந்த வாரமும் 5 ஆவது தடவையாகக் கூடியுள்ளார்கள். துறைமுக ஊழியர்கள், மற்றும் துறைமுக பொறியியலாளர் சங்கத்தினர் முன்வைத்துள்ள யோசனைகள் பரிசீலனை செய்யப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் துறைமுக ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். போராட்டங்களை முன்னெடுப்பதால் பொருளாதாரத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும். இதனால் எவருக்கும் நன்மை கிடைக்கப்பெறாது - என்றார். (ப)



## ஈகைச்சுடர் முத்துக்குமாரின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஜன.31

ஈகைச்சுடர் முத்துக்குமாரின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

2009 ஆம் ஆண்டு இலங்கை அரசின் தமிழின அழிப்பு உச்சம்பெற்றிருந்த வேளையில், அரசின் இனஅழிப்பை நிறுத்தக்கோரியும்,இனஅழிப்புக்கு உதவி வழங்குவதை இந்தியா நிறுத்தவேண்டும் எனக் கோரியும் முத்துக்குமார் தனக்குத்தானே தீ மூட்டி ஈகைச் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-26)

## தீப் பற்றியதில் பெண் சாவு!

யாழ்ப்பாணம், ஜன.31

முரண்பாட்டில் ஈடுபட்ட கணவனைப் பயமுறுத்த முயன்ற பெண் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நாவற்குழி புதிய வீட்டுத் திட்டம் பகுதியில் நடந்துள்ளது.

நி.நிறோஜினி (வயது30) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி கணவனுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் தனக்கு தீ வைப்பது போன்று கணவனை அவர் பயமுறுத்தியுள்ளார். அப்போது அவர் மீது தீப்பற்றிக் கொண்டதில் படுகாயமடைந்தார்.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய

## நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை!

### அஜித்ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஜன.31

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிச் செயற்பட்ட ஆயிரத்து 223 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மேல் மாகாணத்தில் காணப்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சோதனை நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸ் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இதற்கமைய இதுவரையில் 9 ஆயிரத்து 495 நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 8 ஆயிரத்து 272 நிறுவனங்களில் உரிய சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய ஆயிரத்து 223 நிறுவனங்களில் முறையான சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் 837 நிறுவனங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது 63 நிறுவனங்கள் அந்தச் சட்ட விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை - என்றார். (ற-இ)

## தவறணைக் காவலாளி உறக்கத்தில் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜன.31

கள்ளுத் தவறணைக் காவலாளி ஒருவர் நேற்று உறக்கத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நுணாவில் மேற்கு கிளையில் இடம்பெற்றுள்ளது. 39 வயதுடைய சின்னராசா ஜெகன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வழமை போன்று தனது மகனுடன் கள்ளுத் தவறணைக்கு காவலுக்குச் சென்றுள்ளார். காலையில் மகன் எழுந்து பார்த்தபோது தந்தை உறக்கத்தில் உயிரிழந்து காணப்பட்டுள்ளார்.

காலையில் தவறணையைத் திறக்க வந்த தவறணை முகாமையாளர் இது தொடர்பாக சங்கத்துக்கு அறிவித்துள்ளார். சங்கத்தினர் அங்கு சென்று பார்வையிட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். இதையடுத்து சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

## தேங்கியுள்ள வெள்ளத்தால் தானியச் செய்கை பாதிப்பு

சாவகச்சேரி, ஜன.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பமான நிலையில், வயல்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் சிறு தானியப் பயிர்களை பயிரிட முடியவில்லை என நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வருடாவருடம் காலபோக நெல் அறுவடை முடிந்த வயல்களில், சிறு தானியங்களான உழுந்து, பயறு, கௌப்பி, சணல் போன்ற பயிர்களை விதைப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த வருடம் மழைவீழ்ச்சி அதிகரித்ததால் வயல்களில் வெள்ளம் குறைவடையவில்லை. இதனால் சிறு தானியப் பயிர்களை வயல்களில் விதைக்க முடியவில்லை என விவசாயிகள் 'கவலை தெரிவிக்கின்றனர். (ற-9)

# கல்வித்துறைக்கு ஏற்பட்ட சவால்களை சிறப்பாக வெற்றி கொண்டுள்ளோம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொரோனாத் தாக்கத்தால் கல்வித் துறைக்கு ஏற்பட்ட பெரும் சவால்களை சிறந்த முறையில் வெற்றி கொண்டுள்ளோம் என என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகளை பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தடுப்பூசியை ஆசிரியர்களுக்கு வழங்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது 2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு மாணவர்கள் தயாராகும் வகையில் மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புடன் சேவையாற்றுகிறார்கள். அதிக நேரம் எடுத்து மாணவர்கள் பரீட்சைக்குத் தயார்படுத்தப்படுகிறார்கள். மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முதலாம் தவணைக் கற்றல் நடவடிக்கை சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொவிட்19 வைரஸ் தாக்கம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பாடசாலை நிர்வாக பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கல்வி அமைச்சின் தீர்மானம் வரும் வரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# சட்டவிரோத மணல் அகழ்வு கிளிநொச்சியில் தொடர்கிறது

## பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, ஜன.31**

**கிளிநொச்சி, இரணைமடு, திருவையாறு மற்றும் உருத்திரபுரம் வடக்கு ஆகிய பகுதி களில் தொடர்சியாக மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்றும், அதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் தவறியுள்ளனர் எனவும் பொது அமைப்புக்களால் குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போதே அமைப்புக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தன.

கிளிநொச்சியில் இடம்பெறும், சட்ட விரோத மண் அகழ்வுக்கு பொலிஸார் துணை போகிறார்கள். பொலிஸாரின் கனரக வாகனங்கள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றன. இது சம்பந்தமான ஆதாரங்கள் எம்மிடம் உண்டு. எனவே இது தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் என்று பொது அமைப்புக்கள் வலியுறுத்தின.

"பகல் வேளைகளில் மணல் அகழ்வு கட்டுப்பாட்டில் உள்ளது. எமது ஊழி யர்கள் மற்றும் இரண்டு பொலிஸார் கடமையில் உள்ளனர்.

இரவு வேளையில் காட்டுப்பகுதி களுக்குச் செல்வது கடினம். வாள் வெட்டுச் சம்பவங்கள் எல்லாம் இடம்பெற்றுள்ளன. போதியளவு பொலிஸார் இல்லாமல் அங்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. எம்மால் பிடிக்கப்படுகின்ற வாகனங்கள் மீளவும் சில நாள்களில் பிடிபடுகின்ற நிலை காணப்படுகின்றது. அதனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இது தொடர்பாக இர ணைமடு நீர்ப்பாசனப் பொறியிய லாளர் கருத்துத் தெரிவித்தார்.

"எம்மிடம் போதிய ஆளணி இல்லை. ஆளணிப் பற்றாக்குறையை நிவர்தி செய்து அங்கு பொலிஸாரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும்" என்று கிளிநொச்சி பொலி ஸாரால் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. (ப-6)

## பொன்விழா நிகழ்வு

பளை, ஜன.31

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்தின் பொன்விழா ஆண்டு நிறைவு நிகழ்வு சங்க மண்டபத்தில் எளிமையான முறையில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. சங்கத்தின் தலை வர் தி.வதனராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கொரோனா அச்சம் காரணமாக சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள் ஆகியோர் மட்டும் கலந்துகொண்டனர். (வ-9)



## ரயில் மோதி 8 மாடுகள் சாவு

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி 8 மாடுகள் உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கி ழமை சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையை அடுத்து தண்டவாளத்தில் நின்ற மாடுகளே இவ்வாறு ரயிலில் மோதி உயிரிழந்தன என்று தெரிவிக் கப்பட்டது. (ஐ-9)

## பேருந்துச் சேவை நேரத்தில் மாற்றம்

கிளிநொச்சி, ஜன.31

கிளிநொச்சி, அக்கராயனில் இருந்து யாழ்ப்பா ணத்துக்கான இலங்கை போக்குவரத்துச் சபை யின் பேருந்தின் பயண நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நாள்தோறும் நண்பகல் 12.45 மணிக்கு கிளி நொச்சி நகரத்தில் இருந்து கனகபுரம், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், ஸ்கந்தபுரம் ஊடாக அக்கராயனை வந்தடையும் பேருந்து பிற்பகல் 2.00 மணியளவில் ஸ்கந்தபுரம், முக்கொம்பன், பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடை யும். மறுநாள் காலை 6.00 மணிக்கு அதே வழித்தடம் ஊடாக அக்கராயனை வந்தடைந்து, திருமுறிகண்டி ஊடாக பரந்தன் வரை குறித்த பேருந்து பயணிக்கும். இந்த வீதிகளின் சீரின்மை காரணமாக கிளிநொச்சியில் இருந்து புறப்படும் அந்தப் பேருந்து இனிவரும் நாள்களில் 15 நிமி டங்கள் முந்தி தனது பயணத்தை ஆரம்பிக்கும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி கிளை அறிவித்துள்ளது. (ப-ரி2)



## கிளி.இந்துக் கல்லூரியின் வர்ண இரவு நிகழ்வு

கொடிகாமம், ஜன.31

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் மாணவ தலைவர்களின் வர்ண இரவு நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பொன்சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் இதயசிவதாஸ் மீனலோஜினி தலைமையில், நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலய அதிபர் கி.விக்னராஜா கலந்து சிறப்பித்தார். (ற-159)

## கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, ஜன.31

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டா வளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் கிராமத்தில் கடல் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்துக்கு புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் திறக் கப்பட்டது. இரண்டு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்ட டத்தை மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத் தார். (வ-113)



## 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு!

கொடிகாமம், ஜன.31

கைதடி குருசாமி வித்தியால யத்தில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்த மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை பாடசாலை மண்டபத் தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூ பன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌர வித்தார். இந்த நிகழ்வுக்கான அனுசரனையை பரமேஸ்வரி செல்லத்துரை வருடந்தோறும் வழங்கி வருகின்றார்.

இதில் ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர்கள் மற்றும் பாட சாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-159)



அளுத்கம அலகல்லு பகுதிகளில் வசிக்கும் பொருன்மியம் நலிந்த பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இருவருக்கு வவுனியா பிரதேசசபை செயலாளர் கமலதாசனால் துவிச்சக்கரவண்டி கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் நற்பணி மன்றத்தின் தலைவர் தி. சுஜீ வன், நிர்வாகசபை உறுப்பினர் டி. சிந்துஜா மற்றும் நற்பணி மன்றத்தின் ஆலோசகர் மாணிக்கம் ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி5)

## இரு இடங்களில் இயங்கும் சங்கானை பொதுச்சந்தை

வலி.தென்மேற்கு, ஜன.31

கொரோனாத் தொற்று காரணமாக சமூக இடைவெளியைக் கருத்திற் கொண்டு இரு இடங்களில் சங்கானை பொதுச்சந்தை இயங்குகின்றது.

இதன்படி வழமையான சந்தை கட்டடப் பகுதி மரக்கறி வியாபாரிகளுக்கும், வெற்றிலை மற்றும் புகையிலை ஆகி யன விற்பனை செய்பவர்களுக்கு கடல் உணவு விற்பனைப் பகுதியும் ஒதுக்கப் பட்டுள்ள. குடாநாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக இரு வாரங்க ளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பொதுச் சந்தைகள் கடந்தவாரம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பி டத்தக்கது . (ஐ-115)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உதிர்ந்து போன மல்லிகை!

மல்லிகை ஜீவா தனது இறுதி இலக்கிய மூச்சையும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு இலக்கிய வாசனை வீசிக் கொண்டிருந்த தனது வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

மல்லிகையின் ஜீவமூச்சாக, இடைவிடாது இயங்கிய ஜீவாவின் இலக்கிய இயக்கம் ஓய்வுகொள்வது என்பது இயற்கை நியதியாக இருந்தாலும், அதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் இன்னொருவரால் இட்டு நிரப்படக்கூடிய ஒன்றல்ல.

ஜீவா என்ற மனிதனது சுயத்துவம், குறிப்பாக அரசியல் சார் கருத்தியல் என்பது தமிழ்த் தேசியம் சார் கருத்தியல்வாதிகளுக்கு முரண்பாடானதாகவும் ஒவ்வாததாகவும் அவர்களின் கடும் விமர்சனங்களுக்கு உட்பட்டதாகவும் இருந்தது.

இருந்தாலும், அவரது இழப்பு என்பது தமிழ் இலக்கியம்- அதன் வளர்ச்சி குறித்த பற்றுறுதியும் அதற்காக மேற்கொண்ட உழைப்பும் அதனையே முழுமூச்சாகக் கொண்ட ஒரு வெறித்தனமான இலக்கு நோக்கிய சிந்தனையும் செயற்பாடும் என்பன அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்படுபவையாக அவரது இறுதிக் காலம் வரை இருந்தது.

1960களில் முழுவீச்சுடன் எழுச்சிகளைத் தொடக்கிய ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி "நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்" என்ற தனித்துவக் கோட்பாட்டுடன் கூடிய முற்போக்குச் சிந்தனைகொண்ட ஈழத்துப் படைப்பாளிகளிகளால் முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் முன்வரிசைக்காரர்களாக அணிவகுத்து நின்றவர்களுள் டொமினிக் ஜீவா தனித்துவம் கொண்டவராக பேச்சால், செயலால், எழுத்தால் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை சார் கலகக் குரலுக்குரியவராகத் தன்னை இடதுசாரிக் கொள்கைகளுள் பிணைத்துக்கொண்டு செயற்பட்டவர் டொமினிக் ஜீவா. அவரைப் பல வகையிலும் விமர்சித்த பல சித்தாந்தவாதிகள் கூட டொமினிக் ஜீவாவின் ஓர்மத்தை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

1960 களில் அவர் எழுதி இந்தியாவில் பதிப்புச் செய்யப்பட்ட 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டலத்தால் தமிழ் நூலுக்கென முதல் விருது வழங்கப்பட்டபோது., புருவத்தை உயர்த்தி வியந்தவரும் உண்டு. முகம் சுழித்து வெறுப்பைக் கொட்டியவர்களுமுண்டு. அது வரலாறு.

மெத்தப் படித்த தமிழ் பண்டிதர்களாலும் சரி, தமிழ்க் காவலர்கள் என அக்காலத்தில் தம்மை இனம்காட்டித் திரிந்தவர்களாலும் சரி, சாதிக்க முடியாத பலவற்றை ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும் அதன் தனித்துவ எழுச்சிக்காகவும் டொமினிக் ஜீவா செய்தார் என்பதை ஈழத்து இலக்கிய வரலாறு பல அத்தியாயங்களில் பதிவு செய்தே தீரும்.

ஒரு சஞ்சிகையை ஆரம்பித்துத் தொடர்ச்சியாக நடத்துவதென்பது ஈழத்து இலக்கியப் பரப்பில் எத்தனை கடினமான விடயம் என்பது அனைவரும் அறிந்ததே. எப்படியோ சில மாதங்களுக்கோ சில வருடங்களுக்கோ ஒரு இதழை ஆரம்பித்து நடத்திவிட்டுத் தாமே ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் திருப்புமுனைகளுக்கு ஒப்பானவர்கள் என ரகசியப் பிரகடனம் செய்பவர்கள் பலருண்டு. அவர்கள் மத்தியில் மல்லிகை என்ற இதழைப் பல நெருக்கடிகளுக்கும் எரிச்சலுக்கும் விமர்சனங்களுக்கும் மத்தியில் "50ஆவது ஆண்டை நோக்கி.." என்ற இலக்குடன் அவர் வெளியிட்டு வந்த விதம் அளப்பரியது. அதற்காக அவர் கொண்ட அயராத உழைப்பு மற்றும் அதற்கு அடிப்படையான அவரது தன்னம்பிக்கை போன்றவற்றை இன்னொரு இலக்கியவாதியிடம் நாம் காண முடியாது.

சொந்தப் படைப்பு ஒன்றை நூலாக வெளியிடுவதற்கே ஒரு படைப்பாளி பகிரதப்பிரயத்தனம் எடுக்கும் நிலையில் மல்லிகைப்பந்தல் என்ற வெளியீட்டு அமைப்பின் மூலம் எத்தனையோ சகோதரப் படைப்பாளிகள் நூல்களை வெளியிட்டிருப்பார்? அசுர சாதனையல்லவா அது?


அதுதான் வெறுமனே யோசேப் டொமினிக் என்ற தொழிலாளியை டொமினிக் ஜீவாவாகவும் மல்லிகை ஜீவாவாகவும் சாகித்ய ரத்னா ஜீவாவாகவும் மேன்மை பெற வைத்தது.

பல்கலைக்கழகம் அவரை இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கத் தவறியதன் மூலம் தன்னைத் தாழ்த்திக் கொண்டது.

ஆனால் அவரது படைப்புக்களைப் பாடநூலாகப் பரிந்துரைத்ததன் மூலம் மதுரைப் பல்கலைக்கழகம் அவருக்கு உயர் கௌரவத்தை வழங்கியது. அதுவும் வரலாறே!

அடுத்து வரும் தலைமுறை வெற்றுக் காழ்ப்புணர்வுகளைத் தவிர்த்துவிட்டு ஜீவாவின் படைப்புக்களை, அவரது உழைப்பை, அவரது செயற்பாட்டைப் படிக்க வேண்டும். ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு விசுவாசத்தோடு உழைத்த ஒருவர் என்ற வகையில் காலந்தோறும் கௌரவிக்கப்பட வேண்டியவர் ஜீவா.

### இன்றைய கருத்தோவியம்




# சுதந்திரதினம் எமக்கு கரிநாளே! உறவுகள் சங்கங்கள் தீர்மானம்

## உணவு தவிர்ப்புப் போராட்டங்களுக்கும் அழைப்பு

**வவுனியா, ஜன. 31**

**எதிர்வரும் 4ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள இலங்கையின் சுதந்திரதினத்தை, கரிநாளாகக் கடைப்பிடிக்கவுள்ளோம் என கடத்தப்பட்டு, கையளிக்கப்பட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கங்கள் அறிவித்துள்ளன.**

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்துமாறு கோரி, வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த உறவுகள், ஒவ்வொரு மாவட்டங்களிலும் தொடர் போராட்டங்களை முன்னெ டுத்து வருகின்றனர். அவர்களுடைய போராட்டங்கள் நான்கு ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே இடம்பெறவுள்ள இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாகக் கடைப்பிடிக்க உறவுகள் தீர்மானத்துள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த உறவுகள் சங்கத்தினர்;

எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம். அன்றைய தினம் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. நான்காம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் முன்பாக அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம். போராட்டத்துக்கு பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள், மற்றும் தமிழ்த் தேசியத்துக்காகப் பாடுபடுகின்ற அனைவரும் ஒற்றுமையாகக் கலந்துகொண்டு நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கும் எமது போராட்டத்தை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவைச் சேர்ந்த உறவுகள் தெரிவித்ததாவது;

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் கிடைக்கும் வரை எங்களுக்கு சுதந்திரம் இல்லை. சுதந்திர தினத்தை நாங்கள் கரிநாளாக கறுப்புப்பட்டி அணிந்து கடைப்பிடிக்கவுள்ளோம். உணவு தவிர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளோம்.

எதிர்வரும் ஐ.நா சபையின் அமர்வில் எங்களுக்கான தீர்வு கிடைக்கவேண்டும். எதிர்வரும் ஐ.நா அமர்வில் இலங்கை அரசுக்கு எந்த கால நீடிப்பும் கொடுக்காமல் எங்களுக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும் அத்துடன் சர்வதேச விசாரணைதான் வேண்டும் - என்றனர். (ப-19,110)

# பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகின்றது அமைச்சரவை!

கொழும்பு, ஜன.31

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ள முடிவுகள் தொடர்பில் பிரதான தரப்புகள் கழுகுப் பார்வையை செலுத்தியுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டுக்கோ அல்லது பன்நாட்டு நிறுவனத்துக்கோ வழங்குவதற்கு அரச பங்காளிக்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, தூய ஹெல உறுமய உள்ளிட்டவை எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. அரசுக்கு சார்பான அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நாளை அமைச்சரவை கூடுகின்றது. (எ-44)

## மரண அறிவித்தல்



### குமாரசுவாமி சரஸ்வதி

யாழ். சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும் கொழும்பு, சரவணையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசுவாமி சரஸ்வதி நேற்று (30.01.2021) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், சின்னத்தம்பி குமாரசுவாமி அவர்களின் பாசமிகு மனைவியும், தயானந்தன், சதானந்தன், காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் குகநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முல்லை, சியாமளாதேவி, திலகதிவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தவநாயகம், சாந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தஷ்யன், ஜயன், சஜன், சசிகாந், பங்கஜன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01-2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**சரவணை மேற்கு, புளியங்கூடல், ஊர்காவற்றுறை (சின்னமடு) பாடசாலைக்கு அருகில்**

**தகவல்:**
**தயானந்தன்** (மகன் - Mobile: 004 797 530 560 Home: 004 722 167 104)
**சதானந்தன்** (மகன் - Mobile 0094 703 693 667)
**குகநேசன்** (மகன் - Mobile 0044 7563 896 360)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1940



மறைவு 21 . 01 . 2021

### திரு. சின்னத்துரை கணேசபிள்ளை

(ஓய்வுபெற்ற M.L.T. யாழ்ப்பாணம், இரத்தினபுரி, நோர்வே வைத்தியசாலை)

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நோர்வே, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சி.கணேசபிள்ளை அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Tea maker சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகம்மா (சிங்கப்பூர்) தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் (ராசாத்தி) அன்புக் கணவரும், ஜனனி, கஜனி, ஓங்காரன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், உதயகுமார், சங்கரபோதி, நளினா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபினாஷ், யாழினி, தாமிரா, அரன், மீரா, இஷானா, லஷ்மி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கண்மணி மற்றும் கணேசம்மா, மகேஸ்வரி, சிவமயம், சரஸ்வதி, சத்தியதேவி, பத்மினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மிகவும் எளிய முறையில் 22.01.2021 அன்று கனடா Funeral Home இல் வைக்கப்பட்டு குடும்ப உறவினர் மத்தியில் தகனம் செய்யப்பட்டது என்பதனை மிகவும் ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**சி. சிவமயம் (சகோதரன் - கனடா)**
**011 2 714 841**

## மரண அறிவித்தல்

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" யோவான் - 11:25

பிறப்பு 27 . 05 . 1937



இறப்பு 29 . 01 . 2021

### செல்வி லில்லிக்கிறேஸ் மரிசிலின்

பத்தாவத்தை இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லில்லிக்கிறேஸ் மரிசிலின் கடந்த (29.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மரிசிலின் - மேரியன்னா தம்பதியரின் புதல்வியும், மேரி குயின் ரோஸ் (பெரியபிள்ளை), காலஞ்சென்ற பிலிப்பையா - குணரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சாமிநாதர், ஆன்மேரிரீற்றா ஆகியோரின் மைத்துனியும், மேரி ஜயரின் ஜெம்மலர் (கனடா), மேரி அலன் ரோஸ் (நெதர்லாந்து), மெரி ஜெரிஸ், பிலிப் ஜெயறட்னம், பிலிப் ஸ்ரனிஸ்லஸ், காலஞ்சென்ற யூறிஸ்ரா, ஜோதிராணி (சூட்டி), ஜெறட் ஜன்சி (றவி), ஜெகதீஸ்வரி, சுஜிவன், ராகினி ஆகியோரின் பெறா மக்களும், யூட், காலஞ்சென்ற குயின்டஸ் நியுட்டன், ஜெனி, எட்மன் றெனாட் (ஜெறுட்), பிறைட்டன், பாமினி, யோசப் கியோமர் (கனடா), காலஞ்சென்ற J.S.புவிராஜ் சிங்கி, முத்துலிங்கம், மரிய கொறற்றி, பிறிஸ்கா ஆகியோரின் மருமக்களும், குயின்டஸ் (கனடா), பிறின்டஸ் (கனடா), வலன்டஸ் (கனடா), ஜென்டஸ் (கனடா), ரைட்டஸ் (கனடா), நிலஸ்ரா டிலானி (நெதர்லாந்து), சாமிலஸ் புவிராஜ் சிங்கி (நெதர்லாந்து), லெமன் புவிராஜ் சிங்கி (நெதர்லாந்து), பிறின்சிலா, சர்மிலா, ஜின்சியா (ஜீன்), வின்சலோ, மேசி, பெனிசியா, வலன்ரைன், டொறின், லதுஜன், பிரசாந், துஷாந், டிலக்சி, சர்மி, ஜென்சிகா, ஜெனிஸ்ரன், மரின்சா, சோபிகன், சக்சனா, சஞ்சை, வினில், கசோலினா, கபிசா, அன்ரன் யோகராசா, ஜஸ்ரின் ஆகியோரின் பேர்த்தியும், இசபலா, அலெக்சாண்டர், ஜெகப், சோபியா, டில்சான், சனா, சியான், மாயா, கெவின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத்திற்கான இரங்கல் திருப்பலி 01.02.2021 திங்கட்கிழமை செந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் தேவாலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**பத்தாவத்தை, இளவாலை.**
**0777 595335, 077 532 8283**

## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 12 . 1990



உதிர்வு 28 . 01 . 2021

### கௌரீஸ்வரன் ஸ்ரீகாந்

உடுவில் தெற்கு மானிப்பாய் ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கௌரீஸ்வரன் ஸ்ரீகாந் கடந்த (28.01.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் கௌரீஸ்வரன் ஸ்ரீரதி தம்பதியரின் அன்பு மகனும், கௌசிகன், கௌரிகாந், துளசிகன், ஜனதர்சினி, ஜங்கரமதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கஸ்தூரி, தாட்சாயினி, சந்துரு (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆதித்தின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**076 939 6981**
**076 561 8444**

# கொரோனாவை விரட்ட யாழ்ப்பாணத்தில் வழிபாடு

கிளிநொச்சி, ஜன.31

இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடு நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள வழிபாட்டின் நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சதா மாகாலிங்கசிவக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன. (ஐ)

# மாணவர்களுக்கு யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.31

வயாவிளான் மத்திய கல்லூரியில் இவ்வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கவுள்ள மாணவர்களுக்கான மனவளக்கலை யோகா காயகல்பப் பயிற்சிகள் கல்லூரியின் கலைக்கூடத்தில் அண்மையில் நடைபெற்றன. யாழ் மணடல மனவளக்கலை துணைப்பேராசிரியரும் பழைய மாணவியுமான திருமதி அ.வேதநாயகம் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினார். (வ-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா தேவராணி

கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா தேவராணி 30.01.2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா பத்தர் நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற விக்கிரமசிங்கம் சௌந்தரிப்பிள்ளை (மட்டக்களப்பு-அன்னமலை - கல்முனை) ஆகியோரின் அன்பு மருமகளும், வி.செல்வராசாவின் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் - யாழ் தொழில்நுட்பக் கல்லூரி) அன்பு மனைவியும், திரவியலட்சுமி, காலஞ்சென்றவர்களான தர்மகிருஷ்ணர், யோகேஸ்வரி மற்றும் சரோஜாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
கணவர் - வி.செல்வராஜா
T.P: 021 205 2405

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 09 . 1957



மறைவு 30 . 01 . 2021

### வின்சன் ஸ்ரனிஸ்லோஸ் (ரஞ்சன்)

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன் ஸ்ரனிஸ்லோஸ் நேற்று (30.01.2021) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை திரேசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற வின்சன் ஜெறோட் அன்னப்பா, எலன் திரேசா, லீலாவதி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற றீற்றா ஜெசி (பவா) வின் அன்புக் கணவரும், இந்திரா, வசந்தி, மோகன், அசோகன், சாந்தி ஆகியோரின் அன்பு சகோதரனும், டொமிற்றிலா, டொடன்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிக்குமார், வினோத் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற றொஷானி, யூட் றொபின்சன், றொபினா, அஸ்வின், சவோறின் ஆகியோரின் அன்புப் பேரனும், ரவி, றொசிற்றா, ராதா, ரங்கா, றெமி, ஜெரிக்கா, ஜெனி ஆகியோரின் அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி 31.01.2021 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக சீவோன் தேவாலய சேமக்காலை வசந்தபுரத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:குடும்பத்தினர்.
077 6354 168

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1952



இறப்பு 23 . 01 . 2021

சுழிபுரம் மேற்கு-பிரித்தானியா

### திருமதி வயித்திலிங்கம் செல்வராணி

யாழ் சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியா, நுவரேலியா, மாத்தளை, சுழிபுரம், பிரித்தானியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி வயித்திலிங்கம் அவர்கள் 23.01.2021 சனிக்கிழமை அன்று பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற இராமலிங்கம், பரமேஸ்வரி (மலேசியா, நியுசிலாந்து) தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானியார் பொன்னம்பலம் செல்லம் தம்பதியினரின் இளைய மருமகளும், காலஞ்சென்ற வயித்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், இராகுலன், தயாளினி, காயத்திரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தினி, சிவகணேஷ், சுரேன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவனேஸ்வரன், ரவி, கீதா - உஷா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவீன், ஷாமின், நவீனா ஆகியோரின் அத்தையும், ஏட்ரியன், கரண் ஆகி யோரின் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், ஞானேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, குகனேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், சிவசிதம்பரம், பரமேஸ்வரன் மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் மருமகளும் மற்றும் காலஞ்சென்றவர்களான மார்ஷல், இலட்சுமியார், பூரணம் (பெரியபிள்ளை), பரமலிங்கம், கார்த்திகேசு, பூமாதேவி மற்றும் நோறின்மகேஸ், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான விக்னேந்திரன், முரளிகிருஷ்ணா, யசோதா, பிரகாஸ் மற்றும் ஞானேஸ்வரி, சிவசண்முகமூர்த்தி, சிறீதரன், வசந்தி, கோபிகிருஷ்ணா, மயூரன், ரமேஷ், கோணேஷ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் காலஞ்சென்ற சிவசீலன் மற்றும் ஷாமினி, சுரேஷ், ஷ்ரின், ஒத்மான், நனி, ரோஸ், கமால், ரோஸ்மான், ஷீலா, சிவதாஸ், சங்கர், சிராணி, சிவரங்கன், சங்கீதா, விதுஷா, விஜயாளன் ஆகியோரின் மைத்துனியும், சனா, இலக்கியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.01.2021 ஞாயிற்றுகிழமை பிரித்தானிய நேரம் காலை 08.00 மணிக்கு (இலங்கை நேரப்படி மதியம் 01.30) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவம் ஏற்றுக்கொள்ளவம்.

தொடர்புகளுக்கு
இராகுலன்-மகன் : +447802604567

தகவல்: குடும்பத்தினர்
சுழிபுரம் மேற்கு.

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 11 . 1930



இறப்பு 29 . 01 . 2021

### பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் ஓட்டத்தை முடித்து விட்டேன்; விசுவாசத்தை காத்து கொண்டேன். நேரிய வாழ்விற்கான வெற்றிப் பரிசை என் ஆண்டவர் எனக்குத் தருவார் (2திமொத். 4:7.8)

பத்தாவத்தை இளவாலையை பிறப்பிடமாகவும், விதான்ஸ் வீதி, பாண்டியன்தாழ்வினை வதிவிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா (29.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை மரிய ஞானரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிலோமினாவின் ஆருயிர் கணவரும், எட்வினா (கனடா), ராஜினா (ஜேர்மனி), அருட்சகோதரி வேஜி (திருச்சிலுவை கன்னியர்), ராஜநாதன் (கனடா), அருட்தந்தை எட்வினாதன் (நிதியாளர், ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜோசப் நவரட்ணம், பிரான்சிஸ் சேவியர், அருட்சகோதரி ஹயசிந் (திருக்குடும்பக்கன்னியர்) மற்றும் விக்டர் இம்மானுவேல் (பிரான்ஸ்), மேரி திரேசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அன்ரன் பரமநாயம் (கனடா), ஜோய் (ஜேர்மனி), பெலிசியா (நிறோ) (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், றெஜினா (இத்தாலி), திரேசம்மா (கனடா), கமலா (லண்டன்), இம்மானுவேல், காலம்சென்றவர்களான லூயிஸ் அல்பிரட், செல்வநாயகம், குணநாயகி, அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம் மற்றும் லூட்ஸ் (கனடா), பேனடேற் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரோலினா (கனடா), மிஸேலா (ஜேர்மனி ), ஷெரினா ( கனடா), எட்றியன் (கனடா), அஸ்லின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவருடைய பாண்டியந்தாழ்வு இல்லத்திலிருந்து பெப்ரவரி மாதம் 1ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு, முற்பகல் 11.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியின் பின்பு அவரது உடல் பத்தாவத்தையில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3.30 மணியளவில் சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
1. அருட்தந்தை எட்வினாதன் (மகன்) - 94772487800
2. அருட்சகோதரி வேர்ஜி (மகள்) - 94773566646
3. எட் வினா (மகள்) - 16476243074 (கனடா)
4. ராஜினா (மகள்) - 491794281545 ( ஜேர்மனி)
5. ராஜநாதன் (மகன்) - 16477161587 (கனடா)

தகவல்:
குடும்பத்தினர்

# வைத்தியசாலையிலிருந்து பேசிய அமைச்சர் பவித்ரா

கொழும்பு, ஜன.31

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் தான் சிகிச்சைபெற்று வருவதால், கொரோனாத் தடுப்பூசி ஆரம்ப நிகழ்வில் தன்னால் பங்கேற்க முடியவில்லை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

எனினும், தடுப்பூசியை வழங்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவால் வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசியை முதலில் சுகாதாரப் பிரிவுக்கும், பாதுகாப்புப் பிரிவுக்கும் வழங்க கிடைத்தமையை எண்ணி தான் மகிழ்ச்சி அடைகின்றேன் எனவும் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தடுப்பூசி திட்டத்தை ஆரம்பித்ததன் ஊடாக, கொரோனாத் தடுப்பு வேலைத்திட்டம் வலுவடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி, கொரோனாத் தடுப்பூசி வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தான் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்திருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பவித்ரா வன்னியாராச்சி, ஹிக்கடுவ பகுதியிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையமொன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

அதைத் தொடர்ந்து, அவர் இரத்மலானை பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். பின்னர் அவர் அங்கிருந்து கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்தார். (எ-22)

# தொலைத்தொடர்பு வலையமைப்பு சீரில்லை

## உடையார்கட்டு மக்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு உடையார்கட்டு பிரதேசத்தில் தொலைத்தொடர்பு வலையமைப்பு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு தாருங்கள் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

உடையார்கட்டு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களான மூங்கிலாறு, தேராவில் குரவில், இருட்டுமடு, சுதந்திரபுரம், வெள்ளப்பள்ளம் போன்ற பிரதேசங்களில் தொலைத் தொடர்பு வலையமைப்புகள் தெளிவாக இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக தொலைபேசிகளை சீராக பயன்படுத்தி தொடர்புகளைப் பேண முடியாமல் உள்ளது. இணையத்தள சேவையையும் சிறந்த முறையில் பெற முடியவி ல்லை. சுமார் பத்து வருடங்களாக இந்தப் பிரச்சினை தொடர்கின்றது. நவீன தொழில்நுட்ப உலகில் எமது பிரதேசங்கள் மட்டுமே இவ்வாறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது இணைய வழிமுறையைப் பயன்படுத்த முடியாமல் உள்ளனர். கொவிட் -19 தொற்றுக் காரணமாக மாணவர்கள் தற்போது இணையத்தைப் பயன்படுத்தி கல்வியையும், கல்விக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள முடியாமல் உள்ளமை சுட்டிக்காட்டியபோதும் நிலையான தீர்வு கிடைக்கவில்லை. எனவே இது தொடர்பில் உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றனர். (ஐ-ரி2)









# கோத்தாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராம்!



கொழும்பு, ஜன.31

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைகள் சிறப்பாவையாக அமையும் பட்சத்தில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவேன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

நான் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியிலேயே அங்கம் வகிக்கின்றேன். அந்தக் கட்சி எடுக்கும் முடிவுகளின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா, வெளியேறுவதா என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும். கோத்தாபய ராஜபக்ச எனது சகோதரர் போன்றவர். ராஜபக்சக்களுடன் எமக்கு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மஹிந்த ராஜபக்சவே இந்நாட்டிலுள்ள புகழ்மிக்க அரசியல்வாதியாவார். எனது பிறந்தநாளன்று அவரே என்னை முதலில் வாழ்த்துவார். நாமும் அவருக்கு உரிய வகையில் கௌரவம் செலுத்துவோம்.

அதேவேளை, ரணதுங்க குடும்பத்தினரை இரண்டாக்கியவதற்கும் ராஜபக்ச குடும்பம் பொறுப்புக்கூறவேண்டும். எனது குடும்பத்தில் அரசியல் ரீதியில் சிற்சில பிரச்சினைகள் இருந்தாலும் உறவு என்பது முழுமையாக நீங்கவில்லை என்பதனையும் கூறியாகவேண்டும். என்னை எவரும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்த முடியாது. இது அரசியல் தலைவர்களுக்கும் தெரியும்.

நான் நல்லவர்களுடன் பயணிப்பேன். எனவே, கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை சிறந்ததெனில் நாளை அவருக்கும் ஒத்துழைப்பு வழங்குவேன். பதவிகளை எதிர்பார்த்து அரசியல் நடத்துபவன் நான் அல்லன். என்றார். (எ-44)

சட்டவிரோத

## மரக் கடத்தலில் ஈடுபட்டவர் கைது!

வவுனியா, ஜன.31

சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட நபர் ஒருவரை வவுனியா மடுகந்த விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

ஹெப்பற்றிக்கொல்லாவை காட்டுப் பகுதியில் மரங்கள் கடத்தப்படுகின்றன என்று விசேட அதிரடிபடையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் அந்த நபரைக் கைதுசெய்ததுடன், மரத்தை வெட்டுவதற்கு பயன்படுத்திய இயந்திரத்தையும் கைப்பற்றினர்.

இதேவேளை அவர்களால் குறித்த பகுதியில் அறுக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட தயாராகவிருந்த மூன்று லட்சம் ரூபா பெறுமதியான மரங்களையும் மீட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஹெப்பற்றிக்கொல்லாவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ற-110)

## ஈஸ்டர் தாக்குதல் ஆவணங்கள் சமர்ப்பிப்பு

ஈஸ்டர் ஞாயிறு அன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கின் ஆவணங்கள், சட்டமா அதிபரிடம் சமர்பிக்கப்பட்டுள்ளன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 8 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்க, நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, ஜனவரி 31 ஆம் திகதி (இன்று) கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் சட்ட நடவடிக்கை எடுப்பார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

**திருமண சேவை**
உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள். விரைவாக நிறைவேற்றிக்கொடுக்கப்படும்.
(Phone) 077 078 3832 (Viber) 077 964 9245

**Spoken English, சிங்களம்**
அடிப்படை அலகிலிருந்து எழுத, வாசிக்க பேச்சுப் பயிற்சியுடன் பூரண தமிழ் விளக்கத்துடன் மிகக் குறுகிய காலத்தில் தனியாக/சிறு குழுவாக கற்பிக்க புதிய வகுப்புக்கள் சுகாதார நடைமுறைக்கேற்ப ஆரம்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம்-01.02.2021-5 Pm
Lect By. SKB. மனோகரன் -ஆசிரியர், அச்சுவேலி.
T.P -077 725 4627

**காணி விற்பனைக்கு**
சரசாலை தெற்கு, சாவகச்சேரி கனகம் புளியடிச் சந்தியில் இருந்து புத்தூர் வீதி, கமலாசனி பாடசாலைக்கு பின்புறமாக 20 பரப்புக்காணிவிற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
077 844 0824

**வெள்ளவத்தை**
**தொடர் மாடி வீடு விற்பனைக்கு**
இரண்டு அறை, சமையலறை, Hall, இரண்டு குளியலறை COC, Deed, உடைய தொடர் மாடி வீடு விற்பனைக்கு முற்றிலும், குளிருட்டப்பட்டது (சமையலறை தவிர்த்து) தனிப்பட ஒதுக்கப்பட முற்றிலும் அடைக்கப்பட்ட வாகன தரிப்பிடம்.
விலை 20.5 மில்லியன் வங்கி கடன் எடுக்க முடியும் உடன் காசு விஷேட விலைக்கழிவு
தொடர்பு: 0772 647 426

**வகுப்பு (கணிதம்)**
பல வருட அனுபவமிக்க ஆசிரியரால்
தரம்: 6 முதல் O/L வரை
கணிதம் (கடந்த ஆண்டில் விடுபட்ட முக்கிய பகுதிகளுடன்) வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
077 937 0228

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த உத்தரம் 2 ஆம் பாதம், 12 ல் செவ்வாய், 44 கிரகபாவம் உள்ள Civil Engineer மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.
077 195 3459
(பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்)

**சாவகச்சேரி**
**வர்த்தக கட்டிடம் வாடகைக்கு**
கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள 2500 சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட வர்த்தக கட்டிடம் வாடகைக்கு உண்டு.
வங்கிகள், சுப்பர்மார்கட், காட்சியறைகள், களஞ்சியசாலைகளுக்குப் பொருத்தமான இடம்.
தொடர்பு: 0776139559, 0777589690

**சேவை**
**ஈஸ்வரன்**
பயணிகள் போக்குவரத்து சேவை,
பொதிகள் போக்குவரத்து சேவை
இன்று முதல் வழமைக்கு
பொதிகள் போக்குவரத்து
ஆசன பதிகளுக்கு
0777 806574
0777 806573
0777 806583

**மணமகள் தேவை**
அவுஸ்திரேலியா வயது 35 கிறிஸ்தவம் (NRC) எவ்வித தீய பழக்கவழக்கங்கள் அற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ்காணும் Email Address தொடர்புகொள்ளவும்
kane85joshua@yahoo.com

**பட்டா வாடகைக்கு தேவை**
பட்டா, மகேந்திரா (Truck) மாதாந்த வாடகைக்கு தேவை. (ரைவர் இன்றி)
077 362 6230

**அறை வாடகைக்கு**
யாழ். கோயில் வீதியில் ஆண் ஒருவருக்கு அறை வாடகைக்கு உண்டு.
077 640 8830

**அறை தேவை**
யாழ். பல்கலைக்கழக சூழலில் பல்கலைக்கழக வைத்தியதுறை மாணவனுக்கு குளியல் அறையுடன் இனைந்த அறை வாடகைக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது.
077 765 0666

**காணி உடன் தேவை**
யாழ் நகரப்பகுதியை அண்டிய இடத்தில் 6 பேர்ச்ஸ் காணி விலைக்கு உடன் தேவைப்படுகின்றது
077 765 0666

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய பண்ணை ஒன்றுக்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பண்ணையோடு சேர்ந்த சிறிய சிற்றுண்டிச் சாலைக்கு ஆணும், பெண்ணும் குடும்பமாகத் தேவை. தங்குமிடம் உணவு இலவசம்
077 998 1896,076 037 4643

**வீடு வாடகைக்கு**
கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக 2 அறை, Hall. Kirchen, 2 கழிவறைகளுடன் வீடு வாடகைக்கு உள்ளது. University Students விரும்பத்தக்கது
Contact No.
077 174 7994, 077 155 2851

**வாடகைக்கு வீடு தேவை**
யாழ்நகரில் சென்ஜோன்ஸ் பாடசாலைக்கு அண்மையில் மூன்று அறை வாத்துரூம், முற்றம் உள்ளதாக இரண்டு மயிலுக்குள் கார் தரிப்பிட வசதி உள்ள வீடு வாடகைக்குத்தேவை.
077 723 9591, 077 557 4325

**மணமகள் தேவை**
1. இந்து கௌரவ டொக்டர் M.B.B.S (1990)
2. 1992 பட்டதாரி B.E (வெளிநாட்டு மணமகள்) தேவை அல்லது உள்நாட்டில் தொழில்வழங்குபவர்கள், சிறிய முதலீடும் உண்டு. (இருவருக்கும் செவ்வாய் தோசம் இல்லை)
074 172 3158

**காணி விற்பனைக்கு உண்டு**
தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு நோ எதிர்புறமாக உள்ள சதுர காணி விற்பனைக்கு, வியாபார ஸ்தலங்களுக்கு உகந்தது. இரண்டே கால் பரப்புளவு (25 perches) சுற்றிவர முள்வேலி பங்கு கிணறு மற்றும் இரும்பு படலையுடன் உள்ள காணி. அதிக விலை கோருவோர்க்கு கொடுக்கப்படும்.
தரகர் வேண்டாம் தொடர்புகளுக்கு: 0773 623 542

**சேவை**
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.
AAA Gold Center
076 568 4346

**IELTS- AI**
இப்பொழுது மீசாலையில் IELTS Al (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கானது) அனுபவம் வாய்ந்த (UK Trainee) ஆசிரியரினால் கற்ப்பிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
077 972 3202
077 323 3200
A9 Road, Aigy Kadai, Meesalai

**உடனடி வேலை வாய்ப்பு**
வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆண், பெண் O/L தகைமையுடன் வட மாகாணம் முழுவதும் தேவை. காப்புறுதி அனுபவம் விரும்பத்தக்கது.
T.P: 077 3020 874, 0777 130 025

**மாடி வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**
இல.14, கமிலா லேன் ஜின்னா றோட், மானிப்பாய் வீதி, 1 பரப்பு மாடிவீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
075 991 0060

**வீட்டு வேலைக்கு பெண் தேவை**
நாவலர் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு ஒரு பெண் தேவை. தொடர்புகளுக்கு: 077 860 6934

**வணிகக் கல்வியும் கணக்கீடும்**
தரம் 10 & 11 (O/L) வணிகக்கல்வி, பொருளியல் } உயர்தரம் (A/L) / தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல தனி மற்றும் குழு வகுப்புக்கள்
BBA (Hons) Acc.Spl, AAT தகைமையுள்ள ஆசிரியரால் நியாயமான கட்டணத்தில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 372 1260

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ 41 வயது சொந்த மாக தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்பில்லை.
தொடர்புகளுக்கு: 077 905 8615
(வைபர் & வாட்ஸ் ஆப்)

**விற்பனைக்கு**
யாழ் பிறவுன் வீதியில் 6 பரப்புக் காணி, யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் ரக்கா லேன் 8 பரப்பு வீடும், யாழ் நல்லூர்க்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ் இருபாலை சந்திக்கு அண்மையில் 1 1/2 பரப்பு காணியும், யாழ் நல்லூர் முன்வீதியில் 2 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 723 2535

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**
**பிரிவு-31**
க.பொ.த (உ/த)- 2020 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகிறன்றன.
★ English Courses:
Foundation Diploma / Diploma in English / Spoken English
★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ்
★ அடிப்படையிலிருந்து
★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.
★ IELTS / LIFE SKILLS - A1,B1
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5
● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room
IPS
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229 / 076 685 2529

**காடைக் குஞ்சுகள் காடை இறைச்சி**
1 நாள் குஞ்சு -25/=, 10 நாள் குஞ்சு -55/= , 20 நாள் குஞ்சு -85/=, 30 நாள் குஞ்சு -100/=, 45 நாள் குஞ்சு -140/=, காடை இறைச்சி (உயிர்) 1 Kg 700/= , முட்டை - 6/= தொடக்கம் 10 /=
பண்ணாகம் 077 332 2433

CMYB


# கிளிநொச்சியில் ஏழு வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

கிளிநொச்சி, ஜன.31

சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி கிராமத்துக்கு ஒரு வீடு எனும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடந்த 2020ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட ஏழு வீடுகள் நேற்றுமுன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட 2 வீடுகளும், கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்ட ஒரு வீடும், கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட 4 வீடுகளுமாக ஏழு வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. (ப-6)

# பொலிஸாருக்கு இன்று தடுப்பூசி




கொழும்பு, ஜன.31

இந்தியாவால் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா கொவிட்-19 தடுப்பூசிகள் நாளை (இன்று) பொலிஸ், மருத்துவமனையின் நிர்வாகப்பிரிவினருக்கு வழங்கப்படவுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அஸ்ட்ராஜெனகா கொவிட்-19 தடுப்பூசிகள் மருத்துவப் பிரிவினருக்கும், இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை நாளை (இன்று) பொலிஸ், மருத்துவமனையில் நிர்வாகப்பிரிவினருக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கண்டி குண்டசாலை பகுதியில் அமைந்துள்ள பொலிஸ், மருத்துவமனையின் நிர்வாகப்பிரிவினரு க்கும் பெப்ரவரி 2 ஆம் திகதி தடுப்பூசி வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சதானந்தம் (சவா)



இணுவில் கிழக்கு கருகம்பனையை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன்கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சதானந்தம் நேற்று (30.01.2021) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், நடராஜா- மங்கையற்கரசி (அமரர்), அமரர் சுப்பையாபிள்ளை-சரோஜினிதேவி, சிவப்பிரகாசம்-ஆயிலியம் (அமரர்) விஜயசண்முகம் - ஜெயமணி (நீர்கொழும்பு) (அமரர்) ஞானானந்தம் - சரோஜினிதேவி, சச்சிதானந்தம் - பத்மலோஜினி (நீர்கொழும்பு) சிவலிங்கம் - அன்னலட்சுமி, அருளானந்தம் - சசிகலா (Canada), சபாகுணசிங்கம் - புஸ்பராணி (Canada), சோமசுந்தரம் - செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருஞானசெல்வம் - தவஜோதி அகிலாண்டநாயகி (அமரர் - சிவனேசன் திருச்செந்தூர்நாதன் (அமரர்) - சிவஞானசோதி - வளர்மதி (Swiss) அமிர்தகலைவாணி - ஜீவானந்தன், திரிபுரநாமதன் - ராதா (Swiss) அரியமலர் - கணநாதன் (Londan), கதிர்காமலிங்கம் - தமிழினி (London), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் இடம்பெற்று, காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் கிழக்கு,**
**காரைக்கால் சிவன்கோவிலடி,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 216 8635**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 11 . 08 . 1937



மறைவு 01 . 01 . 2021

### அமரர் தம்பிப்பிள்ளை நமசிவாயம்

**(நவஜீவன் போட்டோ ஸ்தாபகர்)**

2021.01.01 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மற்றும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்து கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட மற்றும் இணைய வழிகள் ஊடாக அஞ்சலி ஆறுதல்க்ள தெரிவித்தவர்கள் மற்றும் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர ் கள் நண்பர்கள அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் சிறுப்பிட்டி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

**சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.** **குடும்பத்தினர்.**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி - யாழ்ப்பாணம்

### தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு மற்றும் பங்குபற்றுநர்களுக்கான சான்றிதழ் வழங்கல்

க.பொ.த (உ/த - 2020) பரீட்சைகளிற்கு தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்க்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையோருக்கான மேற்படி நிகழ்வானது இடம்பெறவுள்ளது.

திகதி : 06.02.2021, சனிக்கிழமை
நேரம் : 9.00 AM - 11.30 AM
இடம் : நிறுவன கேட்போர் கூடம்

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் / ஆர்வ முடையவர்கள் 05.02.2021 க்கு முன்பாக பதிவு செய்வது அவசியமாகும். அல்லது 06.02.2021 சமூகமளித்தல் வேண்டும்.

- **பதிவுக் கட்டணம் இலவசம்.**

**இணைப்பாளர்**
**தொழில்சார் கற்கைகள் நிறுவனம்**
**திருநெல்வேலி.**

**T.P: 077 602 1794**
அல்லது
**076 685 2529**

## Vacancy Northern Central Hospital (Private) Limited

Northern Central Hospital is one of the largest medical institutions in Jaffna providing quality patient care for the needy people in the Northern Srilanka.

We are looking for skilled and energetic candidates for the following position.

**Assistant Pharmacist - Trainee**

- G.C.E O/L passed with English, Science and Mathematics
- Passed G.C.E A/L Examination in Bio/ Maths stream
- Above 21 Years of age
- Computer Literacy
- Prior Experience in the relevant field will be preferred

ATTRACTIVE RENUMERATION PACKAGE WILL BE OFFERED TO THE SELECTED CANDIDATES

Interested candidates may forward their CV before 8th January 2021, by e-mail or post indicating the position applied for on the top left- hand corner of the envelope.

HR Department
Northern Central Hospitals (Private) Limited
No: 342, Palaly Road, Jaffna.
Contact Number- 021 221 9988 / 021 721 7324
E-mail : northernhrm@gmail.com

## மரண அறிவித்தல்

### திருமதி நீலாவதி லோகேஸ்வரன்



மாவத்தை, சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாவதி லோகேஸ்வரன் 30.01.2021 அன்று சுதுமலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கற்பகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமரையா இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற லோகேஸ்வரனின் பாசமிகு மனைவியும், சிவப்பிரியா (கனடா), செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மதிமுகராஜா (கனடா), சிவஞானவதி ஆகியோரின் பாசமிகு மாமியும், கிஷோ (கனடா), றியா (கனடா), சயந்தவி, கிரிஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், புனிதவதியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரன், தங்கேஸ்வரன், நாகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி, இரத்தினேஸ் வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) சுதுமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**
**தொலைபேசி எண்:**
+94 7766 21766

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்

## தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2020


Mr.K.Kanthasamy (Principal)


Mr.V.Kamalaruban (Vice Principal)


Mr.S.Theeban (Teacher)


Mr.P.Santhiramohan (Teacher)


Miss.K.Akalya (Teacher)


Mrs.S.Sinnaththurai (Teacher)

### வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள்


S.Tharunika - 192


V.Ramshiga - 190


T.Thanushka - 186


M.Karunja - 186


S.Akeesh - 185


A.Abishan - 185


S.Sasjeena - 183


P.Parishana - 183



V.Varunigka - 178


S.Mithula - 176


S.Pavinajan - 174


S.Ahranan - 173


A.Dinas - 173


S.Sakiththiyan - 171


K.Shepika - 171


S.Sakilan - 170


B.Gabisana - 170


S.Sujarniha - 167


K.Thevanujan - 167


T.Kabinaja - 165


N.Kavisha - 164


K.Ajanthika -164

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| N.Laxshan - 159 | S.Nilansaly - 159 | K.Karunika - 158 | N.Sikana - 157 | A.Anushan - 156 | C.Ankajan - 154 | K.Apinaya - 152 |
| S. Piraveena - 152 | T,Lathusan - 151 | R.Risna - 150 | R.Piraveen - 149 | S. Vinuja - 149 | B.Sanaki - 148 | U. Kanisha - 146 |
| J.Laxshaki - 146 | S. Sabisha - 146 | T.Shopithan - 144 | R.Aksaya - 144 | L.Mathusan - 143 | V.Vinthujan - 143 | N. Piravanja - 142 |
| S.Parsha - 141 | K.Vanujah - 140 | R.Vakeesan - 137 | S.Vithutharan - 134 | P.Karish - 132 | J.Laya - 132 | S.Athiththiyan - 128 |
| V.Aksitha - 128 | S. Thiviyan - 127 | K.Shajana - 127 | D. Deen - 126 | M.Denukan - 126 | S.Dilaksan - 124 | U. Kamsiya - 121 |
| R. Tharanikka - 120 | S. Thulasika - 120 | J.Nilachchan- 118 | S. Kishanika - 117 | R.Jathursa - 117 | R. Apinaya - 115 | S. Sarmika - 115 |
| P. Dinushan - 110 | K. Lakmiga - 108 | S.Adchajan - 107 | T.Thisanan - 104 | K.Vigash - 104 | T. Gethini - 104 | S. Abirshan - 104 |
| S.Kinthusa - 101 | S.Capston - 98 | K.Karish - 97 | A. Thanushan - 97 | V. Thilosika - 97 | K.Piriyatharsan- 95 | Y. Joyshan - 86 |
| A. Shanugan - 84 | M.Paveena - 81 | A.Aksayan - 77 | S. Thusanika - 76 | P.Thisan - 75 | K. Thansi - 75 | |


Congratulations

**பாடசாலைச் சமூகம்,**

**யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்**

Congratulations

# மரண அறிவித்தல்



பிறப்பு
15.02.1926

இறப்பு
21.01.2021

## பொன்னப்பா சுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல.04 செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னப்பா சுப்பிர மணியம் அவர்கள் கடந்த (21.01.2021) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா இராசம்மா தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை லெட்சுமிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரி யின் அன்புக் கணவரும் சிவபாலன் (கனடா), காலஞ்சென்ற சித்திரகலா (கனடா), சிவகுமார், சிவகாந்தன் (கனடா), காலஞ்சென்ற சிவகெங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், தனமாலா (கனடா), சண்முகநாதன் (கனடா), சிவஜயந்தி, சிவதர்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னம்மா, இராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், சுலோசனன், சுஜன், சஜீன், சிந்துஜா, நிரூஜா, உஷானியா, ஷாயீசன், மனோஜ், கிருஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் சரீனா, நேதன், மாயாசித்திரா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த (22.01.2021) வெள்ளிக் கிழமை செம்மணி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனை வருக்கும் அறியத்தருகிறோம்.

மரணச் சடங்கில் பங்கு பற்றி பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

1. மகன்-சிவபாலன் - 0016478584356
2. மருமகன்- சண்முகநாதன்-0014168182616
3. மகன் -சிவகுமார் - 0212229287
4. மகன்-சிவகாந்தன் - 0014165615158

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சிவராஜா



பளை முகமாலையைப் பிறப்பிடமாகவும், $D_8$ உருத்திரபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தம்பனைகுள வீதி, நெளுக்குளம் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவராஜா அவர்கள் 29.01.2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமார் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர்-முல்லைத்தீவு கிளை) சியாமளா (ஜேர்மன்), சசிக்குமார் (பிரான்ஸ்), சந்திர குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவர்ணலதா, சச்சிதா னந்தம், கௌரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான நடராசா விநாயகமூர்த்தி, பஞ்சாச்சரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோகம்மா, குமாரசாமி மற்றும் விஜயபவானி, சிறிதரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவநாதன் (லம்போதரா- உதயநகர்), புஸ்பகுமாரி ஜெயமஞ்சுளா, யோகச் செல்வன், துஸ்யந்தன் (LOLC காப்புறுதி கூட்டுத்தாபன முகாமையாளர்) சத்தியா (ஆசிரியர்), உஸ்ணா (ஆசிரியர்), திவ்வியா (ஆசிரியர்) ஆகி யோரின் பெரிய தந்தையும், டிவானா (பத்திரமுல்லை பல்கலைக்கழகம்) டிவாஷன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), சாயுரன், சர்மிலன், சாருஜா, சாதனா, சயானி, சர்விகா, சாருஜன், சாருஜா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**சி.சிவகுமார் - 077 342 1370**

**குறிப்பு :** மரண வீட்டிற்கு வவுனியாவுக்கு செல்ல இருப்பவர்கள் பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் காலை 8.30 மணிக்கு $D_8$ உருத்திரத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 06.03.1939

சிற்பனையான் திருவடியில் 22.01.2021



### திருமதி அருந்தவநாயகி சோமசுந்தரம்

யாழ். வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி சோமசுந்தரம் 22-01-2021 வெள்ளிக்கிழமை கனடா (Toronto) வில் சிற்பனை முருகன் திருவடி அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00-12.30 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

27, மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 372 6103

## 09 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குப்புசாமி ஞானசேகரம்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

தோற்றம் 27.09.1946

மறைவு 10.02.2012

திதி: அபரபக்க திருதியை

அன்பு வழியில் எமை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம் இதய தெய்வமே!
ஆண்டுகள் ஒன்பது
ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்.

"சந்திர வாசா"
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27.08.1929

மறைவு 12.02.2020



### சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு

ஓராண்டு ஆனாலும்
ஓயவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து வாடுகின்றோம்
சிரித்த முகம் என்றும் எங்கள்
சிந்தனையில் நிலைக்கிறது
ஆறாது ஆறாது என்றும்
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

113, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு 01.03.1938

உதிர்வு 11.02.2020



### அமரர் அப்பையா குமாரசாமி (குமாரு)

புன்னகை பூத்த முகமும்
குடும்பத்தை நேசிக்கும் குணமும்,
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பலசெய்து நல்லவராய்
நாணயமாய் நடந்தீரே ஐயா
கொடிய நோயின் தாக்கத்தால்
எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆகிவிட்டது ஐயா!

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி.
கைதடி நுணாவில்.

உங்களின் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 25.06.1928

விண்ணில் 15.01.2017

### அமரர் நாகலிங்கம் தவமணிநாயகம்

(ஓய்வுபெற்ற மின்முகாரி – சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, அரங்க ஒலி ஒளி அமைப்பாளர்)

திதி: திருதியை

நாள்கள் நகர்ந்து மாதங்கள் கடந்து
ஆண்டுகள் நான்கு கடந்தபோதிலும்
ஆறவில்லை எம் வடுக்கள்.....
அறிவுரை சொல்லி ஆதரிக்கவும்
ஆறுதல் கூறி வழிநடத்தவும்
நீங்களின்றி கண்ணீருடன் – எம் நாள்கள்
என்றும் நீங்கா நினைவலைகளுடன்

கோண்டாவில் வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.10.1995

மறைவு 29.01.2021



### சிறீதரன் மயூரதன்

(ஆசிரியர் - அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்து கல்லூரி - A/L Level 2014 வணிக பீடம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறீதரன் மயூரதன் நேற்றுமுன்தினம் (29.01.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சிறீதரன் (ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர் - பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்) - தனலட்சுமி (பணிப்பாளர் யாழ். மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்) தம்பதியரின் அன்பு மூத்த மகனும், மேர்லின், தனுசியா, சிவதரன் (1ஆம் வருட வணிக பீட மாணவன் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரவிக்குமாரின் அன்பு மைத்துனரும், பிரக்ஷிகா, தனஸ்வி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

39/34, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


## முன்னணியிலிருந்து 9பேர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 9 பேர் விசாரணையின்றி கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர். யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தரப்புடன் இணைந்து செயற்படுவர்களே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பேரிலும் சைக்கிள் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிட்ட உறுப்பினர்கள் முன்னணியின் குறிக்கோள்கள், கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகளை தொடர்ச்சியாக மீறி வந்தமையாலும் இறுதியாக இடம்பெற்ற நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவு மற்றும் யாழ்ப்பாண மாநகரசபை மேயர் தெரிவுகளின்போது கட்சியின் தீர்மானத்தை மீறி கட்சியை சிதைக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டமையாலும் விசுவாசமின்மை, அரசியல் இயக்கத்துக்கு துரோகம் இழைத்தமை போன்ற மன்னிக்க முடியாத குற்றங்களை இழைத்தமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவானது ஏகமனதாக 9 உறுப்பினர்களையும் எந்தவித விசாரணையுமின்றி அடிப்படை உறுப்புரிமையிலிருந்து உடனடியாக நீக்குவதாக அறிவித்துள்ளது.

அண்மையில் நடந்த யாழ். மாநகர சபை மேயர் தெரிவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்கள் வி.மணிவண்ணனை ஆதரித்தனர். இவர்களில் 4பேர், கட்சி கட்டுப்பாட்டை மீறினார்கள் என்று குறிப்பிட்டு, ஏற்கனவே கட்சியால் நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கையடுத்து, நீக்கத்துக்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எஞ்சிய 6 பேரும் நேற்று கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர். வரதராஜன் பார்த்தீபன், சிவசாந்தன் தனுஜன், இ.ஜனன், பா.பத்மமுரளி, அ.சுபாஜினி, இ.ஜெயசீலன் ஆகியோரே கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள் மூவரையும் கட்சியை விட்டு நீக்கியுள்ளது முன்னணி. தற்போதைய தவிசாளரர் ப.மயூரன், அகிலாண்டரூபி, கௌசலா ஆகியோரே நீக்கப்பட்டுள்ளனர். (ஒ,26)

## வவுனியா பொலிஸ் அலுவலருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன. 31

வவுனியாவைச் சேர்ந்த பொலிஸ் அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வவுனியா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ,26)

## காணி விற்பனைக்கு

இரண்டாம் ஒழுங்கை, பிரம்படி வீதி, கொக்குவிலில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P: 076 168 0059, 076 702 3565

## பணியாளர் தேவை

திருநெல்வேலியில் அமைந்து உள்ள எமது நிறுவனம் தேனு சுப்பர் மார்க்கட்டிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

- காசாளர்
- கணக்காளர்
- களஞ்சிய காப்பாளர்
- இருப்பு பதிவுனர்
- பொருட்களை காட்சிப்படுத்துனர்
- பொதி கட்டுனர்.

அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலாரும்.

தொடர்புக்கு: 021 493 0118, 077 711 0075

## விற்பனைக்கு, தேவை

1. பிரபல குடிநீர் விநியோகக் கம்பனியின் யாழ் மாவட்டத்திற்கான முகவர் (Agency) விற்பனைக்கு உண்டு. (Water for Sale)
2. யாழ் நகரில் இயங்கும் மருந்தகத்திற்கு சான்றிதழுடன் கூடிய மருந்தாளர் தேவை. (Pharmacist with License)

தொடர்புக்கு :076 0588 889

## Happy Retirement Care Center

எமது இல்லத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர் கள் இணைத்துக் கொள்வதற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- அமைதியான பாதுகாப்பான சூழல்
- தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் மருத்துவ வசதிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
- குறைந்த கட்டணம்

தொடர்புகளுக்கு: **வீரக்கொடியார் வீதி,**
**(பொலிஸ் நிலையம் முன்பாக)**
**நுணாவில் சந்தி, சாவகச்சேரி.**

**076 8835 915**

## தேவை

சாரதிகள், கூலியாட்கள், பொதி செய்பவர்கள்.
தொடர்பு:
104, மாப்பியன் லேன், சுதுமலை, மானிப்பாய்.
0777 722 215

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு 18-50 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் வேண்டும்.
தொடர்பு: 0766 05 4953

## கடை வாடகைக்கு

இல.191, K.K.S. வீதி, சுன்னாகத்தில் அரச / தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற 1200 சதுர அடியுடனும் வாகன தரிப்பிட வசதியுடனும் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

076 7412311, 077 640 5497

## காணி தேவை

யாழ்ப்பாணம் பிரதான வீதி, அல்லது ஆஸ்பத்திரி வீதியில் 3 பரப்புக் காணி தேவை.
தொடர்புகளுக்கு:
077 0746 553

## அலுவலக பணியாளர் தேவை

யாழ். கந்தர்மடம் சந்தியில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுவதற்கு 40 வயதுக்குட்பட்ட ஆங்கில அறிவு, கணினி Typing தெரிந்த பெண் பணியாளர் ஒருவர் தேவை. தொடர்பு: 077 130 2305

## பிரத்தியேக வகுப்புகள்

A/L 2021, 2022
தனியாக அல்லது குழுவாகக் கற்பிக்கப்படும்.
**இணைந்த கணிதம்** 077 832 4002
**பௌதீகவியல்** 077 316 4504

## ஆசிரியர் தேவை

யாழ் நகரில் தரம் இரண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கு பாடசாலையில் நிழல் ஆசிரியர் [SHADOW TEACHER] தேவை. முன்பள்ளி ஆசிரிய அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. தகுந்த கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப்படும். 077 557 4325 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி செய்யவும்.

## பணிப்பெண் தேவை

கொழும்பில் இரு குழந்தைகள் உள்ள வைத்தியர் ஒருவரின் குடும்பத்துக்கு தங்கி வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் தேவை.
077 249 7292, 077 360 4023

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடம் 239, பலாலி வீதியில்
மேல் வீடு வாடகைக்கு உள்ளது. 3 படுக்கை அறைகள் (2 படுக்கை அறை குளிரூட்டப்பட்டது), 2 குளியல் அறை, பிரதான படுக்கையறை (முற்றிலும் குளிரூட்டப்பட்டது) இணைக்கப்பட்ட குளியல் அறை (வெந்நீர் வசதியுடன்) இரண்டாவது குளியல் அறை பொதுவானது, வாடகை மாதம் ரூபா 35,000 முற்கொடுப்பனவு ரூபா 100,000

077 711 0281

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கிக்கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருள்கள் மற்றும் சிறு பிள்ளை களுக்கான விளையாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிறு வனத்துக்கு சகல வேலைகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
**குறிப்பு:** புடைவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கும் அண்மையில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

021 221 3323, 076 264 8766

## ஐடியல் பர்ஸ்ட் சொயிஸ் வவுனியாவில் வேலை வெற்றிடங்கள்

- திறமை வாய்ந்த வாகன திருத்துனர் (மெக்கானிக்)
- திறமை வாய்ந்த நிறப்பூச்சாளர்
- வாகன சுத்திகரிப்பாளர்

போன்றவற்றிற்கு எமமிடம் வெற்றிடங்கள் உள்ளன. சிறந்த சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகளும் செய்து தரப்படும். இன்றே எம்மிடம் இணையுங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 0766343604, 0771910055, 0778723450.

IDEAL FIRST CHOICE TOTAL AUTO CARE SOLUTIONS

சுயவிபரக்கோவையுடன் இன்றே நாடவேண்டிய இடம்
ஐடியல் பர்ஸ்ட் சொயிஸ்
இல,214 பு மூன்றுமுறிப்பு, வவுனியா.

# அடகு வைத்து மீட்டெடுக்க இயலாது போன

## உங்களது தங்க நகைகள் மீண்டும் உங்களது கைகளுக்கு

F.A.Ads

நீங்கள் தற்பொழுது அடகு வைத்திருக்கும் ரசீதினை எமது 0777 947120 என்ற இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாளைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |

## பகுதிநேர வேலைவாய்ப்பு


தற்போது நாடு முழுவதும் உங்களிடம் வாகன சான்றிதழுடன் மோட்டார் வண்டி உள்ளதா? எம்முடன் இணையுங்கள்.

ஆண்/பெண்
இருவரும் இணையலாம்

மாத சம்பளம் : ரூ. 50,000/- க்கு மேல் சம்பளம் பெறலாம்

அழையுங்கள் :
0777 227 671 - கார்த்திக்

## அறிவித்தல்



எமது நிறுவனத்தில் பணியாற்றிய **இலக்கம்** 28/4 **சின்னப்புதுக் குளம் வவுனியா எனும்** முகவரியைச் சேர்ந்த **கனகரத்தினம் சுதாஸ்கரன்** அடையாள அட்டை இலக்கம் 813242192V என்பவர் 31.12.2020 ஆம் திகதியின் பின்னர் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதையும் இவ் அறிவிப்பு திகதியின் பின்னர் எமது நிறுவனத்துடனான தொடர்புகளை மேற்கொள்ள வேண்டாம் என்று வாடிக்கையாளர்கள், வழங்குனர்களுக்கு அறியத்தருகின்றோம் .

**முகாமையாளர்**

**துகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**

**இல . 52 , 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா .**

## கே.கே.எஸ்ஸில்...

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தையிட்டி கிராமத்தில், 8 பேருக்குச் சொந்தமான தனியார் காணி விடுவிக்கப்படவில்லை. அந்தக் காணியில் 2019ஆம் ஆண்டு இராணுவத்தினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டது. அதற்கு எதிராக காணி உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். விடுவிக்கப்படாத இந்தக் காணிக்குள் நேற்றைய தினம் திஸ்ஸ ராஜமகா விகாரையை நூறு அடியில் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் பதிவேடுகளுக்கு அமைவாக அந்தப் பகுதியில் போருக்கு முன்னர் திஸ்ஸ ராஜமகா விகாரை என்ற ஒன்று அமைந்துள்ளது. ஆனால் அந்தக் காணியை விடுத்து தனியாருக்குச் சொந்தமான காணியிலேயே விகாரைக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் நேரில் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்தினார்.

பௌத்தசாசன அமைச்சின் நிதி உதவியுடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இந்த விகாரைக் கட்டுமானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா விகாரைக்கான முதலாவது அடிக்கல்லை நட்டார். இந்த நிகழ்வில் அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த ஆனந்த தேரவும் கலந்து கொண்டிருந்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது. வலி. வடக்கில், விடுவிக்கப்படாத மக்களின் காணிகளுக்குள் அனுமதி பெறாமல் விகாரைகள் அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்த போதும் இணைத் தலைவர் அங்கஜன் அதனை மறுத்து அனுமதி பெறாமல் எந்தக் கட்டுமானமும் மேற்கொள்ளக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தார்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 24 மணி நேரத்துக்குள்ளேயே அதனை உதாசீனம் செய்யும் வகையில், திஸ்ஸ ராஜமகா விகாரைக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. (ஒ,5,26)

## இதற்காகவே...

என்று குறிப்பிடுவதற்கு மறுத்தேன். உரிய பேச்சின் மூலம்தான் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மாறாக ஒன்றுக்கும் உதவாத தீர்மானங்களால் அல்ல. இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான இ.அங்கஜன்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

வெறுமனே மாகாண சபைகள் போல பிரதேச சபைகள் போல சாத்தியமில்லாத தீர்மானங்களை எடுத்துவிட்டு அதை நடைமுறைப்படுத்த முடியாத கேலிக்கூத்தான சபையாக நாங்கள் இருக்க விரும்பவில்லை. நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களைத்தான் எடுக்க வேண்டும். எந்தக் கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாது என்ற கோரிக்கையைத்தான் வைத்தோம். ஆனால் அது நடைபெறுகின்றது. கடந்த ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன்னைய ஆட்சிக்காலத்திலும் இது இடம்பெற்றது. பேச்சின் மூலம்தான் இதைச் சாத்தியமாக்க வேண்டும், என்றார். (ஒ,ம,319)

## அனுமதி...

மதி பெறப்படவில்லை. சட்டவிரோத கட்டுமானத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். இவ்வாறு வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். அந்தப் பகுதியில் திஸ்ஸ ராஜமகா விகாரை அமைப்பதற்கு சில வருடங்களுக்கு முன்னர் பிக்குகள் அனுமதிக்கு விண்ணப்பித்திருந்தனர். அவர்களது விகாரைக் காணியில் அமைக்க அறிவுறுத்தியிருந்தோம். ஆனால், தற்போது தனியார் காணியில் எந்தவொரு அனுமதியும் இல்லாது விகாரைக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டுமானத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம், என்றார். (ஒ,5)

## நாம்...

எவரும் சொல்ல முடியாது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ ராஜமகா விகாரை தனியார் காணியில் அமைக்கப்பட்டமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ விகாரை அமைக்கலாம். வடக்கு கிழக்கில் விகாரைகள் அமைக்கப்படக் கூடாது தெற்கில்தான் அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணமே வரக் கூடாது.

இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் நாடு முழுவதும் உள்ளன. இந்த நிலையில் விகாரைகள் மாத்திரம் தெற்கில் இருக்கவேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் ஏன் வரையறை போடுகின்றார்கள்.

நாட்டில் இன மற்றும் மத நல்லிணக்கம் உருவாகவேண்டும் எனில், இன மற்றும் மத ரீதியான வெறுப்பை தூண்டும் வகையில் பரப்புரை மேற்கொள்ளக் கூடாது, என்றார். (ஒ,5,22)

## கூட்டமைப்பின்...

நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவே போட்டியிட வேண்டும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் முன்மொழிந்தார். சீ.வீ.கே.சிவஞானம் அதை வழிமொழிந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக மாவை.சோ.சேனாதிராசா போட்டியிடாவிடின், தானே முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேன் என்பதையும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்தை அரசியல் குழுவில் யாரும் எதிர்க்கவில்லை. (ஒ,5)

## அங்கஜனுக்கு...

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனை எச்சரித்தார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் காரைநகர் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. 'ஜே/44 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பல குடும்பங்களின் காணிகள் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்தக் காணிகளை விடுவித்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் எம்மிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் இந்தச் சபையில் தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார். இதற்குப் பதில் வழங்கிய அங்கஜன், 'மக்கள் கோரிக்கைவிடும் பட்சத்தில் நிச்சயம் அது தொடர்பில் பரிசீலிக்கலாம்' என்றார்.

இதையடுத்து கஜேந்திரகுமார் கடும் தொனியில், 'வார்த்தைகளில் கவனம் தேவை. ஒரு தரப்பு தன் கருத்தை முன்வைக்கும்போது அதை உதாசீனம் செய்யும் வகையில் கருத்து வெளியிட முடியாது. மக்கள்தான் வந்து முன்வைக்க வேண்மென்றால் எதற்காக அவர்கள் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்றனர். எமக்கு என்ன வேலை?' என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு அங்கஜன், 'தயவுசெய்து இந்தக் கூட்டத்தை அரசியல் ஆக்காதீர்கள். எந்தச் சபையிலும் பிரச்சினை கொண்டுவருகின்றீர்கள். சந்தர்ப்பவாத அரசியல் இங்கு வேண்டாம்' என்றார். பதிலுக்குக் கஜேந்திரகுமார், 'உங்கள் அரசியல் என்னவென்பது எங்களுக்குத் தெரியும்.

சந்தர்ப்பவாத - வியாபார அரசியலை நாங்கள் செய்யவில்லை. உங்கள் கருத்துக்கள் அபிவிருத்திக்காக எங்கள் கருத்துக்கள் அரசியலுக்காக என்ற பிம்பத்தைத் தோற்றுவிக்காதீர்கள்' என்று பதிலடி கொடுத்தார். அங்கஜனை நோக்கி 'நீர்' என்ற சொல்லை கஜேந்திரகுமார் பயன்படுத்தினார். இதற்கு அங்கஜன் 'மரியாதை தந்தால் அதைத் திரும்பித் தரவேண்டும்' என்றார்.

பதிலுக்குக் கஜேந்திரகுமார் 'அதைத்தான் நானும் சொல்கின்றேன்' என்றார். இறுதியாக கஜேந்திரகுமார், 'கடற்படையினரிடம் உள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று நான் கோரிக்கை முன்வைக்கும்போது, தலைவர் (அங்கஜன்) தனக்குப் பதிலாக மக்கள் வந்து கோரிக்கை முன்வைக்க வேண்டும் என்று தெரிவித்ததை கூட்டத்தின் அறிக்கையில் குறிப்பிட வேண்டும்' என்றார். அதுவும் அவ்வாறே குறிப்பிடப்பட்டது. (ஒ,ம,319)

## வடக்கில்...

தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையில் நேற்றைய முதல் நாளில் 2 ஆயிரத்து 997 சேவையாளர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையினரில் இது 30 சதவீதமாகும். இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத்துறை சேவையாளர்கள் தகுதி பெற்றனர்.

மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் முதல் நாளான நேற்று 2 ஆயிரத்து 997 பேர் தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 586 பேரும், கிளிநொச்சியில் 290 பேரும், மன்னாரில் 448 பேரும், வவுனியாவில் 360 பேரும், முல்லைத்தீவில் 313 பேரும் தடுப்பூசி மருந்தைப் பெற்றனர், என்றார். (ஒ,26)

## திஸ்ஸ...

றைய (நேற்று முன்தினம்) அமர்வில் விகாரைக் கட்டுமானங்களுக்கு எதிராக நாங்கள் குரல்கொடுத்த போது மௌனம் காத்தார். இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன்.

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

திஸ்ஸ விகாரை அப்புறப்படுத்தப்படவேண்டும். வலிகாமம் வடக்கில் எந்த விகாரைக் கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படக்கூடாது என்று நேற்று (நேற்று முன்தினம்) நாங்கள் குரல் கொடுத்தோம்.

விகாரைக் கட்டுமானங்களை அமைக்கக்கூடாது என்பதைத் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால் அங்கஜன் அதற்குப் பின்னடித்தார். திஸ்ஸ விகாரை 100 அடியில் மிகப்பிரமாண்டமான வகையில் கட்டப்படப்போவது அவருக்குத் தெரிந்த படியால்தான் அவர் விகாரைகள் என்ற சொல்லைப் பயன்படுத்தத் தயங்கினாரோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. பேரினவாதக் கட்சியின் முகவராகச் செயற்படும் அங்கஜன், அபிவிருத்திப் போர்வையில் பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்றார் - என்றார். (ம,319)

## ஐ.நாவுடன்...

ளில் இலங்கை ஈடுபட்டுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட், வெளியிட்டுள்ள காட்டமான அறிக்கை குறித்தும் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'நாங்கள் ஆணையாளரின் அலுவலகத்துடன் சில விவாதங்களை நடத்தி வருகிறோம். மேலும் அவர் எழுப்பிய விடயங்களில் ஒருவித உடன்பாட்டை எட்ட முயற்சிக்கிறோம்.

இவ்விடயங்களில் முறையான பதிலை நாங்கள் நிச்சயம் வெளியிடுவோம்' எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ,இ)

---

# வரணியில் ஆசிரியர் வீட்டில் திருட்டு

கொடிகாமம், ஜன. 31

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் யாரும் இல்லாத நேரம், வெல்டிங் வேலைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் (ரான்ஸ்போமர்) மற்றும் இரும்பு வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் கிறைண்டர் என்பனவும் திருடப்பட்டுள்ளன. அந்தப் பொருள்கள் ஆசிரியரின் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. பின்னர் அவை ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

திருட்டை மேற்கொண்ட சந்தேகநபர் பல்வேறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ,159)

கிழக்கு முனைய விவகாரம்:

# அமைச்சர்களும் எதிர்க்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 31

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு அரசுக்குள் அமைச்சர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை அமைச்சரவையில் கிழக்கு முனையத்தை வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர், அவ்வாறாக அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பு வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்சவின் இல்லத்தில் அமைச்சர் உதய கம்மன்பில, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண உள்ளிட்டோர் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள அரச தரப்பில் இருக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் முக்கிய கலந்துரையாடலை நேற்று நடத்தியுள்ளனர். (ஒ,22)

# 8 பேர் நேற்றுச் சாவு; 800 பேருக்குத் தொற்று

கொழும்பு, ஜன. 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நேற்று மாத்திரம் 848 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 313 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 300 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர். (ஒ,22)

# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலய 57ஆவது பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவிருப்பதால் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ,319)

**வாடகைக்கு**

யாழ். வெலிங்டன் சந்தி மணிக்கூட்டு வீதியில் லிங்கன் கூல்பார் அருகில் 378 / 1-B 1500 சதுர அடி கொண்ட ஹோல் களஞ்சியம், கல்வி நிறுவனம், அலுவலகங்கள் என்பவற்றுக்கு வாடகைக்கு விடப்படும்.

077 271 8458

**வகுப்புக்கள்**

**தரம் 6 தொடக்கம் 11** வரையான வகுப்புகளுக்கு **கணிதம், விஞ்ஞானம்** போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும்.

076 686 7099

**வகுப்புக்கள்**

A/L இரசாயனவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும்

T.P - 077 074 7906

**பணிப்பெண் தேவை**

வீட்டு வேலை செய்வதற்கு 50 வயதுக்குட்பட்ட பெண் தேவை. (துங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது.

திருநெல்வேலி - 074 031 9807

**ENGLISH ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்**

அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

077 658 9443 யாழ்ப்பாணம்

# 8 கிலோ கஞ்சா; பெண் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 31

8 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஆவரங்கால் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகவே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (ஒ,26)



# குருதிக்கொடை முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2002ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் பாடசாலையில் இன்று காலை 9 தொடக்கம் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது. குருதிக் கொடையாளர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ,5)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



Jaffna Nallur

**Video Editing**

திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள்

பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்

தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்

Adobe Premiere CC,EDIUS 8,After Effect CC, Photo Shop CC

10 Days 20 Hours Video Plugin

Colorcorrection,Adorage Filter,Mask,New blue,Blu ray writing Skin smooth,Color Upgrading Wedding song Editing Technic,

விபரங்களுக்கு - 0773903123



பணிநிலை வேண்டுகை

கரிகணன் (தனியார்) நிறுவனத்தின் விஸ்தரிப்பிற்காகப் பணிநிலை வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

- கணினி தட்டச்சாளர் ( COMPUTER TYPIST )
- கணினி வடிவமைப்பாளர் ( COMPUTER GRAPHIC DESIGNER )

முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்

நேர்முகத்தேர்வு: 01–05 பெப்ரவரி

வாராந்தம் 45 1/2 மணிநேர பணி

பதிப்பகத்தின் மறு பரிமாணம் விடுமுறை நாட்களில் விடுமுறை

இலங்கைத் தொழில்த் திணைக்களத்தின் சட்ட விதி முறைகளுக்கு அமைவாக இயங்கும் வடக்கின் ஒரே அச்சக நிறுவனம்

T +94 21 222 2717|8

#672B, K.K.S. Road, Jaffna.

Harikanan PRINTERS OF THE NORTH

**வேலையாட்கள் தேவை**

மானிப்பாயிற்கு அண்மித்த பகுதியில் உள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

01. கணக்காளர் 02. கேபிள் TV திருத்துநர் 03. சாரதி

T.P: 07 729 2029

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌர வகுடும்பம், 1983, M.Sc, பூரட்டாதி 4, குறுகிய காலத்தில் விவாகரத்தான, அவுஸ்ரேலியா குடியுரிமையான மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் உள்நாட்டில்/ அவுஸ்ரேலியாவில் எதிர்பார்க்கின்றனர்.

077 151 5165 (Viber)

**வேலைவாய்ப்பு**

- நிதி திட்டமிடலாளர் (Wealth Planner)
  - வயதெல்லை - 19 - 65
  - முழுநேரமாகவும் / பகுதி நேரமாகவும் வேலை செய்யக்கூடிய வசதி
- நிதி திட்டமிடல் முகாமையாளர் (Wealth Planner Manager)
  - வயதெல்லை - 20 - 65
  - எத்துறையிலும் முன் அனுபவம்

எந்த துறையிலிருந்தும் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 021 771 0251 077 744 4450

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY ROAD, JAFFNA.

**2021 A/L DAY CLASS**

| நேரடி வகுப்பு Monday to Friday | நிகழ்நிலை வகுப்பு Monday to Friday |
|---|---|
| BIOLOGY 8.00 - 9.30 AM | BIOLOGY 8.15 - 9.45 PM |
| COM.MATHS 6.45 - 8.00 AM | COM.MATHS 8.30-10.00 PM |
| CHEMISTRY 9.30-11.30 AM | CHEMISTRY 5.00 - 7.00 AM |
| PHYSICS 11.30-1.30 PM | PHYSICS 5.30 - 7.00 PM |
| ஆரம்பம் 01.02.2021 | நடைபெற்றுக் கொண்டுள்ளது. |
| தொடர்பு 076 566 3006 | தொடர்பு 076 569 3006 |



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
தை 18
ஞாயிற்றுக்கிழமை (3101.2021)
சிகரம் : 33

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

சொல்லிலும் செயலிலும் தமிழெனவே வாழ்ந்து
மல்லிகை இதழை மனதெங்கும் ஏந்திச் சுமந்து – நல்லுலகே
புகழ்ந்திடும் இலக்கியச் செம்மலாம் டொமினிக் ஜீவாவை
இழந்திங்கே தவிக்குதே ஈழ மண்ணின்றே!

–கொரோனாச் சித்தர்

# பிள்ளைகள் பார்த்திருக்க-
# மனைவியை கொன்ற கணவன்!

## பூநகரியில் நிகழ்ந்த கொடூரம்

உளவாளி
+
குமுதன்

ஐயோ.. ஆராவது ஓடி வாங்கோ,.... அம்மாவைக் காப்பாத்துங்கோ"
" அப்பா... அம்மாவை அடிங்காதீங்கோப்பா... நாங்கள் பொய் சொல்லேல்லையப்பா"
தன் சின்னஞ்சிறு பிள்ளைகளின் கதறலைக் கேட்கும் மனோநிலையில் ரூபஸ் இருக்கவில்லை. மனம் முழுக்க கொலைவெறி.
" என்னையோ எல்லாரும் ஏமாத்திறியள்?"
கேட்டபடி ஒரு உதை.
'படீர்'
கதவு ஒருமுறை மூடி, பின் திறந்து கொண்டது. அதற்கிடையில் தன் மனைவி கீதாவின் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு எதையோ அரக்கப் பரக்கத் தேடினான். அருகில் அடுக்கப்பட்டிருந்த தலையணைக்குள் கையை விட்டு, எடுத்தான்.
இப்போது அவன் கையில் ஒரு கத்தி. கீதாவுக்குப் பயம் வந்தது.
"பிள்ளையள் ...இவன் என்னைக் கொல்லப் போறான்.. ஓடிப்போய் ஆரையும் கூட்டியாங்கோ.. பொலிஸுக்கு போன் பண்ணுங்கோ"
ஏற்கனவே அடி, உதையோடு குடும்பம் நடத்திக் கொண்டிருந்த கீதா, தன் பிள்ளைகளிடம் கெஞ்சத் தொடங்கினாள். அவளின் கூக்குரலை கேட்டதும் பக்கத்து வீட்டுக்காரரை கூட்டி வர கடைசி மகன் தலை தெறிக்க ஓடினான். தன் கொப்பியில் எழுதி வைத்திருந்த பொலிஸ் நிலைய இலக்கத்தை, கீதாவின் மகள் தேடியபோதும் அது சிக்கவில்லை.
ஒவ்வொரு கொப்பியாக அவசரத்தோடு அவள் தேடுகையில் ,கீதாவின் இரு கைகளையும் தன் ஒற்றைக்கையால் பற்றிப் பிடித்தபடி, கத்தியால் குத்த முயற்சித்தான் ரூபஸ். ஆனால் அவன் நினைத்தது போல குத்து விழவில்லை. கீதாவின் திமிறல் அவனை இன்னும் ஆத்திரமேற்ற,
அப்படியே அவளை கீழே விழுத்தி,
அப்படியே இழுத்துக் கொண்டு போய் ,
சுவரோடு அவள் தலையை 'மடார், மடார்' என்று மோதி இடித்தான். இரத்தம் அவள் தலையில் இருந்து குபீரிட்டது. இரத்தம் வர இன்னும் வேகமாக தலையை மோதினான்.
பின்னர் அவளை அப்படியே இழுத்து வந்து , கத்தியை எடுத்து , ஆத்திரம் தீரும்வரை, கீதாவைக் குத்திவிட்டு, அவள் இறந்துவிட்டாள் என்று உறுதிப்படுத்திய பின்னரே உள் அறையில் இருந்து வெளியேறி வீட்டுக்கு முன்னே வந்தான்.
"ஐயோ, எங்கட அம்மா"
கீதாவின் 13 வயது மகள் பெருங்குரலெடுத்துஅழ, அயலவர்கள் உதவிக்கு வருவதற்கிடையில் எல்லாமே முடிந்து போயிருந்தது.





சந்தேகமும், குடியும் கொன்றன குடும்பப் பெண்ணை!

### எப்போதும் சண்டை

2009 இல் இறுதிப்போர் வேளையில் முள்ளிவாய்க்காலில் எறிகணை வீழ்ந்ததில், ரூபஸுக்கும், மகளுக்கும் காயம்.
இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்து, குருநாகல் மருத்துவமனையில் கணவனையும், மகளையும் சேர்த்து பராமரிக்கத் தொடங்கினாள் கீதா. மொழி தெரியாது, புதிய சூழல், கையில் போதிய பணமில்லை. ஆனாலும் எட்டு மாதங்களாக மருத்துவமனையிலேயே இருந்து, ரூபஸையும், மகளையும் குணமாக்கி மீட்டெடுத்தாள்.
பின்னர் வவுனியாவிலுள்ள ரூபஸின் பெற்றோரோடு ரூபஸ் - கீதா குடும்பம் வாழத் தொடங்கியது. ஆனாலும் அங்கேயும் மீண்டும் ரூபஸ் குடிக்கத் தொடங்கினான். சண்டை, சச்சரவு என்று கீதாவின் வாழ்வு நரகமானது. பின்னர் பூநகரிக்கு கீதாவின் தந்தையோடு வந்து வசிக்கத் தொடங்கினர். அப்போதும் சண்டையும், குடியும் நின்றபாடில்லை.
இந்தநிலையில் கீதாவின் தந்தைக்கு வீட்டுத் திட்டம் கிடைத்திருந்தது. அதை அவர் தன் மகள் கீதாவுக்கு கொடுத்துவிட்டார். ஆனால் அந்த வீட்டை தன் பெயருக்கே மாற்ற வேண்டும் என ரூபஸ் அடம்பிடிக்கத் தொடங்கினான். அவனது ஆய்க்கினை தாங்க முடியாமல்,.வீட்டுக்கான 'பெர்மிற்'வந்ததும் அவனது பெயருக்கே வீடு எழுதிக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னரே அவன் கொஞ்சம் அமைதியானான்.
2015 முதல் பூநகரி, தெளிகரையில் உள்ள புதுவீட்டில் கீதா குடும்பம் குடியேறியது. வீடு மாறினாலும் ரூபஸ் மாறவில்லை. இப்போது ஓரிரண்டு நாள்கள் மட்டுமே வேலைக்கு போய்விட்டு, மிகுதி நாளெல்லாம் குடியும், அடியுமாக இருந்தான். வீட்டுச் செலவுக்கும் காசு கொடுப்பதில்லை. கீதாவின் தந்தையே அவ்வப்போது பண உதவி செய்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

### துயரமே வாழ்வு

**கீதா.( வயது 37)**
சொந்தப் பெயர் கிருஷ்ணகுமாரி. யாழ்ப்பாணம், மூளாய் தான் சொந்த இடம். தாயார் சிறுவயதிலேயே இறந்துவிட தந்தையினதும், சிறிய தாயாரினதும் ( கீதாவின் தாயார் இறந்த பின்னர் , தந்தை மறுமணம் செய்திருந்தார்) அரவணைப்பில் வளர்ந்தாள். போர் அவர்களை இடம்பெயரச் செய்ய, பூநகரி முக்கொம்பனில் குடியேறினார்கள். கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் சாதாரணதரம் வரை படித்துவிட்டு, அப்படியே வீட்டில் இருந்த கீதா, உறவினர் வீட்டு வைபவமொன்றில் கலந்து கொள்ள 2004 ஆம் ஆண்டு மூளாய்க்கு மீண்டும்சென்றாள். அங்கேதான் அவள் ரூபஸைக் கண்டாள்.
ரூபஸுக்கு கீதாவைக் கண்டதுமே காதல் வந்துவிட, இவள் பின்னால் சுற்றத் தொடங்கினான். காலப்போக்கில் கீதாவும் பச்சைக்கொடி காட்ட, வீட்டாரும் சம்மதிக்க விரைவாகவே இருவரும் தம்பதியராகினர்.
திருமணமான புதிதில் ரூபஸ் , கீதாவின் மனதுக்கேற்ற துணையாகவே இருந்தான். மேசன் வேலைக்குச் சென்று, தன் குடும்பத்தை ஒற்றை ஆளாகத் தாங்கினான். ஆனால், அவனை 'குடி' என்ற பழக்கம் என்றைக்கு தொட்டதோ அன்றோடு எல்லாம் தலைகீழானது. அடிக்கடி வீட்டில் சண்டை. அழுகையும், அடி உதையுமாக கீதாவின் வாழ்வு மாறத் தொடங்கியது.
காலமும் அவளைச் சோதிக்கத் தொடங்கியது.



# தமிழ்த் தரப்பு ஐ.நாவுக்கு அனுப்பிய பொதுக்கோரிக்கையும் அதன் பின்னரும்..!

○ நிலாந்தன்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கை கடந்த 27ஆம் திகதி வெளிவந்திருக்கிறது. கடந்த கிழமை தமிழ்க் குடிமக்கள் சமூகங்களும் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூட்டாக முன்வைத்த கோரிக்கைகளில் முக்கியமான சிலவற்றை மனித உரிமைகள் ஆணையரும் பரிந்துரைத்திருக்கிறார். இந்த அறிக்கையானது இதற்குமுன் வெளிவந்த மனித உரிமை ஆணையர்களின் அறிக்கைகளோடு ஒப்பிடுகையில் முன்னேறியி ருக்கிறது. குறிப்பாக போர்க்குற்றம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரான பயணத் தடைகள் ; சொத்து முடக்கம் பற்றிக் கூறப்படுகிறது. அதோடு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்வது பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதாவது தண்டனைகள் பற்றி அல்லது தண்டிப்பதற்கான விசாரணைகள் பற்றியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைப் பேரவையிலிருந்து விடயத்தை வெளியில் எடுக்கலாம் என்ற நம்பிக்கையை இவ்வறிக்கை ஊக்குவிக்கிறதா?

ஆனால் இந்த அறிக்கையின் தொடர்ச்சியாகவே மனித உரிமைகள் பேரவையின் உத்தியோக பூர்வ நடவடிக்கைகளும் அமையுமா என்பதே இங்குள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் இதற்கு முன்னரும் ஐ.நா. மனித உரிமை ஆணையர்களின் அறிக்கைகள் காட்டமானவைகளாக இருந்திருக்கின்றன.

ஆனால் அந்த அறிக்கைகளின் பின் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்கள் மென்மையானவைகளாகவும் அரசுக்கும், அரசுக்கிடையிலான கட்டமைப்பு சார் உறவுகளையும் காப்பாற்றும் நோக்கிலானவைகளாகவுமே அமைந்திருந்தன. இம்முறையும் ஐநா. மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் அவ்வாறுதான் அமையுமா?

இந்த அறிக்கையை முன்வைத்து இலங்கை அரசாங்கம் தற்காப்பு நடவடிக்கைகளில் ஏற்கனவே இறங்கிவிட்டது. கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதி ஓர் ஆணைக் குழுவை நியமித்திருக்கிறார். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு அது. இலங்கைத்தீவின் நவீன அரசியலில் ஆணைக்குழுக்கள் எனப்படுபவை அபகீர்த்தி மிக்க ஒரு பாரம்பரியத்துக்குரியவை. அது ஒரு கண்துடைப்புப் பாரம்பரியம். பாதிக்கப்பட்ட மக்களை பேய்க்காட்டும் ஒரு பாரம்பரியம். இம்முறை அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக ஆணைக்குழுக்களை விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். இதன்மூலம் அவர் ஐ.நா.வை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறாரா?

இந்த ஆணைக்குழுவின் மூலம் மட்டும் அல்ல , பதவியேற்றதிலிருந்து கடந்த ஆண்டு முழுவதும் அவர் நிலைமாறுகால நீதி தொடர்பில் எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தார் என்பதனைத் தொகுத்துப் பார்த்தால், அவர் கடந்த ஆண்டு முழுவதும் ஐ.நா. வை எதிர்கொள்ளத் தயாராகி வருவதை காணமுடியும். அவர் உத்தியோகபூர்வமாக ஐ.நா.வின் 30/1 தீர்மானத்திலிருந்து விலகப்போவதாக அறிவித்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை அப்படியே தொடர்ந்தும் அவற்றின் நலிவுற்ற நிலையிலும் பேணிவருகிறார். எனவே இதன்மூலம் தான் நிலைமாறுகால நீதி தொடர்பில் ஒரு உள்நாட்டு பொறிமுறைக்கு தயார் என்ற செய்தியை அவர் கடந்த ஆண்டு முழுவதும் ஐ.நா.வுக்கு வழங்கி வந்திருக்கிறார். எனவே கடந்த ஓராண்டு கால ஆட்சியைத் தொகுத்துப் பார்த்தால், அரசாங்கம் ஐ.நா.வை சுதாகரிக்க தயாராக இருப்பதாகவே தோன்றுகிறது. ஆணைக்குழுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு இதில் ஆகப் பிந்திய ஒரு சுதாகரிப்பு நடவடிக்கை ஆகும்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குத் தரத் தயாராகுவதும், இந்தியா அனுப்பிய தடுப்பூசிகளை ஜனாதிபதி தானே விமான நிலையத்துக்கு நேரில் சென்று பெற்றுக் கொண்டமையும் அரசாங்கம் ஜெனிவாவை முன்னோக்கி இந்தியாவை மகிழ்விக்க முற்படுவதைக் காட்டுகிறது.

இவ்வாறு அரசாங்கம் ஐநாவோடு எந்த அளவுக்கு சுதாரிக்கப்போகிறது என்பதில்தான் வரும் மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் முடிவு தங்கியிருக்கிறது. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையின்படி ஐ.நா. இலங்கை அரசாங்கத்தின் மீது இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிகரிக்கக்கூடும். ஆனால் தமிழ்மக்கள் இதுவிடயத்தில் கற்பனையில் மூழ்கியிருக்க முடியாது. ஏனெனில் இதற்கு முன்னரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர்களின் அறிக்கைகள் ஒப்பீட்டளவில் காட்டமாகத்தான் இருந்தன. ஆனால் ஐ.நா. தீர்மானங்கள் மென்மையானவைகளாகத்தான் இருந்தன.

இப்படித்தான் ஐ.நா.வின் சிறப்புத் தூதுவர்களின் அறிக்கைகளும் கடுமையானவைகளாக அமைவதுண்டு. ஏனெனில் சிறப்புத்தூதுவர்கள் துறைசார் நிபுணத்துவம் மிக்கவர்கள். அவர்கள் தமது துறைசார் ஒழுக்கத்துக்கூடாக சேகரித்து, பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். ஆனால் ஐ.நா தீர்மானங்கள் அவ்வாறானவை அல்ல. அவை அரசுகளின் தீர்மானங்கள். அரசுகள் எப்பொழுதும் அரசுக்கும் ,அரசுக்கிடையிலான இராணுவப் பொருளாதார நலன்களின் அடிப்படையில் தான் முடிவுகளை எடுக்கின்றன. எனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் உட்பட சிறப்புத் தூதுவர்களின் அறிக்கைகளுக்கும் ஐ.நா. தீர்மானங்களுக்கும் இடையில் இடைவெளிகள் உண்டு..



இந்த இடைவெளியை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த இடைவெளிதான் தமிழ் மக்கள் அதிகம் வேலை செய்ய வேண்டிய இடம். உலக சமூகம் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய நீதியின் வரையறைகளை அது உணர்த்துகிறது.

எனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையின் தொடர்ச்சியாக மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்ற கட்டாயமில்லை. மாறாக இப்படிப்பட்ட அறிக்கைகள் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க உதவும். அரசாங்கம் இந்த அறிக்கைகளின் கடுமையை உணர்ந்து தன்னைச் சுதாகரித்துக் கொள்ள முடியும். அவ்வாறு சுதாகரித்துக் கொள்ளும் பட்சத்தில் ஐ.நா. தீர்மானங்கள் அரசாங்கத்தோடு எப்படியெல்லாம் 'என்கேஜ்' பண்ணலாம் என்று சிந்திப்பவையாகவே அமையும். அல்லது அரசாங்கம் இந்த அறிக்கைகளுக்கு கோபமான எதிர்வினைகளை காட்டினால் அதற்காகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்தை தண்டிக்கும் என்று சொல்ல முடியாது.

முதலாவதாக அரசாங்கத்தைத் தண்டிக்கும் ஆணை; மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. இரண்டாவதாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஆணையும் மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஓர் அரசாங்கம் இணங்கினால் மட்டுமே அந்த நாட்டுக்குள் இறங்கி வேலை செய்யலாம். குறிப்பிட்ட அரசாங்கத்தின் ஒப்புதலோடுதான் மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டுக்குள் செயற்படும். எனவே அரசாங்கத்துக்கு எதிராக எதையும் செய்யக் கூடிய ஒரு ஆணை ,அந்த அவைக்குக் கிடையாது.

இது காரணமாகத்தான் தமிழ்க் குடிமக்கள் சமூகங்களும், மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொறுப்புக்கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று கேட்டன. நிலைமாறுகால நீதிப் பயில்வின் தோல்விகள் காரணமாகவும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலான மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடு எதிர்பார்த்த வெற்றியைப் பெறாத ஒரு பின்னணியிலும், பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையின் சாராம்சம் வருமாறு.....

முதலாவதாக, இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் உட்பட வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்குப் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும். இரண்டாவதாக, ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் தலைவர் இவ்விடயத்தை மேற்கூறப்பட்ட நடவடிக்கைக்காக மீளவும் ஐநா.செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மூன்றாவதாக, ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகின்ற மீறுதல்களைக் கண்காணிக்க இலங்கையில் அதன் அலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

நாலாவதாக, மேலே முதலாவதாக கூறப்பட்டதுக்கு பங்கமில்லாமல் ஐ. நா. பொதுச் சபையின் உப பிரிவாக, சிரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சிகளை சேகரிக்கிற பொறிமுறை போன்றதொன்றை (IIIM) கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு ஏற்படுத்துதல்.......

இதுதான் அக்கூட்டுக் கோரிக்கையின் சாராம்சம். அதேசமயம் அந்தக் கோரிக்கைகளில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் விமர்சனங்கள் எழுகின்றன. ஆனால் அந்த ஆவணம் எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பதைக் குறித்து ஆழமாக விளங்கிக் கொள்ளும் பொழுது அதன் மீது நிகழும் பெரும்பாலான விமர்சனங்களுக்கு இடமிருக்காது. ஐநாவுக்கு ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைப்பது என்று முடிவெடுத்தபோது, மூன்று கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் முதலில் இணங்கிக் கொண்ட விடயம் பொறுப்புக்கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் அந்தப் பொது ஆவணம் தயாரிக்கப்பட்டது. எனவே மனித உரிமைகள் பேரவைக்கு எழுதப்படும் கடிதத்தில் அதை அழுத்திக் கூறுவது என்று முடிவெடுக்கப்பட்டது. இவ்வாறு மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்தபின் அதையடுத்து மேலும் இரண்டு அல்லது மூன்று கடிதங்களை ஐ.நா. பொதுச் சபைக்கும் பொதுச் செயலருக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் எழுதுவது என்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. பொதுச் சபைக்கு எழுதப்படும் கடிதத்தில் இணைக்கப்படும் விடயங்களை மனித உரிமைகள் பேரவைக்கு எழுதும் கடிதத்தில் தவிர்க்கலாம் என்றும் யோசிக்கப்பட்டது.

அதே சமயம், தமிழ் மக்களின் விடயம் விவாதிக்கப்படும் ஒரு உலகப் பொதுமன்றத்தில் தமிழ் மக்கள் தமது எல்லாக் கோரிக்கைகளையும் முன் வைப்பது நல்லது என்று ஒரு கருத்தும் கூறப்பட்டது. எனினும் மனித உரிமைகள் பேரவையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை முதலாவது கடிதத்தில் கேட்டுக் கொள்வது என்றும், ஏனைய விடயங்களை அடுத்தடுத்த கடிதங்களில் குறிப்பிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேலும் சில கடிதங்களை இம்மூன்று கட்சிகளும் கூட்டாக எழுத வேண்டியிருக்கும். ஆனால் முதலாவது கடிதத்தின்பின் நிகழும் வாதப்பிரதிவாதங்களை வைத்துப்பார்த்தால் அவ்வாறு அடுத்தடுத்தகட்ட ஒருங்கிணைத்த முயற்சிகளுக்குப் போகும் பக்குவம் தமிழ்க் கட்சிகளிடம் உண்டா என்ற கேள்வி எழுகிறது. பதினொரு ஆண்டுகளுக்குப்பின் உலக சமூகத்தை நோக்கித் தயாரித்த ஒரு பொதுக்கோரிக்கையின் மகத்துவத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு உண்டு.

அவ்வாறு தமிழ்த்தரப்பு ஒருமித்த தரப்பாக கோரிக்கைகளை முன்வைத்து ,ஒருமித்த தரப்பாக விவகாரங்களை கையாளுமாக இருந்தால், அரசுகளை நோக்கி வெற்றிகரமாக 'லொபி' செய்ய முடியும். அது மட்டுமல்ல அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, அரசியல் கைதிகளுக்கான நீதி போன்ற விடயங்களிலும் ஒருமித்துச் செயற்பட முடியும். கடந்த ஞாயிற்றுக்கிழமை காணிப் பிரச்சினைகளுக்காக ஒன்றாகத் திரண்டு போராடும் நோக்கத்தோடு தமிழ்க் கட்சிகளில் ஒரு பகுதியினர் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் கூடினார்கள். அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்குபற்றவில்லை.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் அரங்கில் உள்ளன என்றால், அதன் பொருள் மூன்றுவிதமான வேறுபட்ட நோக்கு நிலைகளை அவை பிரதிபலிக்கின்றன என்பதுதான். மூன்று பேரும் ஒன்றாக ஒரே கட்சியாக நிற்க முடியாத ஓர் அரசியல் சூழல் உள்ளது என்பதுதான். இந்த வேற்றுமைகளில் தான் ஓர் இணக்கப்பாட்டை காண வேண்டியிருக்கிறது.

ஐ.நா.வை எதிர்கொள்வதற்கு எப்படி மூன்று கட்சிகளையும் ஒரு பொது உடன்பாட்டுக்கு கொண்டுவர முடிந்ததோ, அப்படியே இனிமேலும் அடிப்படையான முக்கிய விடயங்களில் கட்சிகளை ஒன்றிணைக்கலாம் என்ற நம்பிக்கை இப்போதும் உண்டு. தமிழ்த்தரப்பு முன்வைத்த கோரிக்கைகளுக்கும் மனிதஉரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கும் இடையில் காணப்படும் ஓரளவு பொதுத்தன்மை அந்த நம்பிக்கையை அதிகப்படுத்துகின்றது. ■

**கடந்த வாரக் கட்டுரையில் ட்ரிப்பில் ஐ எம் (IIIM)என்பது மியான்மருக்குரியது என்றுவந்திருந்தது. அதுசிரியாவுக்கானது என்பதே சரி. எனினும் அது கட்டுரையின் மையப் பொருளைப் பாதிக்காது.**

**19.1.2021 அன்று டெய்லி மிரர் பத்திரிகையில் " HAVE TAMILS BENEFITTED FROM UNHRC RESOLUTIONS?" என்ற தலைப்பில் ரங்கா ஜெயசூரியா எழுதிய கட்டுரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.**




# ஐ.நா. தீர்மானங்களால் தமிழர்களுக்கு நன்மையா?

தமிழாக்கம்: பரமேஸ்வரன்

கடந்த வாரம் பதினொரு தமிழ்க் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுக்கும் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பாகவும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் சிரியா விவகாரம் தொடர்பில் நியமிக்கப்பட்டமை போன்ற ஒரு சுயாதீன விசாரணைப்பொறிமுறையொன்றை ( International Independent Investigatory Mechanism) உருவாக்குமாறு கடிதம் எழுதியிருந்தன.

இந்தக் கடிதத்தில் சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி,விக்னேஸ்வரன் உட்பட எட்டு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டிருந்தனர்.

போர்நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக விசாரிப்பதில் இலங்கை தோல்வி கண்டுவிட்டது. ஜனநாயக வழிமுறைகளினூடாக நேர்மையான முறையில் பொறுப்புக்கூறலுடன் கூடிய முறையில் விசாரிப்பதற்குரிய சந்தர்ப்பம் காணப்படவில்லை எனப் புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருமாறு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பொருத்தமான செயல்திறன்மிக்க சாட்சியங்களை பெற்றுக்கொள்ளும் பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றை சிரியாவில் உருவாக்கப்பட்டமை போன்ற (**International Independent Investigatory Mechanism**) சாட்சியங்களை பெற்றுக்கொள்ளும் உப குழுவொன்றை பன்னிரண்டு மாத கால வரையறைக்குள் ஐ.நா. பொதுச்சபை பரிந்துரைக்க வேண்டுமென ஐ.நா பாதுகாப்புச்சபையிடமும் சர்வதேச சமூகத்திடமும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கோரியுள்ளனர்.

**இணை அனுசரணை நாடுகள், பெப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் நாற்பத்தாறாவது அமர்வில் கனடா, ஜெர்மனி, வடமசிடோனியா, மொண்டினீக்ரோ, பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வரவுள்ளன. இலங்கை ஏற்கனவே இந்தத் தீர்மானத்தை (இணை அனுசரணை) நிராகரித்துள்ளது.**

**இணை அனுசரணை வழங்குவதென்பது அரசியல் ரீதியாக சவாலான விடயம். இது ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பட்லெட்டின் இலங்கை தொடர்பாக பகிர்ந்துகொண்ட அவதானங்களுடன் இசைவது போன்றது என இலங்கை வெளிவிவகாரச்செயலர் ஜெயநாத் கொலம்பகே கூறினார் என எனது முன்னாள் சகபாடி நாமினி விஜேதாச கூறியுள்ளார்.**

ஐ.நா தொடர்பான தற்போதைய பிரச்சனைகளுக்கு தற்போது பதவியிலுள்ள அரசே காரணம். அதைப் பற்றி சொல்லத்தேவையில்லை. ஏற்கனவே முன்னைய அரசினால் இணை அனுசரணை வழங்கி, கொண்டு வரப்பட்ட தீர்மானத்திலிருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் பொருத்தமற்ற நேரத்தில் விலகியுள்ளது இலங்கை. இதனால் முன்னைய தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் மிகவும் குழம்பிப்போயுள்ளன. எதிர்ப்பு ஆரவாரம் நடைமுறையில் ஒத்துவராது. அரசாங்கத்தின் தவறான சில நகர்வுகள், வருகிற மாதங்களிலோ, வருடங்களிலோ இலங்கையை ஒரு இக்கட்டான நிலையை நேருக்குநேர் சந்திக்கும் சூழமைக்கு கொண்டு வரக் கூடும். இம்முறை ஜெனீவா அமர்வு ஒரு சமராகவே இருக்கும்.

> சிங்களத் தலைமைத்துவத்தை அச்சுறுத்தி பணிய வைக்க முடியாது. அத்துடன் ஜெனிவாவுக்கோ வோஷிங்கடனுக்கோ அல்லது அருகாமையிலுள்ள இந்தியாவுக்கோ ஓடுவதற்காக சிங்கள மக்கள் பெரும்பான்மைப்பலத்துடன் இந்த அரசாங்கத்தை பதவியில் அமர்த்தவில்லை என்பதையும் தமிழ் அரசியல்வாதிகள் உணரவேண்டும்.

மிதவாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட தீவிர தமிழ் தேசியவாதிகளான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சி.வி.விக்னேஸ்வரனும் இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானம், அதற்கு இரு தடவைகள் வழங்கப்பட்ட கால அவகாசம் என்பவற்றின் மூலம் முன்னைய அரசு நாட்டைக் காட்டிக்கொடுத்து விட்டது எனக் கூறுகின்றனர் இப்போதைய ஆட்சியாளர்கள். ஆனால் இப்போதைய ராஜபக்சக்களின் ஆட்சிதான், சர்வதேசரீதியில் புலம்பெயர் தமிழர்களால் இலங்கைக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்ளவும் வழிவகுத்துள்ளது.**

மேற்குலகின் ஆதரவுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை, முன்னைய மஹிந்த ஆட்சியில் இடம்பெற்றதை விட இலகுவாக இப்போதைய ராஜபக்ச அரசாங்கம், சீனாவின் தனிப்பட்ட பலத்த ஆதரவுடன் தூக்கி வீசி விடும். அத்துடன் இறுதிப் போரில் நடைபெற்றது எனக் கூறப்படும் இனப்படுகொலை தொடர்பான விடயமும் முடிவுக்கு வந்து விடும். தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களத்தலைமைத்துவத்தை அச்சுறுத்தி பணிய வைக்க முடியாது .அத்துடன் ஜெனீவாவுக்கோ வோஷிங்கடனுக்கோ அல்லது அருகாமையிலுள்ள இந்தியாவுக்கோ ஓடுவதற்காக சிங்கள மக்கள் பெரும்பான்மைப்பலத்துடன் இந்த அரசாங்கத்தை பதவியில் அமர்த்தவில்லை என்பதையும் தமிழ் அரசியல்வாதிகள் உணரவேண்டும். ■




மாயன்

புதிர் 28

தீபவர்மனுக்கு எதுவுமே புரியவில்லை. சுற்றிலும் மலைகளும், ஆறுகளும், பசுந்தரைகளுமாக கண்ணுக்கு முன்னே தென்பட்ட இடம் புதிதாக இருந்தது. ஆயினும் நிச்சயமாக அது அற்புதத் தீவல்ல என்று உறுதியாகத் தெரிந்தது. தனக்கு முன்னால் மாயக்கண்ணாடிக்குள் இறங்கிய பவளராணியும் அருகில் எங்கேனும் இருக்கக்கூடும் என்று தேடினான். ஆனால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பவளராணியைக் காணவில்லை.

தாகம் எடுத்தது. ஆவலோடு ஓடிச் சென்று அருகில் உள்ள ஆற்றில் நீர் குடிக்கவென நினைத்தான். நடக்கவே இயலாமல் இருந்தது. உடல் பயங்கரமாக வலித்தது.

தன் முழுச் சக்தியையும் பிரயோகித்து, ஆற்றின் அருகே தவழ்ந்து சென்றான் தீபவர்மன். அப்படியே முகத்தை நீரோடுவைத்து , தண்ணீரை அவன் பருகச் சென்றபோது, திடீரென தண்ணீர் உறைந்து கட்டியாகி விட்டது. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தலையைத் திருப்பிப் பார்த்தான் , எவருமில்லை. வானத்தில் சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. 'காலநிலை அனலடிக்கும் போது, இந்த ஆறு ஏன் திடீரென உறைந்து போனது?' என்று தன்னைத் தானே அவன் கேட்டுக் கொண்டான். பதில் அருகில் இருந்த பாறாங்கல்லில் கிடைத்தது. அதில் ஏதோ எழுத்துக்கள் சூரிய ஒளியில் பட்டு மின்ன, அதை வாசிக்க முயன்றான் தீபவர்மன.

"மானிடர்களே, இது ஒரு மாயச்சுனை. உங்கள் தாகத்தைத் தணிக்க வேண்டுமானால் இந்தப் பாறையின் மறு பக்கத்தில் உள்ள புதிருக்கு உரத்த குரலில் சரியான விடையைச் சொல்ல வேண்டும். அப்போது உறைந்த நீர் மீண்டும் ஆறாகப் பாயும். தவறாகப் பதிலளித்தால் நீங்கள் இராட்சதனாக மாறிவிடுவீர்கள்"

அந்தப் பாறையில் இப்படி எழுதியிருக்க தீபவர்மன், இன்னும் கொஞ்சம் அசைந்து, பாறையின் மறுபக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் புதிரை வாசிக்கத் தொடங்கினான்.

**"அரண்மனை ஒன்றில் இருந்து சம நிறையுடைய மூன்று நாணயமுடிச்சுக்களை ஒருவன் திருடிவிட்டான். அரச காவலர்களிடம் இருந்து தப்பிக்க அவன் மூன்று பணமுடிச்சுக்களோடும் ஓடத் தொடங்கினான். ஆனால்வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது. ஆற்றைக் கடக்க ஒரு படகில் ஏறினான். ஆனால் படகில் 100 தூக்கு நிறைக்கு மேல் ஏற்றமுடியாது.**

**(தூக்கு என்பது பண்டைய கால தமிழர்கள் பொருளை நிறுக்கப் பயன்படுத்திய ஓர் அலகு. ஒரு தூக்கு என்பது இப்போதைய 1.7 கி.கிராமுக்கு சமம்)**

**அவன் மட்டும் 75 தூக்கு நிறை. பணமுடிச்சுகள் ஒவ்வொன்றும் தலா 10 தூக்கு நிறை கொண்டவை. அப்படியானால் மொத்தமாக இப்போது 105 தூக்கு நிறையோடு பயணிக்க வேண்டி இருக்கும். ஆனால் படகின் கொள்ளளவை விட 5 தூக்கு நிறை அதிகமாக இருந்ததால் அவன் பயணிக்க முடியாதிருக்கும். பண முடிச்சுக்களை அவன் ஆற்றில் போட்டால் மறுகணமே அவற்றை மீன்கள் கடித்துக் குதறிவிடும். எனவே எப்படியும் அவற்றைப் படகில் தான் கொண்டு செல்ல வேண்டும். அவன் எப்படி ஆற்றின் மறுகரைக்கு மூன்று பணமுடிச்சுக்களையும் ஒரே சமயத்தில் கொண்டு, தானும் போயிருப்பான்?"**

தீபவர்மன் யோசிக்கத் தொடங்கினான்.

( புதிர்கள் தொடரும்)



## மூட நம்பிக்கையால் நடந்த கோரம்

## நிர்வாணமாகக் கிடந்த சடலங்கள்

# பெண் பிள்ளைகளை கொன்ற பெற்றோர்

## தம் மகள்கள் உயிர்த்தெழுவார்கள் என்று கதறல்

மயூ

தங்கள் மகள்மாரை மூட நம்பிக்கையால், துடிக்கத் துடிக்க பெற்றோரே கொலை செய்த பதற வைக்கும் சம்பவம் இந்தியாவின் ஆந்திராவில் நடந்திருக்கின்றது. ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய குடும்பம் அது . தந்தை, தாய், இரு மகள்கள் கொண்ட அந்தக் குடும்பத்தில் அனைவரும் நன்கு படித்தவர்கள். தந்தை புருஷோத்தம் நாயுடு, மதனபள்ளி பெண்கள் கல்லூரியின் துணை முதல்வராக இருக்கின்றார். தாய் பத்மஜா கல்வி நிலையம் ஒன்றின் முதல்வராகவும், கணிதப் பேராசிரியராகவும் இருக்கின்றார். மூத்த மகளான 27 வயதான அலேக்யா, பட்டதாரி. இவர் போபாலில் வேலை செய்து வந்தார். இரண்டாவது மகளான 22 வயது திவ்யா இசைக் கல்லூரி ஒன்றில் கற்கை மாணவி. இந்தக் குடும்பம் கடந்த ஒகஸ்ட் மாதம் ஷிவ் நகரில் புதிய வீடு ஒன்றைக் கட்டி அவ்வீட்டில் குடி புகுந்தது. அதுவரை போபாலில் இருந்த அலேக்யாவும், கொரோனா முடக்கம் காரணமாக குடும்பத்தினரு டன் வந்து தங்கினார். புதிய வீட்டுக்கு குடி பெயர்ந்த பின்னர் தான்அந்தக் குடும்பத்தில் பிரச்சினைகள் ஆரம்பித்தன.

கடந்த சில மாதங்களாக அந்த வீட்டில் வழக்கத்துக்கு மாறான நடவடிக்கைகள். புருஷோத்தம் நாயுடுவும், பத்மஜாவும் அதிகமான ஆன்மீக ஈடுபாடு கொண்டவர்கள். வீட்டில் அடிக்கடி பூசைகள் நடைபெற்றிருக்கின்றன.

ஆனால் அந்தப் பூசை வழிபாடுகளில் அந்தக் குடும்பத்தினரைத் தவிர அயலில் இருந்த எவரும் பங்குபற்றவில்லை. கடந்த 24 ஆம் திகதி நள்ளிரவு அந்த வீட்டில் இருந்து வித்தியாசமான சத்தங்கள் அயலவர்களுக்குக் கேட்டன. அலறல் சத்தங்களைக் கேட்டு அச்சம் கொண்ட அவர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதற்கிடையே புருஷேத்தம் தனது நண்பர் ராஜுஅக்கு தனது பெண் பிள்ளைகள் இருவரையும் தமது மனைவி அடித்துக் கொன்றுவிட்டார் என்று தொலைபேசியில் கூறியிருக்கிறார். ராஜு பதறியடித்து அங்கு சென்றபோது அந்தத் தம்பதி அவரை வீட்டின் உள்ளே அனுமதிக்கவில்லை. ராஜு உடனடியாக பொலிஸாருக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார். பொலிஸார் அங்கு சென்றபோது காலம் கடந்துவிட்டது.

அந்த வீட்டுக்குள் பொலிஸார் சென்ற போது, பத்மஜா அவர்களை உள்ளே விடவில்லை. “பூசை நடக்கின்றது காலணிகளுடன் உள்ளே வராதீர்கள்” என்று சண்டையிட்டார். அவரை மீறி உள்ளே சென்ற பொலிஸாருக்கு, அங்கு கண்ட காட்சிகள் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தன.

வீட்டின் கீழ்த் தளத்தில் இருந்த பூசை அறைக்குள் ஒரு இளம் பெண்ணின் உடல் இரத்த வெள்ளத்தில் கிடந்தது. வீட்டின் மேல் தளத்திலும் இன்னொரு பெண்ணின் உடல். நிர்வாண நிலையில் கிடந்த அந்த உடல்கள் அலேக்யா மற்றும் திவ்யாவுடையவை. அதன்பின்னர் நடந்த பொலிஸ் விசாரணைகளில் நெஞ்சை அதிர வைக்கும் தகவல்கள் வெளிவந்தன.

புருஷோத்தம் நாயுடுவும், பத்மஜாவும் ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தமையே இந்தக் கோரத்துக்குக் காரணமாகியுள்ளது. பெண் பிள்ளைகளை நரபலி கொடுத்து பூசை செய்தால் ஆயுள் கூடும் என்றும், பூசையின் பின்னர் மகள்மார் மீண்டும் உயிர்ந்தெழுவார்கள் என்றும் யாரோ ஒரு சாமியார் சொன்னதை நம்பி அவர்கள் இந்தக் கோரச் செயலில் ஈடுபட்டிருக்கின்றனர். கடந்த 24 ஆம் திகதி இரவு அந்த வீட்டில் பூசை ஒன்று நடத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பூசையில் குடும்பத்தினர் மட்டும் பங்குபற்றியிருக்கின்றனர். பூசையின் முடிவில் இளைய மகள் திவ்யாவை திரிசூலம் மூலம் பெற்றோர் இருவரும் குத்திக் கொலை செய்திருக்கின்றார்கள். மூத்த மகள் அலேக்யாவின் வாயில் செப்புத் தகடு ஒன்றை வைத்து அடைத்து உடற்பயிற்சி செய்யும் ‘தம்பிள்சினால்’ தலையில் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். ஆடைகளற்றுக் கிடந்த இரு உடல்களின் மீதும்



சிவப்பு நிறத் துணி போர்த்தப்பட்டிருந்தது. இவர்கள் கடந்த சில நாள்களாக யாரையும் தமது வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை. சம்பவம் நடந்த போது குடும்பத்தினரைத் தவிர யாரும் வீட்டில் இல்லை. கொலை நடப்பதற்கு முன்னதாக அவர்கள் சில பூசைகளைச் செய்துள்ளனர் என்பது அங்கிருந்த பொருள்களின் மூலம் புலப்பட்டது.

“அந்தக் குடும்பம் ஆன்மிகத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தது போன்று தெரிகின்றது. தங்கள் குழந்தைகள் உயிர்த்தெழுவார்கள் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது எப்படி நடக்கும் என்பதை அவர்களால் விளக்க முடியவில்லை” என்கிறார் மதனப்பள்ளி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ரவி மனோகர் ஆச்சாரி.

புருஷோத்தம் நாயுடு, பத்மஜா ஆகியோரின் நடத்தையால் பொலிஸார் குழப்பம் அடைந்திருக்கின்றனர். பொலிஸார் முதல் முதலில் வீட்டுக்குள் நுழைந்தபோது பூசை அறைக்குள் காலணிகளுடன் வராதீர்கள் என்று கூறும் அளவு தெளிவான மனநிலையில் இருந்த அந்தத் தம்பதியினர், பின்னர் குழப்பமான வகையில் நடந்து கொள்கின்றனர். பத்மஜாவுக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொண்டபோது “கொரோனா பரிசோதனைக்கான மாதிரியை நான் தர மாட்டேன். ஏனெனில் சிவனுக்கு அதில் உடன்பாடு இல்லை. முடியாது. நீங்கள் யார்? நான் தான் சிவன். என்னுடைய உடலிருந்து தான் கொரோனா வந்தது. தடுப்பூசியே இல்லாமல் கொரோனா அடுத்த மார்ச்சில் அழிந்துவிடும்.” என்று அவர் அடம் பிடித்திருக்கிறார்.

“என் பெண் பிள்ளைகளின் உடல்களை அகற்றாதீர்கள். அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்”, என இறந்தவர்களின் தாய் கூறுவதை வைத்தே அவர்களது மன நிலையை புரிந்து கொள்ள முடிகின்றது என்கிறார் பொலிஸ் கண்காணிப்பாளர் ரவி மனோகர் ஆச்சாரி.

அந்த வீட்டில் இந்துக் கடவுள்களின் படங்களுக்கு இடையே மர்மமான சில படங்களும் இருந்தன என்று பொலிஸார் கூறுகின்றனர். சொந்த பெண் பிள்ளைகளை பலி கொடுத்து பூசை செய்தால் ஆயுள் பன்மடங்கு அதிகரிக்கும், நோக்கு வர்மம் உள்ளிட்ட பல கலைகளும் கைவசமாகும் என்று இந்தத் தம்பதிகளுக்கு ஆசையூட்டப்பட்டிருந்தது என்பதும் விசாரணைகளில் தெரியவருகின்றது.

பத்மஜாவுக்கு வலிப்பு நோய் இருந்திருக்கின்றது. அதற்குப் பரிகாரம் செய்து நோயை மாற்றுவதற்கே அவர்கள் முதலில் சாமியார்களை நாட்டியிருக்கின்றனர். அதற்கான பூசைகளை வீட்டில் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். அவ்வாறு அறிமுகமான சாமியார் ஒருவரின் கதையை நம்பியே அவர்கள் இந்தக் கோரக் கொலையைச் செய்திருக்கிறார்கள் என்று முதல் விசாரணைகளில் தெரிய வந்திருக்கின்றது. “எனக்கு புருஷோத்தமை நன்றாகத் தெரியும். அவர் இப்படி ஒரு காரியம் செய்திருப்பதை நம்பவே முடியவில்லை.’’ என புருஷோத்தம் பணிபுரியும் கல்லூரி யில் பணிபுரியும் சுரேந்திரா அதிர்ச்சியுடன் கூறுகிறார். அவர்களின் இரு பெண் பிள்ளை கள் கூட இந்தப் பூசை விடயங்களை நம்பியிருக்கிறார்கள் என்றே தெரிகின்றது. கொலையாவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே இளைய மகளின் சமூக வலைத்தளக் கணக்கில் புரியாத விடயங்களை அவர் பதிவிட்டிருக்கின்றார். “சிவன் வந்துவிட்டார். வேலை முடிந்தது” என்பதுபோன்ற வித்தியாசயமான பதிவுகளை அவரது இன்ஸ்ட்ராகிராம் கணக்கில் காண முடிகின்றது.

கொலை நடந்த தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னரான அந்த வீட்டின் பாதுகாப்புக் கமராவின் பதிவுகள் பொலிஸாரால் அவதானிக்கப்பட்டுள்ளன. அதில் பெற்றோரும், மகள்களும் ஆடைகளற்று வேப்பிலைகளை அணிந்தவாறு நள்ளிரவில் வீட்டைச் சுற்றிவரும் பதிவுகளும் இருந்திருக்கின்றன. அதேநேரம் இரண்டாவது மகள் திவ்யா முன்னர் ஒருமுறை மாடியில் இருந்து குதித்து உயிரை விட முயன்றிருக்கின்றார் என்றும் இப்போது தெரிய வந்துள்ளது.

வீட்டின் பாதுகாப்புக் கமரா பதிவுகள் பொலிஸாரால் ஆராயப்பட்டிருக்கின்றன. அனைவரும் வீட்டுக்கு வெளியில் தான் பாதுகாப்புக் கமராக்களை வைத்திருப்பார்களே தவிர, பூஜை அறையில் வைப்பதில்லை என்று பொலிஸ் கண்காணிப்பாளர் ரவி மனோகர் கூறுகிறார். அதனால் வீட்டின் உள்ளே என்ன நடந்தது என்பதைச் சரியாகக் கண்டறிய முடியவில்லை.

அந்த வீட்டில் இருந்து தினமும் இரவில் உக்கிரமான சத்தங்கள் கேட்கும் என்று அயலவர்கள் அச்சத்துடன் கூறுகின்றனர். ஆனால் இந்தத் தம்பதியினர் சாய்பாபாவை வணங்குவதை வழக்கமாகக் கொண்டவர்கள், அமைதியானவர்கள் என்று அவர்களது உறவினர்கள் கூறுகின்றனர். அவர்கள் இவ்வாறு செய்வார்கள் என்பதை தங்களால் நம்ப முடிய வில்லை என்றும் அதிர்ச்சியுடன் கூறுகின்றனர் உறவினர்கள்.

பத்மஜாவின் உறவினர்கள் மத்தியில் இன்னொரு கதையும் உலாவுகின்றது. அண்மையில் பத்மஜா வசம் 15 கோடி ரூபா பெறுமதியான சொத்து வந்தது. சொத்துக்காக இந்தத் தம்பதியினரை சிலர் வசியம் செய்து இந்தக் கொடூரச் செயலைச் செய்யத்தூண்டியிருக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த வீட்டுக்கு அண்மையில் வேறு யார் யார் வந்து சென்றார்கள் என்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். 30க்கும் மேற்பட்டவர்கள் இப்போது பொலிஸாரின் விசாரணை வளையத்தில் இருக்கின்றார்கள். முதல் குற்றவாளியாக புருஷேத்தம் நாயுடுவும், இரண்டாவது குற்றவாளியாக பத்மஜாவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் தெளிவான தகவல்கள் கிடைக்க இன்னமும் சில நாள்கள் ஆகலாம் என்கின்றனர் பொலிஸார்.

என்னதான் கூறப்பட்டாலும், மூட நம்பிக்கையால் இரு இளம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. அதற்குக் காரணமானவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான மூட நம்பிக்கைகளைப் பரப்பும் சாமியார்களையும் தண்டிக்க வேண்டும் என்பதே அனைவரதும் ஒருமித்த கருத்தாக இருக்கின்றது.



## விதானையார் வீட்டு முற்றம்

வடகோவை வரதராஜன்

# தென்னம்பிள்ளை தாய் மரத்தெரிவும் பர்வதம் மாமி சுட்ட பனங்காய்ப் பணியாரமும்

கோவில் கூட்டத்துக்கு போக வேட்டி கட்டிக்கொண்டிருந்தேன். மனைவி, "செல்லையா மாமா நேற்று ரெண்டுதரம் வந்து தேடிக் கொண்டு போனவர்" என்றார்.

"தென்னம்பிள்ளை நட்டு முடிக்குமட்டும் இந்தாள் என்னை இருக்க விடாது" என்று புறுபுறுத்தேன் .

"அவர்தானே 'திறம் மாப்பிளை எண்டு உங்களுக்கு என்னைக் கட்டி வைச்சவர், அனுபவியுங்கோ" என்று ஒரு கடி வைத்தார் .

"இஞ்சாரப்பா ! உம்மைத்தான் அவர் எனக்கு கட்டி வைச்சவர்"

"சரி சரி மினைக்கெடாமல் போங்கோ. பாவம் அந்தாளும் உங்களிட்டை ஏதோ கனக்க இருக்கெண்டு நம்பிக் கொண்டிருக்குது "

"முற்றத்து மல்லிகை மணக்காதப்பா .
சீப்பை ஒருக்கா எடும் "

" உங்களுக்கேன் சீப்பு? மினக்கடாமல் போங்கோ. பாவம் மாமா திரும்பவும் தேடிக் கொண்டு வந்திடுவார்"

ஒருபோதும் நான் வென்றதில்லை. வாயை மூடிக் கொண்டு மோட்டார் சைக்கிளை எடுத்தேன் .

செல்லையா அண்ணை, சிங்கத்தைக் கொண்டு தென்னம்பிள்ளைகளை நடுவித்துக் கொண்டிருந்தார். பர்வதம் மாமி அடுக்களையில் இருந்து வெளியே வந்து,

"வாங்கோ விதானையார் ! பாஞ்சடிச்சு போகிடாதேங்கோ . தேத்தண்ணி போடுறன்" என்றார்.

"நேற்று ரெண்டு தரம் உன்னட்டை வந்தனான் .மருமோள் சொல்லேல்லையே ?" என்றார் செல்லையர்.

"சொன்னவ, சொன்னவ. அண்ணை ! எங்கடை சித்தப்பா, வாழ்க்கையைக் கரைச்சுக் குடிச்ச மனுசன். அவர் சொல்லுவர் 'பெஞ்சனுக்கு பிறகு வாற ஒவ்வொரு நாளும் போனஸ் நாள்கள் . அந்த ஒவ்வொரு நாளையும் பிரயோசனமாய்க் கழிக்க வேணுமெண்ணுவர் .

இருக்கிற நாளை பிரயோசனமா எங்களாலை செய்யக் கூடியதைச் செய்வம் அண்ணை"

" சித்தப்பா எண்டு பார்லிமென்ற் நடராசாவையோ சொல்லுறாய் .அந்தாள் சொன்னால் சரியாய்த்தான் இருக்கும். அது கிடக்க இந்த பிள்ளையளைப் பார், சரியான பிள்ளையளோ எண்டு" .

அடித்தண்டு பருத்த, கீற்றிலை பிரிந்த தென்னம் நாற்றுக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன .

ஒவ்வொன்றாகத் தூக்கிப் பார்த்து அடித்தண்டு நலிந்த , வேர் வளர்ச்சி குறைந்த மூன்று பிள்ளைகளை எடுத்துக் கழித்து வைத்தேன்.

" அடுத்தமுறை நீ சொன்னமாதிரித்தான் நாத்து மேடை போடவேணும்"

"அப்பதான் எங்களுக்குப் பிடிச்ச மரத்துப் பிள்ளைகளை நாங்களே பெற்றுக்கொள்ளலாம்"

"மெய்தான். போனமுறை ஏதோ தாய் மரத்தை தெரிவு செய்கிறது எண்டாய் .
மிச்சத்தையும் சொல்லன் ."

" அண்டைக்குச் சொன்னமாதிரி"

1. தாய்மரம் 25 வருசம் வயசானதாக இருக்கவேணும்.
2. பெரிய நடுத்தண்டு உள்ள மரமாய் இருக்கவேணும்.
3. தண்டில ஓலைத்தழும்புகள் நெருக்கமாய் இருக்கவேணும் .
4. இப்படி இருந்தால்தான் அதிக ஓலைகளை உற்பத்தி செய்த மரம் எண்டது தெரியவரும்.
5. உச்சி நிரம்ப ஓலைகள் இருக்கவேணும்
6. ஓலைகள் கடும் பச்சை நிறமாக இருக்கவேணும்.

இதற்கிடையில் பர்வதம் மாமி தேனீர் கொண்டு வந்தார். மஞ்சள் சேலை கட்டி உச்சிக்கொண்டை போட்டு அம்மன் சிலையாகவே தெரிந்தார் .

பளபள என மினுங்கும் பித்தளை மூக்குப் பேணியில் செல்லையருக்கும் , கைபிடி போட்ட செரமிக் கப்பில் எனக்குமாகத் தேனீர் வந்தது .

" என்ன; தம்பிக்கு பீங்கானில் கொண்டு வாறீர் ?"

"விதானையாருக்கு கொதிக்க கொதிக்க குடிக்க வேணுமாம். சில்வரிலை கொண்டுவந்தால் இந்த மழைக்குளிருக்கு ஆறிப் போகிடுமெல்லே"

"நீரும் நல்லாய்த்தான் விதானையாற்றை பழக்க வழக்கங்களை அறிஞ்சு வைச்சிருக்கிறீர்" என்றார் செல்லையர் . பர்வதம் மாமி நாணிச் சிரித்தார் .

குடித்து முடிந்த தேனீர் குவளைகளை வாங்கிய பர்வதம் மாமி

"விதானையார் ! வேட்டியிலை மாப்பிளை மாதிரி இருக்கிறியள் " என்றார்.

உடனே செல்லையர்


"நீர் தம்பியை நாவூறு பாக்காதையும் " என்றார்.

"நான் ஏன் நாவூறு பாக்கிறன். உள்ளதைத்தானே சொன்னனான்"

"உண்மைதானப்பா , வைரப்பனைக்கு வேட்டி கட்டி விட்டமாதிரி கன கம்பீரமாய் இருக்கு" என்று தனது நளினத்தைத் தொடங்கினார் செல்லையர்.

நான் நேரத்தைப் பார்க்கவும் , செல்லையர் "மிச்சத்தையும் சொல்லிப்போட்டு போ மோனை" என்று இறங்கி வந்தார் . "மிச்சத்தையும் ஒவ்வொண்டாய் சொல்லுறன் கேளுங்கோ"

1. ஓலைகள் வட்டு முழுவதும் வட்டவடிவில் பரம்பி இருக்கவேணும் .
2. ஒரு குலையில் கனக்க காய்கள் இருக்கவேணும்
3. காய்கள் ஒண்டு தொடக்கம் இரண்டு கிலோ உள்ளவையாக இருக்க வேணும்



3

4. காய்கள் ஒழுங்கான வடிவத்தில இருக்க வேணும்
5. பொச்சு குறைவாகவும் உரி தேங்காய் அதிகமாகவும் இருக்கவேணும்
6. முழுத்தேங்காயின் பருமன் பெரிசா இருக்க வேணும் .
7. மரத்திலை இருந்து கீழ விழேக்க உடையாமல் இருக்க வேணும் .
8. ஒரு வருசத்துக்கு 100 காயாவது காய்க்கிற மரமாய் இருக்க வேணும் .

"உவளவு விசயம் இருக்கே .அப்ப மரத்தை பொம்பிளை பாக்கிறமாதிரி பாத்தெல்லோ தெரியவேணும். அதுசரி உந்தத் தாய்மரத்தை எங்கை போய்க் கண்டுபிடிக்கிறது ?"

"நான் நாத்து மேடை போட்ட முறையைச் சொல்லுறன் கேளுங்கோ. நான் தெரிஞ்ச ஆக்கள் வீட்டுக்கு போகேக்க , அங்கை இருக்கிற மரம் எல்லாத்தையும் பார்ப்பன். மேலே சொன்ன மாதிரி தாய்மரம் அங்க இருந்தால், அவையளைக்கேட்டு அதில கொஞ்சத் தேங்காய் நெத்துக்களை வாங்குவன் .

இப்பிடிப் போற போற இடமெல்லாம் பார்த்து வாங்கி 50 நெத்துகள் சேர்த்து மேடை போட்டனான்"



"உதுதான்ராப்பா விதானைப் புத்தி எண்ணிறது. விதானை கேட்டால் ஆரும் மாட்டன் எண்டு சொல்லுவங்களே? நான் கேட்டால் ஓமாமே ? அதுசரி தென்ன மரங்களில பல சாதியள் இருக்கே?

என்னமோ மூண்டு வருசத்தில்லை காய்க்கிற மரமெண்டு விக்கிறாங்கள்"

" ஊரிப்பட்ட சாதியள் இருக்கண்ணை. தென்ன மரத்தின்ரை உயரத்தை வைத்துத்தான் இனம் பிரிக்கிறது.

1) நெட்டை
2 ) குட்டை
3 ) நெட்டை, குட்டை கலப்பு
4 ) செவ்விளநீர் மரம் .

பெரும்படியாய் இப்பிடிப் பிரிக்கலாம் "

" அப்ப கட்டை கனகுவின்ரை சந்ததி மாதிரியும் , நெடுவல் வைத்தியின்ரை சந்ததி மாதிரியும் எண்டு சொல்லன் "

" அதேதான் . நெடுவல் வைத்தியின்ரை பேரப் பெட்டையை கட்டைக் கனகுவின்ரை பேரன் கூட்டிக் கொண்டு ஓடினவன் எல்லோ அவைக்குப் பிறக்கிற பிள்ளையள்தான் , நெட்டை , குட்டை , கலப்பு.

இந்த பெரும் பிரிவுக்கு கீழை நானா, பூமிலா, போதிரி , ஒன்றியாக்கா , ரிப்பிக்கா , ரெஜியா, பராபொல், டிக்கிரிபொல், நவசி , கொன்தெம்பிலி, நவசி தெம்பிலி எண்டு ஊரிப்பட்ட இனங்கள் இருக்கண்ணை.

இதைவிட யாழ்ப்பாணத்திலை , சூரியகாந்தி , சந்திரகாந்தி, ஆயிரம்காச்சி, ஐநூறு காச்சி, மாலைதீவு எண்டு பல உள்ளூர் இனங்களும் இருக்கண்ணை.

நாங்கள் இதெல்லாம் திறம் இனம் என்று வாயைப் பிளக்கிறம் .

ஆனால் தமிழ்நாட்டிலையும் கேரளாவிலையும் 'யாழ்ப்பாணத் தேங்காய்' எண்ட இனம்தான் கிராமப் புறங்களில் பேமஸ் ."

"அப்பிடிச் சொல்லு .எங்கடை பெருமை எங்களுக்குத் தெரியாது .

இந்த ஒவ்வொரு இனம் பற்றியும் எப்பன் சொல்லன்

"நான் நேரத்தைப் பார்த்தேன் .கூட்டம் தொடங்கும் நேரம் அண்மித்துக் கொண்டிருந்தது .

அப்போது பர்வதம் மாமிவந்து

"விதானையார் நாளைக்கும் வருவியளோ" எனக் கேட்டார் .

"ஏனப்பா, என்ன விசயம்?" இது செல்லையர் .

"நாளைக்கு பனங்காய்ப் பணியாரம் சுடப்போறன். விதானையார் வந்தா சூடாய்க் குடுக்கலாம் எண்டுதான்"

" உமக்கென்ன விசரே ? பனங்காய்ப் பணியாரத்தை சுட்டு அடுத்தநாள் சாப்பிட்டால்தான் ருசியப்பா. அப்பதான் எண்ணெய் எல்லாம் இறங்கி வாய்க்கு ருசியாய் இருக்கும் . நீர் இண்டைக்கே சுடும் . நாளைக்கு தம்பி வந்து சாப்பிடட்டும் .கொஞ்சம் எடுத்து வையும் , மருமோளுக்கும் பிள்ளையளுக்கும் குடுக்கவேணும் ."

" இவருக்கு மருமோளெண்டா பெரிய உசத்தி"

என்று நாடியை இடித்தா பர்வதம் மாமி . இவைகள் ஒன்றும் காதில் விழாதவன் மாதிரி நான் அக்சிலேற்றரை முறுக்க மோட்டார் சைக்கிள் சீறிப்பாய்ந்தது.

# மாங்குளம் மாநகர் கருகிய கனவு

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்




கி.பி. 1990 களில் நல்லூர் வளாகத்தில் விடுதலைப்புலிகளால் 'தமிழீழக் கண்காட்சி' நடத்தப்பட்டதைச் சிலராவது இன்னும் நினைவில் வைத்திருக்கக் கூடும். அதில் முக்கியமான ஒன்று மாங்குள நகர்த்திட்டம். வடக்கின் அபிவிருத்தி, சமனிலையான நிர்வாகப் பரவலாக்கம், தொடர்பாடல், குடிசனப் பரம்பல் ஆகியனவற்றை மனதிற்கொண்டு இந்தத் திட்டத்தைப் புலிகள் முன்மொழிந்திருந்தனர்.

முக்கியமாக, வடக்குக்கான பெருநகரொன்றை உருவாக்குவதற்குரிய விரிந்த நிலப்பரப்பும், நீர்வளமும் மாங்குளத்தில் உண்டு. வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களையும் குறுக்கும் மறுக்குமாக இணைக்கும் (வவுனியா - கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மறுபக்கமாக முல்லைத்தீவு, மன்னார்) பெருஞ்சாலைத் தொடர்பும் புவியியல் அமைவும் மாங்குளத்தையே சாத்தியமாக்குகின்றன. யாழ்ப்பாணத்துக்குள் அடர்த்தியடைந்து கொண்டிருக்கும் மக்களை இழுவிசைப்படுத்தக்கூடிய அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து தள்ளுவிசைப் படுத்தினால் அதைக் கொள்ளக்கூடிய நிலவெளி மாங்குளத்திலேயே உள்ளது. மேலும் பொருளாதார மையங்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான இடத் தெரிவாகவும் மாங்குளம் அடையாளம் காணப்பட்டது.

இதெல்லாம் எழுந்தமானமான எடுகோளல்ல. ஆய்வு ரீதியான முடிவு. இது தனியே புலிகளால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவோ, திட்டமோ அல்ல. அந்த எண்ணக்கருவை அப்போது முன்னிறுத்தியவர்கள் பொருளியல் மற்றும் சமூகவியல், சுற்றாடல், நகர அபிவிருத்திசார் அறிவுத்துறையினரே. இது பொருத்தமுடையது, வரவேற்கக் கூடியது, சரியானது எனப் புலிகளும் இதை அங்கீகரித்திருந்தனர். இந்தக் கருதுகோளை இன்றும் பரந்த மனதோடு வரவேற்பவர்கள் உண்டு. அவர்கள் தமிழ்ச்சமூகத்தின் சிறப்பான எதிர்காலம் குறித்து சிந்திப்போர். அதனால் இதை அடிக்கடி நினைவுறுத்திப் பேசுகின்றனர்.

ஆனால், அவர்களால் எதையும் செய்ய முடியூாது. ஏனென்றால் தீர்மானம் எடுபதற்கு அவர்களிடம் அதிகாரமில்லை. ஆனால், அரசும், புலிகளை அரசியல் முதலீடாக்கும் சக்திகளும் இதைச் சுலபமாகவே மறந்து விட்டன. இல்லையென்றால் புலிகள் தோற்கடிக்கப்பட்டு, யுத்தம் முடிந்த பிறகு மாங்குளத்தைப் பற்றி இப்படி ஒரேயடியாக மறந்திருப்பார்களா? அரசாங்கம்தான் தமிழ் மக்களின் விடயங்களில் அசிரத்தையாகவும் ஒத்துழையாமலும் இருக்கும் எனலாம். தமிழ்த்தரப்பினர் அப்படியிருக்க முடியுமா?

உங்களுக்குத் தெரியும், புலிகள் இல்லை என்ற பின்னர் உடனடியாகவே எல்லாம் தலைகீழாகின என்பதை. அதில் மாங்குளமும் ஒன்றாகியது. மாங்குள நகர்த்திட்டம் அப்படியே கைவிடப்பட்டது. இப்பொழுது மாங்குளத்தில் மாடுகள் படுத்து உறங்குகின்றன. பெரியதொரு படைமுகாமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையும் உள்ளன. மாகாணசபைக்கென ஒதுக்கப்பட்ட பெருமளவு காணி மந்தும் புதருமாகிக் காடு பத்திப்போயுள்ளது. அதில் ஒரு பகுதியில் இப்பொழுது யார் யாரோவெல்லாம் எதையோவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். மீதியும் விரைவில் காணாமல் போய் விடும். அப்படிப் போனால் நல்லது என்று நேர்த்தி வைப்போரும் உண்டு. இல்லையென்றால், மாங்குளத்துக்குப் போய் அங்கே வேலை செய்ய வேண்டும் அல்லவா! அது எவ்வளவு 'றிஸ்க்'கான காரியம்? மாங்குளத்தில் நிர்மாணித்திருக்க வேண்டிய மாகாண சபைக் கட்டடத்தை 2010 இல் அவசர அவசரமாக கைதடியில் நிறுவினார்கள் டக்ளஸ் தேவானந்தாவும் அப்போதைய ஆளுநராக இருந்த ஜீ.ஏ.சந்திரசிறியும். மாகாண சபைக் கட்டடத்தை மட்டும் நிறுவிவிட்டு அதன் கீழான அமைச்சுகளையும் ஏனைய பணிமனைகளையும் யாழ்ப்பாணத்திலுள்ள குச்சொழுங்கைகளுக்குள் உள்ள வீடுகளுக்குள் வைத்துக்கொண்டனர். இந்தச் சூழ்ச்சிக்குப் பலியாகினார்கள் ஏனையோரெல்லாம். குறிப்பாக அதற்குப்பிறகு ஐந்து ஆண்டுகள் விக்கினேஸ்வரன் தலைமையில் ஆட்சி நடத்தியவர்களும் மாங்குள நகராக்கத்தைப் பற்றியும் மாகாணசபையை மாங்குளத்துக்கு இடம் மாற்றுவதைப் பற்றியும் சிந்திக்கவேயில்லை. எல்லோருக்கும் தமிழீழக் கனவு கைதடிப் பாலத்துக்கு உள்ளேதான். மிஞ்சிப் போனால் ஆனையிறவுக்குள்ளேயே!

இப்பொழுது மாங்குளத்தில் நகர நிர்மாணத்துக்கென அடையாளம் காணப்பட்ட காணிகளெல்லாம் பலராலும் கையகப்படுத்தப்படுகின்றன. இதில் அரசியல் அதிகாரமுள்ள தரப்புகளின் கைவிசை உச்சம். இதைக் கண்டும் காணாமலிருக்கின்றனர் அரச அதிகாரிகள். இப்படியே போனால் எதிர்காலத்தில் எந்தக் கொம்பராலும் மாங்குளத்தை நிமர்த்தவே முடியாது என்பது மட்டுமல்ல, இதை விட வேறொரு பொருத்தமான இடத்தை வடக் கின் புதிய நகருக்குத் தெரிவு செய்யவும் முடியாது. அப்படி வேறொரு இடமோ வேறொரு திட்டமோ இருந்தால் அதை அவர்கள் சொல்ல வேண்டும்.

ஆனால், 1990 இல் படையினரிடமிருந்து மாங்குளத்தை விடுவிப்பதற்காகப் புலிகள் சிந்திய ரத்தமும் செய்த தியாகமும் கொஞ்சமல்ல. அப்போதங்கே கரும்புலியாக லெப் கேணல் போர்க் வெடித்துச் சிதறினார். 65 க்கு மேற்பட்ட போராளிகள் உயிரிழந்தனர். பலர் கை, கால், கண் எனத் தங்கள் உடல் உறுப்புகளை இழந்தனர்.

இதற்கு முன்பு நான்கு மாதங்களாக நீடித்த முற்றுகையிலும் குறிப்பிட்டளவு போராளிகள் தம்முயிரைத் தியாகம் செய்திருந்தனர். இவை எவற்றுக்கும் இன்று எந்த மதிப்புமில்லை என்றாகி விட்டது! ஏனெனில் இந்தத் தியாகத்தைப் புரிந்து கொள்ளவோ இந்த மாதிரித் தியாகம் செய்யவோ தயாரில்லாதவர்களின் யுகம் இது என்பதால்தான் எல்லாமே தலைகீழாகி வருகின்றன.

இப்போதுள்ள சூழலில் மாங்குளத்திலோ அல்லது அதை அண்மித்த பிரதேசங்களிலோ புதிய குடியேற்றத் திட்டங்களை அரசாங்கம் திட்டமிடலாம். அதற்கான சூழலும் சாத்தியப்பாடுகளும் அதிகமாக உண்டு. இதற்கான வாய்ப்புகளையும் தமிழ்த்தரப்பினர் அரசாங்கத்துக்குத் தாராளமாகவே வழங்கியிருக்கிறார்கள்.

இப்படித்தான் நாவற்குழியிலும் நடந்தது. அங்கே இருந்த காணியை ஏற்கனவே காணியற்ற சனங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருந்தால் இன்று அங்கே பௌத்த விகாரை முளைத்திருக்குமா? சிங்களக் குடியேற்றம் பற்றிய விவகாரம் வந்திருக்குமா? இதைப் புத்திபூர்வமாகச் செய்யாமல் விட்டுவிட்டு பிறகு அழுது புரள்வதாலும் கூக்குரலிடுவதாலும் எதுவும் நடந்து விடப்போவதில்லை. வெற்றிடங்களை விட்டு வைத்தால் அந்த வெற்றிடங்களில் தேவையற்ற விடயங்களே நிரம்பும் என்பது பொது விதி. இதுவே மாங்குளத்திலும் நடக்கும். நடக்கப் போகிறது. இதற்கு ஒரு அடையாளமே அழகிய பிரமாண்டமான பௌத்த விகாரை.

இதற்குப் பிறகு அழுது புலம்புவதால் என்ன பயன்?

“இதையெல்லாம் யாரிடம் சொல்லி அழுவது? யாரிடம் சொல்லி ஆறுவது? தீர்க்கதரிசிகளும் தியாகிகளும் தலைவர்களும் இல்லாத வெறும் தரிசாகி வருகிறதா தமிழ்ச்சமூகம்? தூரநோக்கோடு செயலாற்றக்கூடிய ஆற்றலர்களை எப்படி இத்தனை விரைவாக இழந்தோம்? பத்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ச் சூழல் எப்படி இருந்தது என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு விசயத்திலும் எத்தனை பெரிய ஆற்றல் வெளிப்பாடுகள். போரில், உட்கட்டுமான விருத்தியில், சமூகப் பாதுகாப்பில், பண்பாட்டு நெறிமுறைகளில், நிர்வாகத்தில், சனங்களுடைய வாழ்க்கை முறையில், நம்பிக்கையில், சூழல் பாதுகாப்புப் பற்றிய பிரக்ஞையில், அதற்கான செயற்பாடுகளில், மக்கள் மீதான நேசிப்பில், மக்களுக்காகத் தம்மை அர்ப்பணிப்பதில், தாயகம் பற்றிய கனவில், அந்தக் கனவுக்கு வடிவம் கொடுப்பதில் என அனைத்திலும் எவ்வளவு ஆற்றலர்களைக் கொண்டிருந்தது தமிழ்ச் சமூகம். அதை வைத்துத் தானே இன்னும் இந்த அரசியல் வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன “ என்று ஒரு முதிய போராளி சொல்வது தவறிப் போய் காதில் விழுகின்றது.

அப்படியெல்லாம் ஒருகாலத்தில் எல்லோருக்கும் மாங்குளம் பற்றி பெருங்கனவொன்று எழுந்திருந்தது. ஆனால்.... இன்றோ!?

> “மாங்குளத்தில் நகர நிர்மாணத்துக்கென அடையாளம் காணப்பட்ட காணிகளெல்லாம் பலராலும் கையகப்படுத்தப்படுகின்றன. இதில் அரசியல் அதிகாரமுள்ள தரப்புகளின் கைவிசை உச்சம். இதைக் கண்டும் காணாமலிருக்கின்றனர் அரச அதிகாரிகள்.”




இதை தார்சாலை என்று அழைக்கலாமா ?

குடிசை வாழ்க்கை

# வடமாகாண கல்வித் திணைக்கள பெரியவருக்கு....



# அவசரமா ஒரு கடுதாசி

நீங்கள் சுகமா இருக்கவேணுமெண்டு கடவுளைப் பிரார்த்திக்கிறன். கொரோனா எண்ட கோதாரி நோயாலை கன காலமாகப் பூட்டிக் கிடந்த பள்ளிக்கூடங்களை ஒரு மாதிரித் திறந்து போட்டியள். அரச திணைக்களங்களிலை தலைமைப் பதவியிலை இருக்கிறதெண்டது சரியான கஷ்டமான காரியம். அதுவும் கல்வித் திணைக்களத்திலை தலைமைப் பதவியிலை இருக்கிறது ஆகலும் கஷ்டம் எண்டு எனக்குத் தெரியும்.ஆனால் அதையெல்லாம் நீங்கள் சமாளிக்கக் கூடிய ஆள். நிர்வாகத்தில நீங்கள் கெட்டிக்காரர் எண்டு ஆரைக் கேட்டாலும் சொல்லிவினம்.

இதுவரை பள்ளிக்கூடம் திறக்காதோ! எண்டு ஏங்கி, தங்கடை பிள்ளை குட்டியளின்ரை படிப்பைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த பல பெற்றாரின்ரை நெஞ்சிலை பாலை வார்த்து அவையளை ஆசுவாசப் படுத்திப் போட்டியள். இருந்தும் சில பெற்றார், பிள்ளையள் படிக்காட்டிலும் பரவாயில்லை அவையளைக் கொரோனாவிலை இருந்து பாதுகாக்க வேணும் எண்டதாலை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் இருக்கினமாம் எண்டும் கேள்வி. சரி, இப்ப விசயத்துக்கு வாறன். முந்தநாள் ஒரு கலியாண வீடொன்றுக்குப் போனனான். அங்க நிண்ட ஒராள் சொன்ன கதையைக் கேட்டு பெரிய அந்தரமாகப் போச்சு.அதால தான் இந்தக் கடுதாசியை அவசரமா எழுதவேண்டி வந்திட்டுது.

பொதுவா பள்ளிக்கூடங்களிலை நடக்கிற விழாக்களுக்கு நல்லவை , பெரியவையை விருந்தினராய்க் கூப்பிடுறவை. பள்ளிக்கூடத்துக்குத் தன்னலம் பாராமல் சேவைசெய்யிறவையையும், அந்தப் பள்ளிகூடத்தில படிச்சு பெரியாக்களா வந்தவையையும் கௌரவிக்கிறதோட, அவையைப் போல வரவேணும் எண்டதை சின்னப்பிள்ளையளுக்கு சொல்றதுக்காகவும் தான் அப்பிடி விருந்தினர்களை கூப்பிடுறவை. அவையை கௌரவப்படுத்திற மாதிரியும் போச்சு, பிள்ளையளை ஊக்கப்படுத்திற மாதிரியும் போச்சு; இப்பிடி ஒரு கல்லிலை ரெண்டு மாங்காய் அடிக்கலாம் இந்த விருந்தினர் தெரிவிலை. இப்பிடித்தான் கிட்டடியிலை ஒரு பள்ளிக்கூட விழா ஒண்டுக்கு விருந்தினரா ஒருத்தரைக் கூப்பிட்டவையாம். ஆனால் அவரைப் பற்றி ஊருக்கையே நல்ல பேர் இல்லை

அதோட நீதிமன்றத்தாலையும் அவர் தண்டிக்கப்பட்ட ஆள். அப்பிடிப்பட்டவரை பார்க்கிற பிள்ளையும் " நாங்களும் பிழை விட்டால் பெரியாளா வரலாம்" எண்டு நினைச்சால் நிலைமை அம்போதான். அந்தாள் விருந்தினர் எண்டவுடன பிள்ளையளின்ர தாய், தேப்பன் போய் ரீச்சர் மாரிட்ட அவரைக் கூப்பிட வேண்டாமெண்டிருக்கினம்

அதுக்கு அவை"அவர் பள்ளிக்குடத்துக்குக் காசு தந்து உதவி செய்யிறவர்." எண்டு சொல்லிச்சினமாம்.

"ஒரு பள்ளிக்கூடத்தின்ரை விழாக்களுக்கு விருந்தினரா வாறதுக்கு ஒருத்தர் காசு தாறார் எண்டது மட்டும் அவற்றை தகுதியாகுமோ? " எண்டு கேட்டால் அதுக்கு அவையிட்டை இருந்து பதில் இல்லையாம்.

"அதிபர்தான் அவரைக்கூப்பிட்டவர். எங்களுக்குத் தெரியாது." எண்டு ரீச்சர்மார் சொல்லியிருக்கினம். பெற்றாரும் விடாமல் அப்பிடியே பிரின்சிபலிட்ட போய் கேட்டிருக்கினம். அதுக்கு அவர் ,

"எல்லாரும் சேர்ந்துதான் தீர்மானிச்சது. நான் அவரைக் கூப்பிடுவம் எண்டு சொல்லேக்கை எல்லாரும் வாய் பேசாமல் தான் இருந்தவை. அதாலைதான் நான் அவரைக் கூப்பிட்டனான்." எண்டு சொன்னவராம்.

இதுதான் எங்கடை இண்டைய நிலைமை. எங்கடை பள்ளிக்கூடத்தின்ரை மட்டுமில்லை இது தான் எங்கடை சமுதாயப் பிரச்சினையும்.அந்தப் பள்ளிக்கூடத்திலை இருக்கிற எல்லாருக்கும் தெரியும், அங்கை கூப்பிட்ட ஆள் எந்தவகையிலும் பிள்ளையளுக்கு முன்னுதாரணமாகக் காட்டக் கூடியவர் இல்லை எண்டு. ஆனால், ஆரும் அதைப் பற்றிக் கதைக்கேல்லை. ஏன் வீண் சோலி எங்களுக்கு எண்டு கண்ணை மூடிக்கொண்டு இருக்கினம். அப்ப பூனைக்கு ஆர் மணி கட்டுறது?" எண்டு அந்த ஆள் கதையைச் சொல்லி முடிச்சார். இதை ஏன் உங்களுக்கு எழுதிறன் எண்டால், இந்த விசயத்திலை நீங்கள் தான் காத்திரமான முடிவை எடுக்கக் கூடியவர் .

பாடசாலையிலை நடக்கிற விழாக்களுக்கும் எந்த மாதிரியான ஆக்களைக் கூப்பிடலாம்? ஆரைக் கூப்பிடக்கூடாது எண்டு ஒரு வரையறையைச் சொல்லுற மாதிரி ஒரு சுற்று நிருபத்தைத் தயாரிச்சு, அதை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புங்கோ.

முந்தித்தான் அந்தந்த ஊரிலை பிறந்த ஆள்தான் அங்கத்தைப் பள்ளிக்கூடங்களுக்கு பிரின்சிப்பலாய் இருப்பார். அப்ப ஆரைக் கூப்பிடோணும், ஆரைக் கூப்பிடக்கூடாது எண்டு தெரிஞ்சவரா அவர் இருப்பார். ஆனா இப்ப, அப்பிடி இல்லை எண்டபடியால சுற்றுநிருபம் மூலம் சட்டம் போட்டு அதை சரியா. நடைமுறைப்படுத்த வேண்டியது உங்கட பொறுப்பு.

இப்ப பாத்திருப்பியள் பெரும்பாலும் பள்ளிக்கூடங்களிலை நடக்கிற விழாக்களுக்கு அந்த ஊரிலை பிறந்து காலங்காலமாத் தோட்டம் செய்யிற தோட்டக்காரரை ஆரும் கூப்பிடுறேல்லை. ஆனா விவசாயிதான் தெய்வம் எண்ட மாதிரி படிப்பிக்கினமே தவிர நேரில மதிப்புக் குடுக்கிறதில்லையாம். ஆனால் ஆர் கூடுதலா காசைத் தருகினமோ அவைக்குத்தான் மாலை,மரியாதை. ஆரையண்டாலும் கூப்பிடட்டும் ஆனால் அப்பிடிக் கூப்பிடுற விருந்தினர் பிள்ளையளுக்கு முன்னுதாரணமாக காட்டக்கூடிய ஆளோ எண்டும் பாக்கச் சொல்லுங்கோ! கட்டாயம் செய்வியள் எண்டு நம்பிறன்.

உங்களை நம்பும் ,
அப்பாவி அன்னமுத்து



# குழைக்காட்டு கதைகள் II

○ கோகுலராகவன்

குஞ்சரின்ரை சிவராசாண்ணைக்கு 'சடபுட' என்ற ஒரு சிறப்புப் பெயர் இருந்தது. பாவம் மனுசன். எல்லாத்திலும் வேகமும், கொஞ்சம் முன் ஏற்பாடும் கொண்டவர். "தம்பி 'சடபுட, சடபுட' எண்டு வேலையை முடிக்கோணும்"

இந்த 'சடபுட'வை அடிக்கடி பாவிப்பதால் அவர் பெயரோடு 'சடபுட' ஒட்டிக் கொண்டு விட்டது. அறத்தியம்மன் கோயிலுக்கு பூசை கட்டுவதாக இருந்தால் மா இடிப்பித்து பயறு வறுத்துக் குத்துவித்து எல்லாம் ரெடி பண்ணி, காலை வெள்ளெனப் போய், கோயில் கழுவி, தனியாளாக நின்று மோதகம் அவித்து ,சரியாகப் பன்னிரண்டு மணிக்கு பூசை முடியும். பன்னெண்டரைக்கு ஆள் வீட்டை நிக்கும்.

"சிவராசாண்ணை எல்லாம் சடபுடவெண்டு'முடிஞ்சுது என்ன?"

"உந்த நக்கல்தானே வேண்டாம் என்கிறது" என்று செல்லமாகக் கோபிப்பார். மனிசன் வேலி அடைப்பதாக இருந்தால் நாற்பது நாள்களுக்கு முன்னதாக பொற்பத்தைப் பக்கம் போய் அலம்பல் வெட்டி பாடம்பண்ணி விட்டு விடுவார். மான்கொடி வலித்து கிணற்றடி ஈரமண்ணில் தாட்டு வைத்துவிடுவார். மான் கொடி நீளமாகப் படரும் ஒரு வகைக் கொடி இனம். ஒரு கொடியை வலிந்து இழுத்தால் 7,8 மீற்றர் நீளத்துக்கு இழைக் கயிறு மாதிரி நீண்டு இருக்கும். வேலி கட்ட, வரிச்சுக் கட்ட மிகப் பயனுள்ளது. எங்கள் பளையில் வேலி கட்ட கயிறு வாங்கி எங்களுக்கு பழக்கமும் இல்லை.எல்லாம் மான்கொடிதான்.

சிவராசண்ணை, எல்லா ஏற்பாடும் செய்துவிட்டு வேலி கட்டத் தொடங்குவார். ஒரு மணித்தியாலத்தில் 50 அடி வேலியை அடைத்து விடுவார்.

"தம்பி நான் வேலி அடைச்சால் மதில் தோத்துப் போகும்" கதியால் வெட்டும் போதும் மேற்பக்கமாக நீளத்துக்கு கயிறு கட்டி ஒரே அளவுக்கு வெட்டுவார். பார்த்தால் மிக அழகாக ஒரே சமமாக இருக்கும்.

சிவராசண்ணை வீட்டுத் தலைவாசல் கிடுகால் வேயப்பட்டது. இரண்டு வருடத்துக்கு ஒருமுறை வேய வேண்டும். தாயாருக்கு நல்ல ஓலை வெட்டி நனைத்து கிழித்துக் கொடுப்பார். வேயும் நாளில் தலைப்பு கிடுகு, அடிக் கிடுகு எனப் பிரித்து அடுக்கிவிடுவார். கிடுகுகளைக் கட்ட பனம் ஈர்க்குகளைப் பதப்படுத்தி நனைத்து வைத்திருப்பார். தூசு தட்ட தென்னோலை பச்சையாக வெட்டி கட்டி வைத்திருப்பார்.

ஒன்பது மணிக்கு ஏறினால் பத்து மணிக்கு வேய்ச்சல் முடிந்துவிடும். சிவராசாண்ணை கிடுகு எறிவதில் மிக வல்லவர்.

"அடியா? தலைப்பா?"

என்று கேட்க மாட்டார். அடுத்த கிடுகின் வளத்தை கீழே இருந்தே பார்த்து விடுவார். கிடுகு சும்மா அம்பு மாதிரி மேலே போகும். கொஞ்சம் பிடி தவறினால் கண்ணைக் கொண்டு போய்விடும்.

இடைக்கிடை சுடச்சுட தேத்தண்ணியும் ஆத்துவார்.

"இறங்கி, ஆறி இருந்து குடிச்சிட்டு மேய்வம் என்ன அவசரம்"

இதுவே எங்களுக்கு சிரிப்பாக இருக்கும்.

ஒருநாள் சந்தியில் மாடு மேயக் கட்டிப் போட்டு நின்றேன். சிவராசண்ணை சைக்கிளில் பளைக்கு சந்தைக்கு போட்டு வந்து கொண்டு இருந்தார்.

"அண்ணை, துலையாலயோ?"

"ரெண்டு லீற்றர் பெற்றோல் வாங்கிக் கொண்டு வாறான்ரா"

"ஏனண்ணை ரெண்டு லீற்றர்?"

அவரிடம் மோட்டார் சைக்கிளும் இல்லை. தோட்டத்துக்குக் தண்ணீர் இறைக்க வோட்டர் பம் இயக்க கால் லீற்றர்பெற்றோல் ஒரு மாதத்துக்குக் காணும்.

"அம்மாவுக்கு அடிக்கடி சுகமில்லாமல் வருகுது"

"அதுக்கு என்ன?"

"அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக மோட்டார் சைக்கிள் ஒண்டு எடுக்கப் போறன். அதுதான். எதுக்கும் முதலில பெற்றோலை வாங்கி வைப்பம்"

நான் அவரை வெறித்து பார்த்தேன். மணி கிடக்குது; இனிக் கோயில் கட்டினால் சரி எண்டானாம் புதுப்பூசாரி. அது மாதிரிக் கிடந்திது அவரின்ரை கதை.

"இனி என்னப்பு, மோட்டார் சைக்கிள் எடுத்தால் சரிதானே?"

சொல்லிவிட்டு அவர் சடபுடவென்று சைக்கிளை உழக்கிக் கொண்டு போய்விட்டார். ■



# 32 இற்கான கவிதைகள்

மௌன மொழி 33



பிறர் கண் இன்னல் தீர்க்க
தன் நிலை பாராது....
மானம் பெரிதென வாழும்
வீர குலத்தின் பண்புதனை
பக்குவம் வேண்டும் என்ற
பார்வை தனைக் கொண்டு
சமூகத்தை நெறிப்படுத்தும்
தார்மீக சிந்தனைவாதி-இவன்

**விநாயகமூர்த்தி.அபிவர்ணா**
மூங்கிலாறு வடக்கு,
உடையார்கட்டு, முல்லைத்தீவு



முதுமை அடைந்த வேளையிலே
திண்ணையிலே வாழ்வதற்கு
கையினிலே காசு இல்லை
தென்னை ஓலை கையிலுண்டு
வறுமையும் சேர்ந்து உண்டு
யார் அனுதாபமும் தேவையில்லை
தனிமையிலே வாழ்வதற்கு
மனதினிலே வலிமை உண்டு

**ஜெ.கே**

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:

04.02.2021

கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப்பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com

0773165555

தென்னங் கிடுகெடுத்து
கச்சிதமாய் கண்பார்த்து
குத்தூசி கொண்டு
குறிதவறாது வேலிகட்டும்
முதுமையிலும் முகிழ்கின்ற
வாலிப மிடுக்குடன்
கட்டுகின்ற கட்டு
காலாதிகாலம் கழராது
கால் மட்டை துணை நிற்கும்

**த.மோகனராஜ்**
நிலாவரை வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்

அந்திப் பொழுதினிலே
வேலியோரமாய் வேட்கை உணர்வுடனே
கைதனிலே கிடுகுதனைக் கொண்டு
கால் வயிறு கஞ்சிக்காய்
கைகட்டி மண்டியிட்டு மடிந்து போகாது
நெஞ்சை நிமிர்த்தி செருக்கோடு உழைக்கின்ற
உழைப்புக்கு நாங்கள் தலைவணங்குகிறோம்

**ஆ.பாலமதுஜா**
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

தள்ளாத வயதினிலும்
தன்மானம் காத்திட
தெருவோர வேலிதனை
தென்னை மரக்கிடுனால்
வேலியடைக்கும் வேலப்பா
வேகமாய் அடையப்பா
வெயில் வரப் போகுதப்பா

**வ.சரஸ்வதி**, முழங்கால்

அன்னிய செலாவணி
அரண்மனைகள் தோன்றின
மனைக்கேற்ற மதிலும் படலையும் உயர்ந்தது
குத்தூசி கயிறு மறந்த முதியவர்
கிடுகு வேலியை மெல்ல மெல்ல இழந்தனர்
இதனால் முட்கிளுவை முள்முருங்கை பூவரசு
இப்போ காட்சிப்பொருள்

**அ.புஸ்பராணி**, கோண்டாவில்

வயதான காலத்திலும்
வருத்தம் ஏதும் இல்லாது
வலிமையாகக் கிடுகு பின்னி
வேலியடைக்கும்
இத் தாத்தா போல்
நாமும் எமது கடைசி
மூச்சு வரை வலிமையாக
உழைத்து வாழ வேண்டும்

**பிரதீபன் ஆதிரை**
தரம் 7. யா/மகாஜனாக் கல்லூரி

வந்த வழி மறந்து பெருமை மிகுந்து
சொந்தம் தொலைத்து மேன்மை தேய்ந்ததோ
வயோதிபத்தின் அவலம் கண்டும்
வாழும் வாழ்க்கை சொந்தமாகுமா
தனிமை மனம் வாட வறுமை அது ஓங்க
வேலிமேய்கின்ற ஏழை முதியவனை
நெஞ்சத்தில் ஏற்றி வைத்து நேசித்து காத்திடுவோம்

**ஆர்.கார்த்திகாயினி**
தரம் 10 வற்றாப்பளை ம.வி

தென்னை மர ஓலையெடுத்து
பின்னல் தனைப் பின்னி இணைத்து
சுட்டெரிக்கும் வெயில் தனில்
சுட்டிடாமல் தலைத்துணி கட்டி
வயதானாலும் வாலிப பலத்தோடு
கரத்தால் கலைத்த காய்ந்த கிடுகுதனை
மறைப்பு வேலிகளாய் உருவாக்கிமனம்
மகிழ்ந்திட மனிதர்கள் குலம் அதுவாம்

**வினோஜா ராசலிங்கம்**
சித்தன்கேணி

உடல் தளர்ந்தாலும்
உள்ளம் தளராது
கிடுகெடுத்து உறுதிகொண்ட
ஊசிகோர்த்து
வேலிகட்டும் உங்களிடம்
பிச்சை கேட்பான் மயன் (தேவதச்சன்)
அத்தனை உறுதியுண்டு
இம் முதியவருக்கும் கிடுகுவேலிக்கும்

**மோ.சேந்தன்**
153/1 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

முதிர்ந்த வயதில் வற்றாத உழைப்பு!
ஓடும் குருதியில் குன்றாத மனவுறுதி
வாடிய முகத்திலும் வாடாத வாழ்க்கை !
தள்ளாடும் நிலையில் முன்னேறும் வழிக்கு
முன்மாதிரியாக திகழும் முதியவர்!
வளரும் தலைமுறைக்குப் பாடமான காட்சி
தளரும் நெஞ்சங்களுக்கு இப்படமே சாட்சி!

**தரணி**, நாச்சிமார் கோயிலடி

## பரிசு பெறும் கவிதை

நரை கூட்டி மூப்பு வரினும்
உரம் குறையா உடலெனக்கு
நான் உண்ட குரக்கன்மா
இன்றைக்கும் தென்பு தரும்.
களனியெல்லாம் பூத்திருக்கு
கால்நடையோ காத்திருக்கும்
களவாய் வந்து மேய முன்னர்
வேய வேண்டும் கிடுகு கொண்டு.

**த.கவிநயன்**

தெங்கு நாட்டி..
தெவிட்டாய் வாழ்ந்து
கிடுகிடுத்த வயதிலும்..
கிடுகு பின்னி வேலிகட்டி,
வீடும் வேய்ந்து..
தெங்கே
குடையாய்க் கொண்ட
சூழலதில் வாழ்ந்த காலம்..
சொர்க்கமே...

**த.சிவா**, அல்வாய்

தென்னோலைப் பின்னலில்
தெருவோரத்து வேலியை
தேகம் களைக்காது
தெம்புடனே தாத்தா
குத்தூசி கொண்டு
குறிப்பறிந்து கட்டும்
கைவேலை அழகு இன்று
காணாமல் போகிறதே.

**ஔவை**

நாம் தொலைத்தவை
ஏராளம்
கிடுகு மட்டை கிளுவ மரம்
கருக்கில்லாத பனை மட்டை
குத்தூசி சணல் கயிறு
தலைப்பாகை கட்டிய
தாத்தா.......

ரியா. ரட்ணராஜா

தொண்ணூறு அகவையில்
துவளாம இமயமதாய்
தென்னோலை கிடுடு கட்டும்
தொன்மையின் சுவடுகளாய்
விரலே குத்தூசி வெறுமையே தன் கூலி
கால்நடை களவாணி
கண்ணூறுகள் பலிக்காமல்
காபேந்து செய்திடுவார் மனமே சலிக்காமல்

**வி.சாத்வீகன்**

எட்டிப் போகும் மட்டை வேலிதனை
கட்டிக் காத்து தாத்தா
நரை விழுந்தாலும் வேலி
நிரை விலகாது நிமிர்த்தியவர்
வேலியை மட்டமல்ல
நம் வாழ்வின் அனைத்தையும்

**சி.தருண்**
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

கிடுகு வேலி அடைத்து கிடுகு வேய்ந்த வீட்டுக்குள்
வாழ்ந்து வந்த வசந்த காலத்தின் வற்றாத நினைவலைகள்
சுற்று மதில் கட்டி சுருக்கு கேற்றுமிட்டு மேலும் கீழும்
பூட்டிவிட்டு மெய் அடங்கி வாழ்கிறோம்
சுதந்திர வாழ்வை தொலைத்துவிட்டு

**S.மதீஷன்**, மு/வித்தியானந்தா கல்லூரி.

# பிட்டுக்கு பீட்சா போட்டியா!

பண்டிதன் என்பவன் வயிற்றுப்பிழைப்புக்காக தனது ஊரில் பாரம்பரிய உணவான பிட்டை தள்ளு வண்டி ஒன்றில் விற்பனை செய்து வந்தான். அவன் பிட்டில் பிரியாணி, கொத்து என விதவிதமான முறைகளில் உணவைத் தயாரிப்பான். பிட்டுக்குப் பொருத்தமாக பலவிதமான கறிவகைகளையும் செய்து தனது தள்ளுவண்டி உணவகத்திற்கு வருபவர்களுக்கு பரிமாறுவான். பண்டிதனது கைராசியோ உணவுச்சுவையோ என்னமோ அவனது தள்ளு வண்டி உணவகத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கியது. சிறிது காலத்தில் அவன் தனது பிட்டு வியாபாரத்தில் கிடைத்த பணத்தை வைத்து தள்ளுவண்டியை கைவிட்டு பிட்டுக்கடை ஒன்றை அமைத்தான். அதில் இரு வேலையாட்களையும் வேலைக்காக வைத்திருந்தான்.

பண்டிதனது இந்த வளர்ச்சி சேகரன் என்பவனுக்கு பிடிக்கவில்லை. அவன் "பிட்டால் இவ்வளவு வளர்ச்சியா" என்று மனதில் எண்ணிக்கொண்டான். அவ்வாறு எண்ணியவனது மனதில் குறுகிய சிந்தனை ஒன்று தோன்றியது. மேற்கத்தைய உணவை கொண்ட உணவகத்தை நடத்தினால் பண்டிதனை விட அதிகம் சம்பாதிக்கலாம் என்பதே அவனது சிந்தனை. நினைத்தது போலவே பீட்சா எனும் நகரத்து உணவை விற்க பண்டிதனுக்குப் போட்டியாக அவனின் கடைக்கு முன்னால் பீட்சா கடையை சேகரன் ஆரம்பித்தான். பீட்சாவை வாழ்நாளில் சாப்பிட்டிராத ஊர் மக்கள் சேகரனின் கடையில் பீட்சா சாப்பிட படையெடுத்தனர். இதனால் பண்டிதனது பிட்டு கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்தது.

ஆரம்பத்தில் பிட்டை விட விலை உயர்ந்த பீட்சாவை மக்களை கவரும் நோக்கில் விலையை குறைத்தும் சலுகையுடனும் சேகரன் விற்பனை செய்தான். இதன் காரணமாகவும் இதுவரை கண்டிராத உணவு என்பதாலும் பிட்டை விட்டுவிட்டு பீட்சா சாப்பிட மக்கள் ஆர்வமாக இருந்தனர்.

பின்னாள்களில் சலுகைகளை நிறுத்தி பீட்சாவை உண்மையான விலையில் விற்கத் தொடங்கினான். இவ்வாறான நிலையில் பார்வைக்கு பீட்சா ருசியூட்டுவது போன்று இருந்தாலும் சாப்பிடுவதற்கு உப்புச்சப்பற்றதாக உள்ளதென பலரும் உணரத் தொடங்கினர். இன்னும் சிலருக்கு அது பசிபோக்குவதாகவும் அமையவில்லை. இதனால் மக்களிடையே பீட்சா மீதான மதிப்பு இல்லாமல் போனது. மெல்லமெல்ல பீட்சாவை கைவிட்டு குறைந்த விலையில் வயிற்றுக்கு நிறைவாக விதவிதமாக உண்ணக்கூடிய பிட்டே தமக்கு போதுமென பண்டிதனின் பிட்டு கடைக்கே எல்லோரும் செல்லத் தொடங்கினர்.

இதனால் முன்பை விட அதிகமானோர் பண்டிதனின் பிட்டுக்கடைக்கு செல்ல ஆரம்பித்தனர். பிட்டுக்கு மண் சுமந்தாராம் பெருமானார் பீட்சாவால் பிட்டின் பெருமை உணர்ந்தானாம் சேகரன் என்று கூறும் விதமாக சேகரன் தனது பீட்சாக் கடையால் நஷ்டமடைந்ததுடன், பிட்டின் பெறுமதியை உணர்ந்து கடையை மூடிவிட்டு பண்டிதனின் பிட்டுக்கடையிலேயே வேலையாட்களில் ஒருவராக சேர்ந்து கொண்டான்.

**ந.அபர்னன்**, தரம் 7,
அங்கத்துவ இலக்கம் 119
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



## பூனையும் மனிதனும்!

வெள்ளைப் பூனை வருகிறது!
மெல்ல மெல்ல வருகிறது!!
பதுங்கிப் பதுங்கி வருகிறது!
பாலைக் குடிக்க வருகிறது!!

பல்லி சுவரில் இருக்கிறது!
பல்லியைப் பூனை பார்க்கிறது!!
பல்லியைப் பிடிக்கத் துடிக்கிறது!
பாலைப் பூனை மறக்கிறது!

பல்லியை நோக்கிப் பாய்கிறது!
பல்லியோ அப்பால் நகர்கிறது!!
பூனையின் இலக்குப் பிழைக்கிறது!
பூனையோ சுவர்முட்டி விழுகிறது!!

பாற்குடம் மேலது விழுகிறது!
பாற்குடம் வீழ்ந்து உருள்கிறது!!
பல்லி பூனைக்கு எட்டவில்லை!
பாலும் அதற்குக் கிட்டவில்லை!!

கிட்ட உள்ளதை மறக்கின்ற
எட்ட உள்ளதைப் பிடிக்கின்ற
பூனை போன்ற மனமுள்ள
மனிதரும் எம்மிடை இருக்கின்றார்!!

முருகு

## தெரிந்து கொள்வோம்



01. காகிதம் தயாரிக்க பயன்படும் மரம் எது?
**யூகலிப்டஸ்**
02. தீப்பற்றாத மரம் எது?
**செம்மரம்**
03. விண் வெளிக்கு முதல் முதலில் சென்ற மிருகம் எது?
**நாய்**
04. கொசு ஒழிப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
**ஒக்ரோபர் 20**
05. பற்களே இல்லாத மிகப்பெரிய பாலூட்டி எது?
**நீலத் திமிங்கிலம்**
06. தேசிய அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
பெப்ரவரி 28
07. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
**நோர்வே**
08. ஒலியை அளக்க உதவும் அலகு எது?
**டெசிபல்**
09. உலகில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
**இந்தியா**
10. தமிழ் மொழியில் வெளியான முதல் நாளிதழ் எது?
**சுதேசமித்திரன்**

க.டேனுஷா
அ.இ145




## பிஞ்சு தூரிகைகள்





**வி.கிருனி கௌசல்யா,**
யா/நல்லூர் ஸ்தான
சி.சி.த.படசாலை.
SOS சிறுவர் கிராமம்.



**என்.தனுஷா,**
தரம் -10
யா/நல்லூர் ஸ்தான
சி.சி.த.படசாலை.



**எம்.நிரோசினி,**
தரம் -04
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.படசாலை.
SOS சிறுவர் கிராமம்




**யோ.தமிழ்,**
தரம் -08
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.படசாலை.
SOS சிறுவர் கிராமம்.

# மாணவர் கழகம்



201

**பெயர்:** ஜ.ராகவி,
**முகவரி:** தாவடி வீதி, சுதுமலை, மானிப்பாய்.
**பி. திகதி:** 15.09.2015
**பாடசாலை:** புனித பொஸ்கோ வித்தியாலயம்.



202

**பெயர்:** ரன்குமார் கார்த்திகாயினி,
**முகவரி:** வற்றாப்பளை, முள்ளியவளை.
**பி. திகதி:** 09.11.2006
**பாடசாலை:** மு/ வற்றாப்பளை ம.வி.



198

**பெயர்:** ஜ.ஆரபி,
**முகவரி:** அம்மன் கோவில் சுதுமலை.
**பி. திகதி:** 12.05.2012
**பாடசாலை:** புனித பொஸ்கோ வித்தியாலயம் .

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

மேலிருக்கும் எண்ணுக்கு உங்கள் புகைப்படங்களை விவரத்துடன் அனுப்பி வையுங்கள்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
SANJEEVI@UTHAYAN.COM

# மணிக் கதை

மௌனா

## வாழ்வெனப்படுவது...!

வாழ்க்கை என்றால் என்ன என்ற வினாவுக்கு வரைவிலக்கணம் தேடிய ஒருவன், தான் சந்தித்த பலரிடமும் அது குறித்து விளக்கம் கேட்டு வந்தான். "வாழ்க்கை என்பது பொழுதுபோக்கு மட்டுமே. வாழும் வரை வாழ்க்கையை விரும்பும் வகையில் அனுபவித்து உல்லாசமாக கழித்துவிட்டு காலத் தைத் தள்ளி வருவதை விடவும் வேறெதுவும் இல்லை என அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டு மதுப்போத்தலில் எஞ்சி இருந்ததையும் மடமடவெனக் குடித்துவிட்டு எகத்தாளமாக சிரித்தான் ஒரு மலைவாசி.

"வாழ்க்கையா? ஒன்றுமே இல்லாத ஒன்றுமட்டுமே அதுவாகும். உண்மையில் அதுவொரு மாயை . பூச்சியமான ஒன்றுக்கு வரைவிலக்கணம் ஏது? "என்று கூறிவிட்டு ஒரு மோனச் சிரிப்புடன் தாடியைத் தடவிவிட்டபடியே நிஷ்டையில் ஆழ்ந்தார் துறவி.


"வாழ்க்கையா,அது ஒரு ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒரு பயணம் மட்டுமே.... ஜனனத்தில் இருந்து மரணத்தை நோக்கிச் செல்லும் ஒரு வழிப் பாதையில் நீடிக்கும் பயணம். வளைவுகள், திருப்பங்கள், மேடுகள், பள்ளங்கள், உயர்வுகள், தாழ்வுகள் என இடையில் எதுவந்தாலும் எதனைச் சந்திக்க நேர்ந்தாலும் அது ஒருவழிப் பயணம் மட்டுமே. தொடங்கிய இடத்தில் இருந்து முடிவிடத்தை நோக்கி மட்டுமே வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள முடியும் "என விளக்கமளித்தான் ஒரு தத்துவஞானி.....

"வாழ்க்கை என்பதே அதிகார அந்தஸ்தைப் பெற்று உயர் பதவியில் அமர எடுக்கும் எத்தனமே ..... அதனை விட வேறெதுவும் இல்லை என்றான் ஒரு அரசியல்வாதி. இறுதியாக ஒருவன் விளக்கம் கூறினான்.

"சும்மா விசர்த்தனமாக ஆராய்ச்சி செய்வதை விட்டு விட்டு உழைத்து உண்டு, உடுத்து, உறங்கி, மகிழ்ந்து வாழ்ந்து பார். அப்போது புரியும் அதுவொரு அற்புத அனுபவம் என்று" கூறியபடியே வயலில் உழவைத் தொடர்ந்தான் ஒருவன்.

அவன் ஒரு உழைப்பாளி.... இயல்பான மனிதன்....!

# சொற்சிலம்பம் போட்டி 32




**அனுப்புபவர் பெயர்:**..............................
**முழுமையான தபால் விலாசம்:** ..............................
..............................
**கையொப்பம்:**..............................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நூறில் பாதி 4. இடம்பெயர்ந்து வாழ்பவர் 7. கொடைகளில் இந்தக் கொடை சிறந்தது. 9. இறக்குமாறான ஏவல் 10. மனித வாழ்வில் இதை விரும்புவது இயல்பு 12. தேவைக்கு அதிகம். 14. நிற்குமாறான ஏவல். 15. வெட்டும் ஆயுதங்களுக்கு இது முக்கியம். 17. நவக்கிரகங்களுள் முக்கியத்துவம் மிக்கது. 18. இந்தியாவின் புகழ்பெற்ற நதியொன்று. 20. சம்மதச் சொல். 21. சகோதரனது மனைவியை இப்படியும் அழைப்பர். 23. பரிகாசம்/விகடம் 25. பிரிக்குமாறான ஏவல். 27. கேள்வியும் அதற்கான பதிலும் சேர்ந்தது. 28. பெற்ற உதவிக்கு மதிப்பளித்தல்.

## மேலிருந்து கீழ்

1. தேவேந்திரனது யானையின் பெயர் 2. முழுவதன் ஒரு பிரிவு 3. இது இரும்பில் பிடிக்கும். 5. விவசாயம் மேற்கொள்ளப்படும் இடம். 6. மூன்று 8. அகங்காரம் 11. பிழை அல்லாதது 13. மூத்த சகோதரன் 15. இராமாயனத்தின் முக்கிய பெண் பாத்திரம் 16. இல்லம் 17. நிகழ்தல்/ ஏற்படுதல் 19. முற்றும் துறந்தவன் 21. பசுவின் பால் நிறையும் பகுதி 22. திறப்பு 24. படுக்கை/ நோயில் விழுதல் 26. அடையாளஞ் செய்யுமாறான ஏவல்

### சொற்சிலம்பம் போட்டி 30 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாதரசம் 5. அவா 7. தண்ணளி 8. விரச 9. திடும் 10. சரசம் 11. பரதன் 12. சம்பூரணம் 15. சதம் 16. மடு 17. காகம் 18. படம் 19. பாணன் 20. கரும்பு

**மேலிருந்து கீழ்**

1. பாததிகேசம் 2. தண்டு 3. ரணம் 4. சளி 5. அரசன் 6. வாசம் 8. விரதம் 10. சரணம் 11. பரதம் 13. பூசகன் 14. உடும்பு 16. மடம் 17. பார்க்க 18. பரு.

**சொற்சிலம்பம் போட்டி இல.32**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**06.02.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

**போட்டி இலக்கம் 30இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**வ.உமைபாலன்**
இல.32, கிராமசபை வீதி,
புலோலி மேற்கு.

**2 ஆம் பரிசு**
**யோ.விக்டர் அரவிந்தன்,**
குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

**3 ஆம் பரிசு**
**க.சுலக்சன்,**
வைரவர் கோவிலடி, கல்வளை,
சண்டிலிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**சி.பிரணவி**
187, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
**செல்வி ஸ்ரீ.துஷாரா**
15/11 புவனேஸ்வரி அம்பாள்
வீதி, நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.




# வன்னி: இயற்கை மரபுரிமைகளும் பண்பாட்டு நிலவுருக்களும் சூழற் சுற்றுலாவும்

வன்னிப்பெருநிலம் என்பது இலங்கைத்தீவின் வடபுலத்தில் இயற்கை மரபுரிமைகளைச் செறிவாகக் கொண்ட ஒரு பிராந்தியமாகும். நீர் நிலம் சார்ந்த மிகப் பரந்த இயற்கை அமைவுகளையும், அது சார்ந்த பிற உயிரியற் சூழலையும், பண்பாட்டு நிலவுருக்களையும் உடைய வன்னி இலங்கையின் இனத்துவ அரசியலின் ஆயுத மோதல் முடித்து வைக்கப்பட்ட பின்னரும்கூட, மிகப்பெரிய அரசியற்சூதாட்டகளமாகக் காணப்படுகிறது. அந்தக் களத்தைக் கருத்து ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் கைப்பற்றுவதற்காக அண்மைக் காலத்தில் களமிறக்கி விடப்பட்டுள்ள புதிய படையணி தொல்லியலாய்வாகும். அது அறிவியல் ஆடைக்குள் தன்னை உருமறைப்புச் செய்து கொண்டு வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் முதலான உப படையணிக் கட்டமைப்புக்கள் சகிதம் முன்னரங்கிற் தொழிற்படுகின்றது. இது வெறுமனே தமிழர் வாழும் பகுதிகளைக் கைப்பற்றல், அவற்றுக்கு இடையிலான நிலத் தொடர்ச்சிகளை அறுத்தல் அதன் மூலமாக அவர்களால் முன்மொழியப்படும் பாரம்பரிய வாழிடக் கோரிக்கையை பௌதீக ரீதியாகச் சிதைத்தல் என்ற நோக்கம் கருதியது மட்டுமல்லாமல், தமிழர்களது பாரம்பரிய வாழிடப்பகுதிக்குரிய மிகப்பெரிய இயற்கை மரபுரிமைப் பிராந்தியத்தை - அதனூடாக ஈட்டக்கூடிய பொருளாதார நலன்களைக் கைப்பற்றுதல் முதலான வெளிக்காட்டப்படாத உள்நோக்கங்களையும் உள்ளடக்கியது. மிகக் கவனமாக ஆக்கப்பட்டுள்ள பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை வழங்காத அல்லது வழங்குவதுபோல வழங்கி - ஆனால் அதன் அதிகாரத்தை இறுதியில் மத்தியோடு முடிச்சுப்போட்டிருக்கின்ற அரசியல் அதிகார முறைமை, சிறுபான்மைச் சமூகத்திடமும் அதன் தலைவர்களிடமும் காணப்படும் விழிப்பின்மை - தூரதரிசனத்துடன் கூடிய தயாராகாமை முதலான பலவும் இந்த நிலவரங்களை விரும்பத்தகாத வகையில் மேலும் வளர்த்தெடுத்த வண்ணம் உள்ளன.

**வன்னி அடிப்படையில் நீர்மேலாண்மைக் குடியிருப்பு:** ஆறுகளும், கடல்களும், குளங்களும், நீரணைகளும், வாய்க்கால்களும், ஓடைகளும், சூரிகளும், நீரேரிகளும் அதனை வடிவமைத்தன. நீராலேயே அதன் ஊர்கள் பலவும் பெயரிடப்பட்டன. கனகராயன்குளம், மருதங்குளம், இராசேந்திரன் குளம்; புளியங்குளம் மூன்றுமுறிப்பு உடையார்கட்டு முதலியவை இதற்கான சில உதாரணங்களாகும். இவ்வகையில் ஊரென்பது குளம் வயல்கள் பெருமரச்செறிவுகள், தெய்வங்கள் மற்றும் குடியிருப்புக்களைப் பிரதான உறுப்புக்களாகக்கொண்ட ஒரு பண்பாட்டுக் கட்டமைப்பாகக் காணப்பட்டன. ஆதிக் கிராமங்கள் தொடக்கம், பிற்பட்ட காலங்களில் உருவான புதிய ஊர்கள்வரை வன்னியின் நிலவுடல் முழுவதும் நீர் கிளைவிட்டுப் பரவி நிலங்களின் பகுதியாகவும், நிலங்களை ஒன்றோடு ஒன்று பின்னும் நூற்பாவாகவும் தொழிற்படுகின்றன. அணைக்கட்டுக்கள், பாலங்கள், தொங்குபாலங்கள் கலிங்குகள் என அவற்றோடு இணைந்த பழைய நீர் மேலாண்மைக் கட்டுமானங்களும் அதன் பகுதியாக உள்ளன.



அவ்வகையில் வன்னிப் பண்பாட்டு உருவாக்கத்தில் நீர் முக்கிய பங்காற்றுகிறது. நீண்ட வரலாற்றை உடைய நீர்முகாமைத்துவ வெளிப்பாடுகள் அவ்வகையில் வன்னியின் மரபுரிமைச் சொத்துக்களின் முதுகெலும்பாக உள்ளது. வயல்கள், தோட்டங்கள், சதுப்புக்கள், சிறுகுன்றுகள், பெருமரங்கள், பற்றைகள், காடுகளால் உருவாகியுள்ள அதன் நிலவுரு ஒருபுறம் மனிதனால் உருவாக்கப்படாததும் இயற்கையால் தரப்பட்ட ஆறுகள், மரங்கள் பறவைகள் மற்றும் விலங்குகள் முதலான அப்பிராந்தியத்துக்கே சிறப்பாகவுள்ள மரபுரிமைச் சொத்துக்களைக் கொண்டுள்ளன. தேக்கு, கருங்காலி, மலைவேம்பு, மகிழ், பாலை, வீரை, சூரை, வாகை , வெடுக்குநாறி மற்றும் விண்ணாங்கு முதலான பலவகை மரங்கள், காடை, கௌதாரி, மயில், செண்பகம் , கானாங்கோழி, காட்டுக்கோழி, புளினி, தூக்கணாங்குருவி, கல்லுப்புறா ஈறான பலவகைப் பறவைகளையும் உடையவை. குறிப்பாக இலங்கைத்தீவில்; நீர்ப்பறவைகள் செறிந்த இடமாகக் காணப்படும்; வடபுலத்தில் வன்னியும் அதன் பிரதான பகுதியாகக் காணப்படுகிறது. யானை, முள்ளம் பன்றி, புள்ளி, புளுட்டை, கலைமான் வகைகள், மரை, காட்டுப்பூனை, உக்கிளான், சருகுப்புலி என்பவற்றோடு இலங்கையில் சிறுத்தைகள் அதிகமுள்ள இடமாகவும் வன்னி காணப்படுகிறது. பெருங் கூட்டமாக கதிர்காமத்திற்கும் மடுவுக்கும் புறப்பட்டுச் செல்வதாக நம்பப்படும் வண்ணத்துப்பூச்சிப் படைகளும் வன்னியின் சிறப்பம்சங்களுள் சிலவாகும்

இவற்றைப் பாதுகாப்பது என்பது வன்னியின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டது. அவ்வகையில் அவை விவசாயத்துக்கு மட்டுமன்றி கடலுணவு உற்பத்தி குடிநீர் தேவைகளைப் பூர்த்திசெய்தல் முதலான பலவற்றோடும் இணைந்தது. ஒருவகையில் நீர்வளமும் வனவளமும் ஒன்றையொன்று பாதுகாத்து மேம்பாடடையச் செய்வது. இதற்கப்பாலும் பொருளாதார ரீதியாக புதிய திசைகளை நோக்கி இவற்றைப் பயன்படுத்தலாம் . இவை தொடர்பான சில முன்வாசிப்பு திட்டங்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் இவற்றோடு தொடர்புடைய அரச திணைக்களங்கலாலும் முன் மொழியப்பட்டுள்ளன.

இது மட்டுமின்றி இவை வன்னியின் வரலாற்று மூலாதாரங்களும் கூட. Manual of the vanni districts (1895) அதற்கு முற்பட்ட எழுத்தாவணங்கள் வாய்மொழி வரலாறுகள் புராணங்களின் சாட்சியமாகவும் காணப்படும் இவை பண்டைய வாழ்க்கை - வரலாற்றுச் சம்பவங்களின் தொல்லியல் தலங்களாகவும் உள்ளன. உதாரணமாக பாலி ஆறு வெறும் நீர் முனையம் மட்டுமல்ல; அது வரலாற்று முனையமும், பண்பாட்டுத் தலமும் கூடத்தான். இவற்றைப் பாதுகாத்தல் என்பது, அதன் சமூகத்தையும் அதன் கூட்டு வாழ்வையும் கூட்டுப் பிரக்ஞையையும் கட்டிக் காத்தலும் கட்டி எழுப்புதலுந்தான் அந்தவகையில் மிகவும் விபரநுட்பம் தீர்க்கதரிசனம், துறைசார் அறிவு என்பவற்றுடன் இப் பிராந்தியம் அணுகப்படவேண்டும்.

வெறுமனே அபிவிருத்தி என்ற ஆடம்பரமான சுலோகத் துள் எத்தகைய கேள்விகளும் விவாதங்களுமின்றி நுழையவும், அதன் நுண் அரசியல் செயற்பாடுகள் 'அப்பாவித்தனமாக' அடிபட்டு போகாமல் இருக்கவும், எம்மை அறியாமலே எமது வீழ்ச்சிக்கான முகவர்களாகத் தொழிற்படாது இருக்கவும் இவை பற்றிய பூரண விழிப்பும் தயார்நிலையும் பரந்துபட்ட வெளிப்படையான கலந்துரையாடல்களும் சம்மந்தப்பட்ட தரப்புக்களிடம் முன் கூட்டியே இருக்கவேண்டும் அல்லாவிடில் இனவாதத் தேவைகளுக்கோ அல்லது உலகளாவிய பல்தேசியக் கம்பனிகளது நலன்களுக்கோ எம்மை நாமே பலியிட வேண்டிவரும்.

வன்னியின் இயற்கை மரபுரிமைகளை ஒரு வலைப்பின்னலாக்கி ஒரு பரந்துபட்ட இயற்கை மரபுரிமைப் பிரதிநிதித்துவத்தை உருவாக்கும் அதேவேளை சூழற் சுற்றுலாவுக்கான மிகப் பொருத்தமான ஒரு பெருங்களத்தையும் நிறுவலாம். அதன் முதலடிப்படையாக, இந்த ஒட்டுமொத்த இயற்கை மரபுரிமைகளையும் பாதுகாக்கின்ற செயற்பாடுகளில் முதலில் கவனம் செலுத்தப்படவேண்டும், துறைசார் நிபுணத்துவம், அதனைப் பங்கிடல் என்பவை உறுதி செய்யப்படவேண்டும். அதனோடு கூடிய கட்டுமானங்களை வெறும் குரூரமான கொங்கிறீட் கட்டுக்களாக இல்லாமல் அதன் நிலத்தோடும், பண்பாட்டோடும் கூட்டிணைந்த ஒன்றாக - ஆக்கச் சிறப்புடன் வடிவமைக்கவேண்டும். வெறும் பொறியியல் அறிவையும் தாண்டக் கட்டடக்கலைஞர்களது சிறப்பாற்றல் அவற்றுள் இணைக்கப்படவேண்டும். அது இயற்கை மரபுரிமையின் மறுபகுதியாக இத்தகைய கட்டுமானங்களை பண்பாட்டு மரபுரிமையாக்கும்.

**வேறுபட்ட நீர் முனையங்கள்**

அவற்றின் இயல்புகள் அதன் சூழல் சார்ந்த தனிப் பண்புகள் முதலியவற்றால் அரண்செய்யப்பட்டு, ஏனையவற்றோடு சங்கிலிக்கோர்வையாகப் பிணைக்கப்படவேண்டும். உதாரணமாக சில நீர்முனைகள், குளியல், வேறு உல்லாசத் தோணித்துறைகள் இன்னும் சில விருந்தினர் மீன் தூண்டிற்துறைகள் ஆரோக்கிய மரபுக் குளியற் துறைகள் மற்றும் இன்னுஞ் சில நீர்ப் பறவைக் காட்சியிடங்கள் முதலான சிறப்பு மையங்களாக்கி இணைக்கப்படவேண்டும். இதனை ஒட்டி மேலும் புதிய - புத்தாக்க நடைமுறைகளை நீர் முனைகளது சிறப்புக் கருதி உருவாக்கலாம், பாலியாற்றங்கரையில் பாலி அம்மன் பள்ளுப் படிக்கும் ஆற்றுகைக் களத்தை - ஒரு பண்பாட்டு மரபுரிமைக் களத்தைத் திறக்கலாம். மேலும் ஒரு திறந்த வன அரும்பொருளகத்தை (open forest museum) நிர்ணயம் செய்யலாம். அதனைவிட வனப்பூங்காக்கள், சிறுவர் வனக் கல்வி, விளையாட்டு வலயங்களை மற்றும் புதிய வகையான பிராந்திய தனித்துவத்தை முன்னிறுத்திய வனவிலங்குச் சரணாலயங்கள், பறவை மையங்களை உருவாக்கலாம். அதனைப்போலவே தமிழ் விவசாயத்திற்கான அரும்பொருளகத்தை - விவசாயக் கருவிகள் விவசாய முறைகள் பயிர்கள், விதைகள் உள்ளிட்ட பலவற்றைக் கொண்டமைக்கலாம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# 20 யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 - 1995

தில்லைநாதன் கோபிநாத்

பொருண்மிய மேம்பாட்டுக்காக ஆதாரம், மாணவர்களுக்காக சாளரம், கலை இலக்கியத்துக்காக வெளிச்சம், செய்திகளுக்காக ஈழநாதம் எனப் பல்வேறு சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் ஆரம்பிக்கப்பட்டமை போன்று அரசியல், அறிவியல், சமூக விழிப்புணர்வுக்காகத் தமிழீழ நோக்கு, உலக உலா போன்ற ஆய்வுத் தரமான இதழ்கள் தொடங்கப்பட்டன. இந்த வகையில் முக்கியமான வெளியீடாக அமைந்தது "தேர்ந்த கட்டுரைகள்" என்ற நூல் வரிசை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட நூல் வரிசை என்பதால் "தேர்ந்த கட்டுரைகள்" எனப் பெயரிடப்பட்ட இந்த நூல் வரிசையின் முதலாவது நூல், 1991 யூலை முதலாம் திகதி வெளியானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டு வாரியத்தின் வெளியீடாகத் தொடங்கப்பட்ட இந்த நூல் வரிசை 1994ஆம் ஆண்டளவிலிருந்து புலிகளின் அரசியல் துறையின் வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்பட்டது. போராளிகளிடையேயும் அரசியல் வகுப்புக்களிலும், பொதுமக்களிடமும் விநியோகிக்கப்பட்ட இந்நூல் வரிசை போராளிகளுக்கெனத் தயாரானதால் விலை குறிக்கப்படாமல் வெளியானது. சில நூல்களின் முன்னுரை தோழர்களுக்கு எனத் தொடங்கியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளியான பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இந்த நூல் வரிசையில் இடம்பெற்றன. அத்துடன் அரசியல் வகுப்புப் பாடங்களும் இடம்பெற்றன. இவற்றில் பெருமளாவானவை மொழிபெயர்ப்புக்களாகும்.

ஐலண்ட், ஒப்சேவர், சண்டே ரைம்ஸ் போன்ற கொழும்புப் பத்திரிகைகள் மற்றும் நியூஸ் வீக், ஏசியாவீக், புரொன்ற்லைன், நியூயோர்க் ரைம்ஸ் போன்ற வெளிநாட்டுப் பத்திரிகைகளின் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டன. அத்துடன் தினகரன், வீரகேசரி போன்ற இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைக் கட்டுரைகளும் குன்றின் குரல் போன்ற சஞ்சிகைக் கட்டுரைகளும் மீள்பிரசுரமாகின. ராணி, காலச்சுவடு, நக்கீரன், சுமங்களா போன்ற தமிழகச் சஞ்சிகைகளிலிருந்தும் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது கட்டுரைகள் அல்லாத ஆக்கங்களும் தொகுக்கப்பட்டன. பன்னிரண்டாவது நூலில் வெளியான கலைஞர் கருணாநிதியின் கவிதை இத்தகைய ஒன்றாகும்.




உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை புலிகள் பற்றி வெளியுலகில் முன்வைக்கப்படும் பல்வேறு பார்வைகளைத் திரட்டும் வகையில் பல கட்டுரைகள் தெரிவாகியுள்ளன. புலிகளதுபோர் நடவடிக்கைகள் தொடர்பான பார்வைகளும் தொடர்ந்து தொகுக்கப்பட்டாலும், அரசியல் சார்ந்த கட்டுரைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. சினிமா, தமிழ் இலக்கியம், பண்பாடு, மொழி, மனித உரிமை, சுகநலம், வரலாறு, வாசிப்புப் பழக்கம் எனப் பல்வேறு அறிவுத்துறைகள் தொடர்பான கட்டுரைகளும் சிறிய எண்ணிக்கையில் தொடர்ந்து வெளியாகின.

> இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளியான பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இந்த நூல் வரிசையில் இடம்பெற்றன. அத்துடன் அரசியல் வகுப்புப் பாடங்களும் இடம்பெற்றன. இவற்றில் பெருமளாவானவை மொழிபெயர்ப்புக்களாகும்.


உலகளாவிய இனப்பிரச்சினைகள், உள்நாட்டுப் போர்கள், இனப்படுகொலைகள் தொடர்பான கட்டுரைகளும் தொடர்ச்சியாகத் தொகுக்கப்பட்டன. சிரியா, லத்வியா, கொரியா, செக்கோசிலாவாக்கியா, இந்தோனேசியா, கொலம்பியா, பொஸ்னியா, சைபீரியா, அங்கோலா என அக்காலத்தில் சிறுபான்மையினர் சிக்கல்களை எதிர்நோக்கிய பல்வேறு நாடுகளின் நிலைமைகள் இவ்வாறு தொகுக்கப்பட்டன.

புலிகளின் பிரச்சார வெளியீடுகளிலிருந்து வேறுபட்டதாக இந்த நூல்வரிசை அமைந்தமை முக்கியமானதாகும். "ஒவ்வொரு எழுத்தாளரும் தங்களது பார்வையில் சரியென்று பட்டதையே கட்டுரைகளாக எழுதுகின்றனர். இவை சரியானதா? பிழையானதா? என்பதனைப் பகுப்பாய்வு செய்து தெரிந்து கொள்ள வேண்டியது வாசகர்களாகிய உங்களைப் பொறுத்ததாகும்" என்ற குறிப்பும் வெவ்வேறு சொற்களில் முன்னுரையில் இடம்பெற்றிருந்தது.

மாற்றுக் கருத்துக்கள் தொடர்பான புலிகளது நிலைப்பாடு எதிர்மறையானது என்ற பொதுவான கருத்து இப்போதும் உள்ளது. ஆனால் தங்களது பிழைகளைச் சுட்டிக் காட்டும் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்ப்புச் செய்து நூலாக்கி வெளியிட்டு போராளிகளிடையே விநியோகித்தும் உள்ளனர் என்பது முக்கியமான தகவல் ஆகும். 1992இல் வெளியான தேர்ந்தெடுத்த கட்டுரைகள் எட்டாவது தொகுதியில் இடம்பெற்ற "விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள்; தொடர்ந்தும் காத்தான்குடி வாழ்கிறது" என்ற கட்டுரை இத்தகையது ஆகும். 'ரைம்ஸ்' இதழில், தினேஷ் வட்டவன என்பவர் எழுதியதன் மொழிபெயர்ப்பான இக்கட்டுரையில் புலிகள் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியமை, பொதுமக்கள் மீதான ஏனைய தாக்குதல்கள், மன்னாரிலிருந்து மக்களை வெளியேற்றியமை போன்ற விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

---

# அதென்ன செயற்கை மழை?





ஏ.ஜே.ஞானேந்திரன்

வானம் பொய்த்தால் நாடு வறண்டு விடும். இந்த மழை மனிதனுக்கு மிக முக்கியமானது. இந்த மழைக்காக, பின்தங்கிய கிராமங்களில் நடத்தும் சடங்குகள் நமக்கு வியப்பளிப்பவை.

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் சிறுவன் ஒருவன் கிராம மக்களுடன் சேர்ந்து நிர்வாணமாக ஊர்வலம் சென்று சிறப்புப் பூஜை செய்துள்ள நிகழ்வு, சமீபத்தில் வைரலாகி இருந்தது..

ஆயினும் விஞ்ஞானம் அகிலம் முழுவதும் அகலக் கால் பதித்துள்ள இந்தக்காலத்தில் ,செயற்கையாக மேகத்தை கர்ப்பிணியாக்கி மழை பொழிய வைக்கத் தொடங்கி விட்டார்கள் விஞ்ஞானிகள்.

இப்பொழுது மழைக்காக காத்திருக்க முடியவில்லை. பல தடவைகளில் ஏமாற்றி விடுகிறது. எனவே விஞ்ஞானம் மழையை உருவாக்கும் வித்தையைக் கையில் எடுத்துவிட்டது. பொதுவாக மேகமே மழையைக் கொண்டு வருகின்றது. கறுத்து, நீரால் திரண்ட மேகங்கள் மழையாகக் கொட்டுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

ஆனால் எல்லா மேகங்களும் மழையைக் கொண்டு வருவதில்லை. வெப்ப மேகம், குளிர் மேகம் என்று மேகங்களைப் பிரிக்கிறார்கள். இந்தியா , இலங்கை போன்ற ஆசிய வெப்ப நாடுகளில் 80 வீதமான மழை இந்த வெப்ப மேகங்களிலிருந்தே பெறப்படுகின்றது. செயற்கை மழை தரும் மேகங்ளை உருவாக்குவதற்கு , விமானத்தில் பறந்து, இந்த வெப்ப மேகங்களுக்கு இடையில் சோடியம் குளோரைட் என்ற இரசாயனப் பெயரைக் கொண்ட உப்பைத் தூவுகிறார்கள்.


### ஏன் உப்பு தேவைப்படுகின்றது?

வெப்ப மேகங்களில் ஆவியான குறைந்த நீர்த் திட்டுக்களிலிருந்து சிறு பனிக்கட்டிகள் வரை பல்வேறான நீர்த்திவலைகள் (dew) இருக்கும். பொதுவாக உப்புக்கு நீரை உறிஞ்சும் சக்தி உண்டு. இங்கே உப்பு விழும்போது , மேகத்தில் உள்ள நீர்த் துளிகள் பெரிய பனிக்கட்டிகளாக மாறிவிடும்.

குளிர் மேகங்களுக்கு இந்த உப்புத் தேவைப்படாது. இங்கேயும் நீரும், பனித் திவலைகளும்(dew)) இருக்கும். இவற்றைப் பனிக்கட்டிகளாக்கும் திறன் ' சில்வர் அயோடைட்' என்ற இரசாயனப் பொருளுக்கு உண்டு. இதைச் சேர்த்ததும் எல்லாமே பனிக்கட்டிகளாக ஆகி விடும்.

காய் பழுத்தால் தரையில் விழும் என்பது போல

மேகம் பழுத்தால் (பனிக்கட்டிகளின் சுமையால்), அது தரையை நோக்கி, மழையாகப் பொழிய ஆரம்பிக்கும். மேகத்தை நிறைமாதக் கர்ப்பிணியாக்கி, மழை பொழிய வைக்கும் தந்திரம் இதுதான்....



# காதல்: எஞ்சுவது கண்ணீரா?

தருமராசா அஜந்தகுமார்

காதல் பற்றிய சுதந்திரமான எண்ணங்கள் இன்று குடும்பங்கள் மத்தியில் எவ்வாறு இருக்கின்றன என்ற கேள்வியை எழுப்பினால், சாதியைப் போலவும் கொரோனாவைப் போலவும் ஒரு தீண்டாமையாகவே இன்னும் பண்பாட்டு இறுக்கத்துடன் இருப்பதைக் காணலாம். அதேநேரத்தில் சிறுவர்கள் மத்தியில் பாலியல் கல்வியைக் கொண்டுவருவது பற்றிய சிந்திப்புக்களை வலுவாக கல்வியியலாளர்கள் முன்வைப்பதை யும் காணமுடிகின்றது. காதல் என்பதே தீண்டாமையாக கருதப்படுகின்றது என்றால் பாலியல் என்பது பெருந்தீண்டாமையாகப் பெரியவர்கள் மத்தியில் விளங்குகின்றது.

ஆனால் திறன்தொலைபேசிகள் வாயிலாக ஆபாசக்காட்சிகளை நுகருவதில் எமது நாடும், பிரதேசங்களும் முன்னிலை வகிக்கத்தொடங்கிவிட்டன. சிறுவர்களுக்கு தாராளமான திறந்த நுகர்வுப்பொருளாக பாலியல் மலினக் காட்சிகள் மாறிவிட்டன. போதைப்பொருள்களின் பாவனை அதிகரிப்பும், அதீத மலினக்காட்சிகளும், அவர்களின் உள்ளத்தை வேட்டையாடி மனிதத்தையும் குழந்தைமையையும் காவுகொண்டுவிட்டன. பெண்பிள்ளைகளைப் பெற்றவர்கள் மடியில் நெருப்பைக் கட்டவேண்டிய காலத்துக்கு மாறிவிட்டார்கள். பெண்பிள்ளைகளின் வாழ்க்கை பல அத்துமீறல்களைச் சந்தித்துக்கொண்டிருப்பதை அன்றாடச் செய்திகள் சொல்லியபடியே இருக்கின்றன. பாவக்கதைகள் என்ற திரைப்படத் தின் வான்மகள் போலவும் அக்கினிப்பிரவேசம் கதையில் வரும் தாயைப்போலவும், எத்தனையோ பெற்றோரின் முகாமைத்துவமும் துணிவும் தம்மளவில் பல தீர்வுகளையும் உறுதியையும் எடுத்துக்கொண்டாலும் பல குடும்பங்களின் வாழ்க்கை சீரழிவைச் சந்தித்துக்கொண்டே இருக்கின்றது. அதிகரித்த சமூகவலைத்தளங்களும் காதலியுங்கள் நாங்கள் உங்களுக்கு இருக்கிறோம் என்று மலிந்த சலுகைகளை அள்ளி வழங்கும் வலையமைப்புகளும் இளைய சமுதாயத்தை ஊடுருவத் தொடங்கிவிட்டன. நாம் நவநவீன யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று மார்தட்டிக்கொண்டாலும், கால இயந்திரத்தில் பின்னோக்கிப் பின்னோக்கி இயற்கைப் புணர்ச்சிக் காலத்தை நோக்கிச் சென்றுவிட்டோம். நாம் இப்போது சங்ககாலத்தில் வாழ்கின்றோமே என்ற பிரமை ஏற்படுவதைத் தவிர்க்கமுடியவில்லை. சங்ககாலத்தை பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் இயற்கை நெறிக்காலம் என்றார். சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கை அமைகிறது என்ற கருத்தைச் சங்ககாலம் நன்கு விளக்குகின்றது என்பது அவர் கருத்து.(தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்). இயற்கையுணர்ச்சிகளுக்கு கட்டுப்பாட்டை அவர்கள் விதிக்கவில்லை. பாலியல் நுகர்வு தாராளமாக சுதந்திரமாக இடம் பெற்றது. அதிலும் ஆண்கள் அதிகாரத்தை நிலைநாட்டினார்கள்.

தமது தேவை நிறைவடைந்ததும் தீம்பால் உண்பவர், கொள்கலம் வரைதல் போல் நீங்கிச் சென்றார்கள். பெண்களோ நோமென் நெஞ்சே நோமென் நோமென் நெஞ்சே இமைதீய்ப்பன்ன கண்ணீர்தாங்கி அவலப்பாத்திரமாக நின்றார்கள். போர் ஆண் சமுதாயத்தை அழித்தது என்றால் காதல் பெண்களின் ஒழுக்கவாழ்வை அழிந்தது. காதலின் நினைவால் கண்ணீரே எஞ்சியது. எமது போரின் இறுதிநாள்களுக்கான இயற்கையின் சாட்சியைப் போலவே அக்காலக் காதலுக்கும் கூடலுக்கும் இயற்கையே சாட்சியாகி நின்றது. நவீன பெண் கவிஞர்கள் பெண் உடல் பூண்ட முழு இயற்கை நான் (அனார், உடல் பச்சை வானம்) என்று உடலை இயற்கையாகக் கொண்டாடினாலும் அக்காலத்தில் அவ்உடல் இயற்கையே சாட்சியாகக் காவுகொள்ளப்பட்டது. இதனைக் கபிலர் குறிஞ்சித் திணைப்பாட்டு ஒன்றின் மூலம் எம் கண்களுக்குக் கொண்டு வருகின்றார்.

(குறுந்தொகை:25)

**யாரும் இல்லைத் தா்னே கள்வன்:**
**தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?**
**தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே!**

திருமணம் செய்கின்றேன் என்று உறுதி கூறி அவள் உடலைக் கள்வனைப் போல எடுத்துக்கொண்டு அவன் பொய்த்துவிடுகின்றான். அவனைத்தவிர அங்கே ஒரு சாட்சி இருந்தது என்றால் மீனை எதிர்பார்த்து நிற்கும் நாரைதான் இன்னொரு சாட்சி. இதனைப் பேராசிரியர் ம.இரகுநாதன் அவர்கள், ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகு அவளுக்கு எப்படிச் சாட்சியாக முடியும்? அவன் தன்னோடு கூடியதை மறுத்தால் நான் வேறு என்னதான் செய்யமுடியும் என்ற ஏக்கம் சங்ககாலப் பெண்களுக்கு ஏற்பட்ட பரிதாபகரமான நிலையையே எடுத்துக்காட்டுகின்றது என்று குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

(பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள், பக்கம் 78)




வெள்ளிவீதியார் தனது பாடலொன்றில் தலைவன் இல்லாது எவ்வாறு இளமை பயனற்றுப்போகிறது எனப்பாடுகின்றார். (குறுந்தொகை:26) இன்னொரு பாடலில் ஔவையார் தன் உயவு நோய்( பிரிவினால் வரும் உடல்வேறுபாட்டு நோய்) அறியாது உறங்கும் ஊர்க்கு முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்? என்று தவிக்கும் பெண்மகளைக் காட்சிப்படுத்துகின்றார். (குறுந்தொகை:27) சாட்சிகளற்ற நுகர்விலும் பிரிவின் உபாதையிலும் தவிக்கும் தடுமாறும் பெண் குரல்களைச் சங்க அக இலக்கியங்களில் அதிகம் கேட்கமுடியும்.

இவ்வாறு,
பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல்காப்பியம், கற்பியல்) என்ற திருமணச் சூழல் அறம் சார்ந்து உருவாக்கப்படுகின்றது. ஆயினும் மீண்டும் திருமணம் என்பது அறம் என்ற எண்ணம் குறைகின்ற போக்கை நோக்கிச் செல்லத் தலைப்பட்டுவிட்டோம். ஒரு பாலுறவு, திருமணமற்று தங்கி வாழுதல் என்ற எண்ணங்களை நோக்கிப் பெண்ணியலாளர்கள் பயணிக்கத் தொடங்கிவிட்டார்கள். பெண்படைப்பாளிகளும் பெண்ணின் பாலியல் சுதந்திரம் உட்பட தமது விடுதலையை உரத்துப் பேசத்தொடங்கிவிட்டார்கள். ஆனாலும் பெண் உடல்வேட்டையாடப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இங்கு மிருகங்கள் வேட்டையாடப்படுவதற்குப் பதில் மிருகங்களே வேட்டையை நிகழ்த்துகின்றன. அவர்கள் பார்வையில் என்ற சங்கரியின் கவிதை முதல் பெண் உறுப்பு என்ற குறும்படம் வரை ஆண்களின் பெண் உடல் பற்றிய எண்ணங்களை தோலுரித்துக்காட்டினாலும், அவை சமூகத்தின் போக்கைப் பெரிதாக அசைத்துவிடவில்லை என்றே தோன்றுகின்றது. ஐந்து வயதுச் சிறுமிமுதல் முதியோர்வரை வன்புணர்வுக்கு உட்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். இவ்விடத்தில் துவாரகன் என்ற புனைபெயரில் எழுதும் சு.குணேஸ்வரன் அவர்களின் யானெவன் செய்கோ? என்ற கவிதை முக்கியமானது. இக்கவிதை அவரது அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள் என்ற தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்தகாரத்தில் ஒலித்து ஒய்ந்துபோன
அந்த ஈன ஒலி
காற்றில் கலந்து கரைந்து போனது.

மெல்ல மெல்ல
மண்ணில் இருந்து எழுந்து
மரங்களில் தெறித்து
வானத்தில் சென்றடங்கிப் போனது


எது சாட்சி?

ஒரு மரம்
ஓணான், காகம், குருவி
இன்னும்
நான்கு சுவர்களும் பல்லிகளும் சாட்சி.

அந்த வேப்பமர ஊஞ்சல்
அவள்
காற்றில் கூந்தல் விரித்த
கணங்களையும் இழந்துவிட்டது.

சுவருக்கும் பல்லிக்கும்
மரத்துக்கும் ஓணானுக்கும்
கடவுள் பேசும் வரம் கொடுத்தால்
கட்டுண்ட வெளியில் இருந்து
புதையுண்ட மண்ணில் இருந்து
மூடுண்ட அறையுள் இருந்து
இன்னும் கதைகள் பிறக்கும்.

அன்று இசைவோடு ஏமாந்தாள்
குருகு சாட்சியாக.
இன்று அந்தகாரத்தில் அடங்கிப்போனாள்
பல்லியும் ஓணானும் சாட்சியாக. (11.2010)



# ‘த க்ரேட் கிச்சன்’

## The Great Indian Kitchen

O ஆரதி

எல்லோரும் “வெளியே புரட்சித் தலைவர். வீட்டில் நடிகர் திலகம்” என்று இசையின் கவிதை ஒன்றில் ஒரு அடிவரும். கணவர்களின் - ஆண்களின் இரட்டை உலகத்தை இதை விடச்சிறப்பாக, பகிடி யாக வேறு எப்படிச் சொல்ல முடி யும்? ஏறக்குறைய அப்படித் தான் ‘த க்ரேட் கிச்சன்’ (The Great Indian Kitchen ) படத்தைப் பார்த்தபோதும் தோன்றியது. இது ஒரு மலையாள மொழித் திரைப்படம். ஆனால், அச்சு அசலாக நம்முடைய கதையாக, நம் நிலையாக அப்படியே நமக்குப் பொருந்தியுள்ளது. சிறந்த எந்தக் கலை வெளிப்பாட்டுக்கும் இந்தப் பண்பிருக்கும். சினிமாவில் இது இன்னும் நெருக்கமாக இருப்பதுண்டு. அந்த நெருக்கத்தை’த க்ரேட் கிச்சன்’என்ற இந்தப் படமும் தருகிறது. திருமணமாகி மணமகனின் வீட்டுக்கு வரும் பெண், அந்தக் குடும்பத்துக்கு ஏற்ற மாதிரித் தன்னை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தமே கதை. இதில் அந்தப் பெண் வெறும் பொம்மையாக்கப்படுகிறாள். ஆனால், அதற்கு அவளால் முடியாமலுள்ளது. 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு என்றால் இதில் அதிக சிக்கல்களில்லை. நிலைமையைப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு தம்மைச் சுதாகரித்துக் கொள்வதே பெரும்பாலான பெண்களுடைய வழக்கமாகவும் வாழ்க்கையாகவுமிருந்தது. இன்றைய பெண்கள் அதற்குத் தயாரில்லை. கல்வியும் சமூக வளர்ச்சியும் பெண்களின் சுயாதீனத்தைக் குறித்து சிந்திக்கவும் எழுச்சியடையவும் வைத்துள்ளன. இந்த வளர்ச்சியினால் உண்டாகும் முரணே ‘த க்ரேட் கிச்சன்’.

வெளியே புரட்சி, மாற்றம், முன்னேற்றம் பற்றியெல்லாம் கதைக்கும் அல்லது இவற்றுக்காக முயற்சிக்கும் ஆண்கள், வீட்டில் மாற்றங்கள் ஏதுமில்லாத பழமைக்குள் ஊறிக்கிடக்கிறார்கள். குடும்பப் பாரம்பரியம், வழமை, இதென்ன பெரிய விசயம். இதெல்லாம் இயல்புதானே! என்றவாறு இருக்கும் - இயங்கும் ஆண்களாக இருக்கிறார்கள். வீட்டுப் பணிகளைச் செய்வதும் குடும்பத்தைப் பராமரிப்பதும் ஆணின் - ஆண்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதுமே பெண்களுடைய கடமை. அதுதான் அவர்களுடைய பொறுப்பு. அவ்வாறு வாழ்வதே பெண் வாழ்க்கை என இவர்கள் நம்புகிறார்கள். அப்படி நம்புவதால்தான் அவர்கள் பத்திரிகை படிப்பார்கள். வட்ஸப்பில் எதையாவது பார்த்துக் கொண்டிருப்பர். அல்லது முகப்புத்தகத்தில் எதையாவது நோண்டிக் கொண்டோ மேய்ந்து கொண்டோ இருப்பார்கள். அல்லது யாராவது நண்பர்கள் வந்தால் சுவாரஷ்யமாக கதைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படியே வெளியே கிளம்பி எங்காவது சுற்றி விட்டுக் களைப்போடு வருவதாக தண்ணீரோ தேநீரோ கோப்பியோ கேட்பார்கள். இரவுகூட தொலைக்காட்சியில் செய்தி பார்ப்பதும் அதிலே போகும் விவாதங்களைக் கேட்பதும் அவர்களுக்கு முக்கியமாக இருக்கும். ஆனால், பெண்கள் இதற்கெல்லாம் அப்பாலானவர்கள். அதிலும் மனைவி என்று வந்து விட்டால், தேநீர் ஊற்றிக் கொடுப்பதில் ஆரம்பித்து சமைப்பது (மூன்று வேளைக்கும்) துணி துவைப்பது, வீட்டைத் துப்புவாக்குவது, பாத்திரங்களைக் கழுவுவது தொடக்கம் படுக்கை விரிப்பது வரையில் அத்தனையும் செய்ய வேண்டும்.

இதொன்றும் புதியதல்ல. ஏனென்றால் நம்முடைய பெரும்பாலான குடும்பங்களின் அடையாளமும் நிலையும் இதுதான். ஒவ்வொரு நாளும் வேளையோடு எழுந்திருப்பதும் பெண்தான். பிந்தித் தூக்கத்துக்குச் செல்வதும் பெண்தான். அதற்கிடையில் ஓய்வொழிச்சல் இல்லாமல் அத்தனை வேலைகளையும் அவர்கள் செய்து தீர வேணும். இதில் வேலைக்குச் செல்லும் பெண்கள் என்றால் அவர்களுக்கு இரட்டைச் சுமை. ஒன்று வெளியே உள்ள வேலை. சம்பாத்தியத்துக்கானது. வீட்டில் வீட்டு வேலைகள், பிள்ளைகளையும் கணவரையும் பராமரிப்பது எனத் தொடங்கி படுக்கையை விரித்துச் சரி செய்வது வரையில் ஏராளம் ஏராளம் வேலைகள். வீட்டுக்கு யாரோ ஒருத்தர் வந்தாலும் அவர்களை வரவேற்று ஒரு தேநீர் கொடுப்பதாக இருந்தாலும் அதைப் பெண்களே செய்ய வேண்டும். எழுதப்படாத விதியாக - ஒரு நியதிபோல நாம் இதை ஆக்கி வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, இதில் எந்த மாற்றமும் வந்து விடக்கூடாது என்று இதைத் தொடர்ந்து பராமரித்துக் கொண்டுமிருக்கிறோம். இதொன்றும் புதியதல்ல. ஏனென்றால் நம்முடைய பெரும்பாலான குடும்பங்களின் அடையாளமும் நிலையும் இதுதான். இதையெல்லாம் தினமும் எந்தக் குறையும் இல்லாமல் செய்த பிறகுதான் பெண்கள் தங்களுக்குப் பிடித்தமான எதையும் செய்யலாம். இல்லையென்றால், உனக்கு என்னதான் தெரியும் என்று தொடங்கி ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவாகிவிடும்.

குடும்பம் என்ற அமைப்புக்குள்ளே பெண்களுக்கான இடம் என்பது மிகக் குறுகலானதாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதை ஆண்களும் உணர்ந்து கொள்வதில்லை. பெரும்பாலான பெண்களும் பழகிய, வழமையான ஒன்றாகவே குடும்பத்தின் நன்மைக்காக என்ற எண்ணத்தில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்து விடுகிறார்கள். இதையே ‘த க்ரேட் கிச்சன்’ கேள்விக்குள்ளாக்குகிறது.

இதற்கு நல்ல உதாரணம், “அம்மா என்ன செய்கிறா?” என்று பிள்ளைகளிடம் கேட்டால், “வீட்டில் சும்மா இருக்கிறா” எனச் சொல்வார்கள். ஆனால் வீட்டிலிருக்கும் அம்மா தன்னுடைய வாழ்க்கையில் எத்தனை கிலோ அரிசியைச் சோறாக்கியிருப்பா? எத்தனை லீற்றர் தண்ணீரைக் கொதிக்க வைத்திருப்பா? எத்தனை ஆயிரம் இடியப்பத்தை, தோசையை, றொட்டியை, இட்லியை ஆக்கிப் போட்டிருப்பா? எவ்வளவு துணியைத் துவைத்துப் போட்டிருப்பா? எவ்வளவு நிலத்தைக் கூட்டிப் பெருக்கியிருப்பா? இப்படி எத்தனை உழைப்பு? ஆனால் இதெல்லாம் கணக்கில் இல்லை. இதைக்குறித்து எந்தப் பிரக்ஞையும் (உணர்தலும்) அவர்களுக்குள் நிகழ்வதில்லை.

பெண்கள் என்றாலே சமைத்து போடவும் துணி துவைக்கவும் அப்புறம் இரவில் .. வும் என்ற நிலையில் தான் ஆண்களின் பகுத்தறிவும் படிப்பறிவும் உள்ளது. அநேகமான ஆண்கள் நினைப்பது திருமணம் செய்வதே மேலே குறிப்பிட்ட செயல்களை செய்யத்தான் பெண்கள் என்று. இது எழுதப்படாத விதிமுறையாக இருக்கிறது. அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் ஆண்களுக்குச் செருப்படி கொடுத்துள்ளது இந்தப் படம். “மாவு முடிஞ்சு போச்சுது ..வாங்கி கொண்டு வாறீங்களா?” என்றால்,

“அரிசி உளுந்து ஊறப்போட்டு அரைச்சு வச்சால் ஒரு கிழமைக்குப் போதும். அதைச் செய்யத் தெரியாதா? எப்ப பார்த்தாலும் கடைக்குப் போய்த்தான் எதையும் செய்யோணுமா?” என்று பதில் வரும்.

“வெங்காயம், தக்காளி, அப்படியே குழம்புக்கும் பொரியலுக்கும் எதாவது பார்த்துக் கொஞ்சம் காய் கறி வேணும்” என்றால் “இரவுக்கு என்ன செய்ய வேணும், நாளைக்கு என்ன செய்ய வேணும் எண்டெல்லாம் யோசிச்சு வாங்கி வைக்க மாட்டியா? கடைசி நேரத்துல அது வேணும் இது வேணும் எண்டு ஒரே இம்சை...” என்ற பதிலடிதான் கிடைக்கும்.

“வீடு பூரா துணிமணி..மடிச்சு வெச்சாதான் என்ன?” என்ற திட்டு வேறு. இதற்கு “ஒரு செட் தோய்ச்சுக் காயிறதுக்குள்ள அடுத்த செட் வந்து குவியுது..இருக்கிற நாலு பேருக்கு வீட்டுக்கு போடுறது, ஒபீஸ்க்கு போடுறது, வெளியே போடுறதுக்கு எண்டு தினமும் ஒரு மலை சேருது..” என்று யதார்த்தை - உண்மையைச் சொன்னால் - “அதுக்கென்ன செய்யிறது? போடாம வெளியே போகட்டுமா?” என்று மறுத்தான் கிடைக்கும்.

போதாக்குறைக்கு - “ஒரு நாளாவது சிங்க்ல பாத்திரம் இல்லாம இருக்கா? ஏனிப்பிடிக் குவிஞ்சு போய்க் கிடக்கு?” என்ற கேள்வி வேறு.


“ரீ குடிச்ச கப், சமைச்ச பாத்திரங்கள், சாப்பிட்ட தட்டுகள் என்ற குறைஞ்சது அஞ்சு தடவை பாத்திரம் கழுவுகிறேன்..கை வலிக்குது..” என்று நிலைமையைச் சொன்னால்... “அப்பப்ப கழுவினா இவ்வளவு சேரவே சேராதே..நீ சோம்பேறி. அதுதான் இப்பிடி... எங்கட அம்மாவும் அஞ்சு ஆறு பிள்ளைங்களைப் பெத்து வளர்த்து ஆளாக்கினவதான். ஒருநாள்கூட இப்படியெல்லாம் புலம்பினதே இல்லை” என்று கிடைக்கும் பதில்.

“அம்மாவுக்கு ஏதோ அவசரமாம்..கொஞ்சம் பணம் அனுப்பினேன்” என்றால் -

“யாரைக் கேட்டு அனுப்பினனி? நீயும் உழைக்கிறாய் என்ற திமிர்தானே!” என்பார்கள்.

இப்படியே உன்ரை சமையல் போல வருமா என்று ஏமாற்றித் தந்திரமாக ஆதிக்கம் செய்வார்கள். அல்லது சமைக்கிறதுதான் ஒரே வேலை. அதைக் கூட உருப்படியா நீ செய்ய மாட்டியா? என்று திட்டி ஆதிக்கம் செய்வார்கள். ஒன்று உழைக்கும் மனைவியிடம் தந்திரம் செய்வது. அடுத்தது, வீட்டில் இருக்கும் மனைவியிடம் அதிகாரம் செலுத்துவது. சில விதிவிலக்குகள் காய்கறி நறுக்கி கொடுப்பது, தேங்காய் துருவிக் கொடுப்பது என்ற ஏமாற்றும் வேலை. இப்படியே சம்பளமில்லாத வேலைக்காரிகளை அம்மா, அக்கா, மனைவி, தோழி என்று கொஞ்சி, குலாவி அவர்கள் வேலை செய்ய மட்டுமே பிறந்தவர்கள் என்று அவர்களையே நம்ப வைத்து அல்லது அப்படி ஏற்க வைத்து காரியம் பார்க்கிற ஆண்களின் உலகத்தை - குடும்பம் என்ற அமைப்பின் சீர்கேட்டை உடைக்கிறது The Great Indian Kitchen. பெண்களைப் புரிந்து கொள்ள மறுக்கும் அவர்களுடைய உணர்வுகளை மறுதலிப்போரை கேள்விகளின் முன்னே நிறுத்துகிறது. வேறு யாரையுமல்ல, உங்களைத்தான்.





# அம்மாவின் அன்பு




ம.பா. மகாலிங்கசிவம்

தமிழ்க் கவிதை உலகில் குழந்தைக் கவிதைகளும் தமக்கெனத் தனியான இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. குழந்தைகளின் அனுபவ உலகினுள் அடங்கும் விடயங்களைக் கருப்பொருளாகக் கொள்ளல். குழந்தைகளுக்கு விளங்கக்கூடிய சொற்களைக் கொண்டிருத்தல், ஓசையுடன் பாடக் கூடியவையாக இருத்தல், சொற்கள் திரும்பத் திரும்ப வருதல் என்பவை குழந்தைக் கவிதைகளுக்கான இலக்கணங்களுள் சிலவாகும்.

தமிழில் குழந்தைப்பாடல் மரபின் வளர்ச்சியை நோக்கினால் தமிழகத்தைவிட இலங்கையே காலத்தால் முற்பட்ட முயற்சிகளை மேற்கொண்டிருப்பது கண்கூடு. 1886 ஆம் ஆண்டு தம்பி முத்துப்பிள்ளை 'பாலியக் கும்மி' என்ற நூலை முதலில் வெளியிட்டார். நூலின் பெயரை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் குழந்தைகளுக்கான கும்மிப் பாடல்களின் தொகுப்பாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதனை அடுத்து 1918 ஆம் ஆண்டிலேயே 'தமிழ்ப் பால போதினி' என்ற குழந்தைக் கவிதைத்தொகுதி வெளிவந்துள்ளது. இலங்கை அரசியலில் முதலியாராக இருந்த ச.வைத்தியநாதரால் இத்தொகுதி வெளியிடப்பட்டது. இத் தொகுதியில் சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, கை வீசம்மா கைவீசு, குண்டுடிக்கி குடுகுடுக்கி முதலிய சிறந்த பாடல்கள் இடம்பெற்றிருந்தன.

இத்தொகுதி பற்றிய இரசிகமணி கனக செந்திநாதனின் "தமிழ்நாடு, குழந்தை இலக்கியம், முக்கியமாகக் கவிதைகள் பற்றிச் சிந்திக்கும் முன்பே, ஈழத்தில் இது தோன்றி வளரத் தொடங்கிவிட்டது" என்ற கூற்று, தமிழகத்தை விட இலங்கை இத்துறையில் முன்னிலை பெற்றிருந்ததை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையிலே குழந்தைக் கவிதை எழுதியவர்களுள் வித்துவான் க. வேந்தனார் முதன்மையானவர். அவரது அம்மாவின் அன்பு என்ற இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கும் இப்பாடல் அவர் எவ்வளவு சிறந்த கவிஞர் என்பதற்குப் போதிய சான்றாகும். இவர் வேலணையில் 1916 இல் பிறந்தவர். சிறந்த தமிழாசிரியர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும், மதுரைத் தமிழ் சங்கத்தில் பண்டிதர் பட்டமும் சைவசித்தாந்த சமாசத்தில் சைவப்புலவர் பட்டமும் பெற்றவர். சிறந்த கவிஞராகவும் விளங்கிய இவரது கவிதைகள் ஈழநாடு முதலிய பத்திரிகைகளிலும், இலங்கை வானொலியிலும் வெளிவந்துள்ளன. கவிதைப் பூம்பொழில் (கவிதைத் தொகுப்பு) குழந்தை மொழி (சிறுவர் பாடல்கள்) தன்னேர் இல்லாத தமிழ் (கட்டுரைத்தொகுப்பு) இந்துசமயம் (பாடநூல்) திரு நல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும் என்பவை இவரது நூல்களாகும். இவரது கவிதைகளில் சிறந்ததாக கருதப்படும் அம்மாவின் அன்பு இங்கே தரப்படுகிறது.


வித்துவான்
க. வேந்தனார்

**காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்**
**கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்**
**பருகத் தந்த அம்மா**

**புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்**
**பூவுஞ் சூட்டும் அம்மா**
**அழுது விழுந்த போதும் என்னை**
**அணைத்துத் தாங்கும் அம்மா**

**அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி**
**அழிவு செய்த போதும்**
**பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று**
**பொறுத்துக் கொள்ளும் அம்மா**

**பள்ளிக் கூடம் விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்**
**தோளில் போடும் அம்மா**



**பாப்பா மலர்ப் பாட்டை நானும்**
**பாடி ஆடும் போது**
**வாப்பா இங்கே வாடா என்று**
**வாரித் தூக்கும் அம்மா!**

குழந்தை ஒன்று தன் தாயின் அன்பை வியந்து, மெய்யுருகிப் பாடுவதாகக் கவிதை அமைகின்றது. குழந்தை உலகத்துள் நுழைந்து தன்னைக் குழந்தையாகவே கற்பனை செய்து கொண்டு பாடியுள்ளமை கவிஞரின் குழந்தை உளவியல் பற்றிய பூரண அறிவை வெளிப்படுத்துகின்றது.

பால் நினைந்தூட்டும் தாயின் செயல்கள் அனைத்துமே அன்பு மயமானவை. அவற்றுட் குழந்தையை முதலில் கவர்ந்த செயல்களாகக் காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சுவதும், பாலைக் காய்ச்சிச் சீனி போட்டு தருவதும் உள்ளன. இதனை கவிஞர்

**காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப் பருகத் தந்த அம்மா**

என அழகுறச் சித்திரிக்கின்றார்.

குழந்தைகள் குறும்பு செய்யும் இயல்புடையவை. இதனைக் குழப்படி என்றும் சிலர் சொல்வார்கள். குழந்தைகளின் குறும்பைத் தாமும் ரசிப்பதோடு மற்றவர்களுக்கும் சொல்லி மகிழ்வது பெற்றோர் எல்லோரிடமும் காணப்படும் பொதுவான பண்பாகும். சிறுவயதில் குழப்படி செய்யும் குழந்தைதான் வளர்ந்து நல்ல பிள்ளையாக வரும், அறிவு கூடிய பிள்ளைதான் அதிகம் குறும்பு செய்யும் முதலிய நம்பிக்கைகள் நம்மவரிடம் உள்ளன. கோழி முட்டையைத் தானே அடைகாக்கப் போய் உடைத்த தோமஸ் அல்வா எடிசன் பிற்காலத்தில் புகழ் பெற்ற விஞ்ஞானியாக வரவில்லையா?




குழந்தையின் குழப்படியைப் பெற்றோர் எப்படி நேர்மனப் பாங்குடன் எடுத்துக் கொள்கின்றனர் என்பதை மூன்றாவது பாடல் விளக்குகிறது.

**'அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி**
**அழிவு செய்த போதும்**
**பிள்ளைக் குணத்திற் செய்தான் என்று**
**பொறுத்துக் கொள்ளும் அம்மா'**

பிள்ளை வீடெல்லாம் சல்லடை போட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்களைஅள்ளிக் கொட்டிச்சிந்தி அழிவு செய்கின்றது. ஆனால் தாயோ இவற்றுக்காகப் பிள்ளையைக் கண்டிக்காது, தண்டிக்காது அவன் "பிள்ளைக் குணத்தில் செய்தான்" என்று பெருந்தன்மையோடு, அன்போடு ஏற்றுக் கொள்கின்றாள். இதுதான் தாய்மையின் சிகரமான பண்பு.

குழந்தையைப் பாடசாலைக்கு அனுப்புவது வாழ்க்கையின் இன்னொரு விடயம். பிள்ளையின் பிரிவு தாங்க முடியாதது. ஆனால் பிரிவுத்துயரால் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பியது தன்னுடனேயே வைத்திருந்தால் பிள்ளை வாழ்க்கையில் முன்னேற முடியாது.

எனவே பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பி விட்டுப் பாடசாலை விடும் நேரம் அறிந்து பாதி வழிக்கே வந்து துள்ளிக் குதிக்கும் பிள்ளையை அன்போடு தூக்கித் தோளில் போடும் அன்னையைக் கவிஞர் அருமையாகப் படம் பிடிக்கின்றார்.

**"பள்ளிக்கூடம் விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித் தோளில் போடும்**
**அம்மா"**

கவிதையை முழுமையாக நோக்கும்போது மீண்டும் மீண்டும் வரும் அம்மா என்ற தெய்வீக வார்த்தை, இயல்பாக அமையும். எதுகை, மோனைகள் குழந்தைகளே பாடிப் பார்க்கக் கூடிய எளிமையான சந்தம். குழந்தை உலகில் பயன்படுத்தப்படும் சிறிய சிறிய சொற்கள் என்பவற்றால் இக்கவிதை தமிழ் குழந்தைக் கவிதைப் பரப்பில் தன்னிகரில்லாத இடத்தைப் பெறுகின்றது.

கவிதையின் ஊடாகத் தாய்மையின் பெருமையை, தாயைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டுமொருமுறை மனதில் பதிப்போம். தாயைப் போற்றிய பிள்ளை தாழ்ந்ததாகவோ, தாயைத் தூற்றிய பிள்ளை வாழ்ந்ததாகவோ வரலாறு இல்லை. ■

---

அகமது ஃபைசல்

# நரை



இரவில் உறங்க முடியாமல் அவதியுற்றான். தொடர்ந்து சில நாள்களாக அவனை குளிர் புரட்டிப்போட்டது. ஒன்றுக்கு இரண்டு போர்வை அவன் வீட்டிலும் இல்லை. ஒரு போர்வைதான். அதிலும் பாதியை மனைவி இழுத்துக்கொண்டு தூங்கிடுவாள். அதிகாலையில் குளிர் நீங்க ஒன்பது மணியாவது ஆக வேண்டும். இப்படியான தொடர் குளிரால் அவன் ஊத்தை தேய்த்து குளித்து மூன்று நாள்களுக்கும் மேலாயிற்று. சரி காலையில் என்ன பாடு பட்டும் ஊத்தை தேய்த்து குளித்தே தீருவேன் என்றுசபதம் எடுத்தான்.

கிணற்றிலிருந்து நீரை அள்ளி தலையில் ஊற்றினான். தண்ணீர் உடலில் பட்டதுதான் தாமதம். ஈவு இரக்கமின்றி குளிர் அவனைக் கொன்றது. பல்லைக் கடித்துக் கடித்து "ஈ..ஈ" என்றும் "ஆ... ஆ...ஹ" என்றும் தண்ணீரை உதறி உதறிக் குளித்தான். தலைக்கு ஷம்போ போடுவதற்குத் தயாரானான். "முதல்ல உங்க பொன்னான மேனியின்ர கண்ணான ஊத்தையை தேய்ச்சிக் குளியுங்க .அதுக்குப் பிறகு ஷம்போ போடுங்க. உடம்பை வளத்தா மட்டும் போதுமா? அதை உருத்தாப் பாக்கவேணும் என்றாள்.

அவன் உடனே மார்பிலும், முகத்திலும், கையை வைத்து அழுத்தி அழுத்தித் தேய்த்தான். தண்ணீரை கிணற்றிலிருந்து அள்ளி வாளியைத் தலை மேல் உயர்த்து உடல் நனைய ஊற்றினான்.

சரி இப்பவாச்சும் தலைக்கு சம்போ போடலாம் என்று அவசரமாக சம்போவைத் தலையில் ஊற்றி நன்றாக நுரை கிளம்பத் தேய்த்தான். தலையில் இருந்த கறுப்பு மயிர்களெல்லாம் மாயமாக மறைந்து வெள்ளை நுரை பொங்கிக் கிடந்தது. கமுக மரத்தில் தொங்கிக் கிடந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, தனக்கு வயதாகி தல மயிரெல்லாம் நரை விழுந்தால் இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை செய்து ரசித்தான்.

பதினெட்டு நிமிடங்களுக்கும் மேலாகிவிட்டது அவன் குளித்து முடிக்க. நன்றாகத் தலையை உலர்த்தி, உலர்த்திய துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு அந்தக் கண்ணாடி முன் வந்து நின்று முகத்தைப் பார்த்தான். தலை மயிர் முழுவதும் ஒன்றுகூடவிடாமல் வெள்ளையாக நரைத்திருப்பதைப் பார்த்து அலறினான். கூச்சலிட்டான். அவன் மனைவி ஓடி வந்து கேட்டாள்,

"யார் நீங்கள்?" ■

# வாங்கோ...வாங்கோ வந்து கொரோனா தாங்கோ!

குணா

கடந்த ஓராண்டாக அகராதியில் புதிதாகச் சேர்ந்த சொல் கொரோனா. அதன் ஆட்டிப் படைப்பு இன்னமும் முடிவுக்கு வரவில்லை. முடிவடைவது போன்றும் தெரியவில்லை. செவ்வாய்க் கிரகத்தில் வசிப்பதற்கு வழிதேடும் விஞ்ஞானத்தால் கொரோனாவுக்கு இறுதிக் கிரியைகள் செய்ய முடியவில்லை. குளோனிங்கில் மனிதனை உருவாக்கும் அளவுக்கு வளர்ந்த விஞ்ஞானத்தால், ஓர் வைரஸை அழிக்க மருந்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனச் சொல்லப்பட்டாலும் அதன் மீதான நம்பிக்கை என்பது உலகம் முழுவதும் இன்னமும் ஏற்படவில்லை. அது பக்க விளைவுகளை ஏற்படுத்துமா என்ற கேள்வியுடனேயே தடுப்பூசிகள் மீதான பார்வை அமைந்திருக்கின்றது.

உலகில் காலத்துக்கு காலம் வைரஸ் தொற்றுக்கள் ஏற்பட்டதை செய்திகளில் நான் படித்திருக்கின்றோம். "சாள்ஸ் வைரஸாம் "என்று நண்பர்களுடன் கதையளந்திருக்கிறேன். அது உலகின் எங்கோ ஓர் மூலையில் என்பதால் வேடிக்கை பேசுபொருளாக எங்களுக்கு இருந்தது. அந்த வைரஸால் ஆயிரக்கணக்கில் சாகிறார்கள் என்பதெல்லாம் எனக்குச் செய்தி மாத்திரமே. அதைத் தாண்டி உணரும் நிலை அப்போது எனக்கிருந்ததில்லை.

கொரோனா வைரஸூம் அதைப் போலத்தான். சீனாவின் வூகானில் வந்தபோது, அது வெறும் செய்தி. உலகம் சுருங்கி விட்டது. கைக்குள் அடக்கிவிட்டோம் என்றால், எங்கோ ஓர் மூலையில் நடந்தால் அடுத்த நொடியில் அது எங்கள் மடியில் நடக்கும் தானே? அதனால்தான் கொரோனா சீனாவிலிருந்து புறப்பட்டு 3 மாதங்களுக்குள்ளேயே இலங்கைக்கு வந்து விட்டது.

இலங்கை சீனாவின் கொலனியாக மாறிக் கொண்டிருப்பதால், கொரோனா வைரஸை வில்லங்கத்துக்கு விலை கொடுத்து வலிந்து வாங்கினோம்.

நாங்கள் போர்க்காலத்தைத் தாண்டி வந்தவர்கள். இப்போதுள்ள '2கே கிட்ஸ்ஸூகளுக்கு' அதனைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களுக்கு இலங்கையில் போர் நடந்தது என்பது தெரியும். அவ்வளவுதான். போரின் போதான கஷ்டங்கள் எள்ளளவுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. போரின் போது இடப்பெயர்வுகள் சகஜம். எப்போதும் 'கிட்டவரட்டும், திட்டமிருக்கு ' என்றுதான் காத்திருப்போம். அதுபோன்று கொரோனா எங்கள் அருகில் வரும் வரை நாங்கள் அலட்சியவாதிகளாகவே இருந்தோம்.

கொரோனா உலகில் வேகமாகப் பரவுகிறதாம் என்று எங்கள் மக்களும் கதைக்கும் அளவுக்கு இருந்தது. அது எங்களுக்கும் வரும் என்பதை உணரவில்லை. கடந்த காலங்களில் இவ்வாறு உலகில் பரவிய பல வைரஸ்கள் எங்களை அண்டவில்லை. போரால் நாம் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த அனுதாபத்தாலோ என்னவோ அவை எங்களை விட்டு விட்டன போலும். அந்தத் தெம்போ, அல்லது போரையே கடந்து வந்து விட்டோம், இந்த வைரஸ் என்ன பெரிய வைரஸ் என்ற இறுமாப்போ தெரியவில்லை, எங்களுக்கு இந்த வைரஸ் வராது என்ற ஒரு நம்பிக்கை கடந்த மார்ச் மாதத்துக்கு முன்னர் வரையில் இருந்தது.

ஆனால் தாவடியில் முதலாவது தொற்றாளர் கண்டறியப்பட்டபோது எல்லாம் தலைகீழாக மாறிப் போனது. நாங்களும் புதிய உலக ஒழுங்குக்குள் உள்வாங்கப்பட்டு விட்டோம். எங்களுக்கும் வைரஸ் தொற்று வரும் என்ற உணர்வு உருவானது.

வடக்கு முழுவதும் முடக்கப்பட்டது. கிறிஸ்தவ தேவாலய வழிபாட்டில் கலந்து கொண்டவர்கள் இருந்த கிராமங்கள் முடக்கப்பட்டன. பலர் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காலப்போக்கில் கிரிக்கெட் ஸ்கோர் போல் கொரோனா எண்ணிக்கையும் கூடியது. இலங்கையின் குக்கிராமங்கள் வரையில் கொரோனாவின் பார்வைபட்டது. கொரோனா தொற்றாத இடமே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. ஆரம்பத்தில் உயிரிழப்பு என்பது அரு மருந்தாக இருந்தது.

ஆனால் கொரோனா இரண்டாம் அலையின் பின்னர் இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்தது. கொரோனா கொத்தணிகளும் குட்டி போட்டுப் போட்டு பல்கிப் பெருகின. நோய் நிலைமை மோசமாகியது.

ஆனால் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை விட வேகமாகத் தளர்த்தப்பட்டன.

தனிமைப்படுத்தப்படவேண்டியவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்படவில்லை. வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்தப்பட்டனர். கொரோனா நோயாளிகளுடன் தொடர்பைப் பேணியவர்கள் முழுமையாக அடையாளம் காணப்படுவதில்லை .அக்கறை காட்டப்படவில்லை. தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் முடக்கப்படவில்லை. நாடு முழுவதும் இயல்பு நிலை தொடர்ந்து பேணப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, விமான நிலையங்கள் திறக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டவர்களையும் 'வாங்கோ வாங்கோ வந்து வைரஸை தந்திட்டுப் போங்கோ' என்று வருந்தி அழைத்திருக்கின்றோம். தனிமைப்படுத்தல் என்பதே அரிதாகிவிட்டது.




இவ்வாறு செல்லும் நிலைமை, எதிர்காலத்தில் எப்படி அமையப் போகின்றது என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கும் மருத்துவர் ஒருவர் பகிர்ந்துகொண்டார்.

'கொரோனா உறுதிப்படுத்தப்பட்டால் வீட்டில் தனிமைப்படுத்தல். தொற்று உறுதிப்படுத்தப்பட்டவருக்கு வேறு நோய்கள் இருந்து தீவிர சிகிச்சை தேவைப்படுபவர் மாத்திரமே மருத்துவமனையில் சேர்க்கப்படுவார். எதிர்காலத்தில் தொற்றாளருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்படமாட்டார்கள். அரசிடம் பணம் இல்லை. கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்களில் அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு வடக்கு மாகாணத்தில் மாத்திரம் 15 மில்லியன் ரூபா வரையில் செலவாகின்றது. அதைவிட அம்புலன்ஸூக்கான எரிபொருள் செலவு நாள் ஒன்றுக்கு 95 லட்சம் ரூபாவை அண்மிக்கின்றது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகளின் மேலதிகக் கொடுப்பனவு மில்லியன்களில் எகிறுகின்றது. அரசு கட்டுப்பாடுகளை தளர்த்தி கைவிட முடிவுசெய்ததற்கு இதுவும் காரணமாயிருக்கலாம்' என்று அவர் குறிப்பிட்டார்.

**உலக சுகாதார நிறுவனமே நாம் கொரோனாவுடன் வாழப்பழக வேண்டும் என்று சொல்லுகின்றது. ஆனால் எனக்கு என்னவோ, கொரோனா எங்களுடன் வாழப் பழகி விட்டதைப்போல்தான் இருக்கின்றது. கொரோனா வைரஸ் உருமாறுகின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தடுப்பூசி கண்டுபிடிக்கப் பட்டாலும் வேறு வேறு வடிவங்களில் மனிதர்களுடன் தொடர்ந்து வாழவே அது பிரியப்படு கின்றதுபோல்.**

உலக சுகாதார நிறுவனமே நாம் கொரோனாவுடன் வாழப்பழக வேண்டும் என்று சொல்லுகின்றது. ஆனால் எனக்கு என்னவோ, கொரோனா எங்களுடன் வாழப் பழகி விட்டதைப்போல்தான் இருக்கின்றது. கொரோனா வைரஸ் உருமாறுகின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இலங்கையிலும் அவ்வாறு உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது. கொரோனாவுக்கு மனிதர்களைப் பிடித்துவிட்டதுபோலும். அதுதான் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டாலும் வேறு வேறு வடிவங்களில் மனிதர்களுடன் தொடர்ந்து வாழவே அது பிரியப்படுகின்றதுபோலும். கொரோனாவுடன் நாம் வாழவில்லை. எங்களுடன்தான் கொரோனா வாழ்கின்றது. கும்கி படத்தைப் பார்த்திருப்பீர்கள்.



அதில் ஒரு காட்சியில், தம்பி ராமையா, ஜோசியக்காரன் ஒருவனிடம் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்பார். அவன் தம்பி ராமையாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு '52ஆவது வயசு வரைக்கும் அவமானப்பட்டு, அசிங்கப்பட்டு, துன்பப்பட்டு, துயரப்பட்டு, கஷ்டப்பட்டு, ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து படாதபாடு படுவீங்க' என்று சொல்ல, தம்பி ராமையாவும் "அதுக்குப் பிறகு..?" என்று ஆவலோடு கேட்பார். அதற்கு ஜோசியக்காரனோ 'அதுவே பழகிடும்' என்று சொல்வான். அதுபோலத்தான் 'கொரோனாவும் நாங்களும். கொரோனா எங்களுக்கு இனிப் பழக்கப்பட்ட ஒன்றாகிவிடும்.

---

## வன்னி:

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது வரலாற்று ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அதேசமயம் காட்சி இடமாகவும், கல்விக் கூடமாகவும் செயற்படும். இவற்றை சூழல் சுற்றுலாவுக்கான வேறுபட்ட அலகுகளாக முன்மொழியும் அதேவேளை, மேலும் சில புத்தாக்க நடைமுறைகளையும் கண்டடையலாம். 'திருப்பள்ளி எழுச்சி' முதலான பண்பாட்டுப் பெயர்களுடன் அதிகாலை நேரச் 'சூழல் சுற்றுலா நடை' (Eco tourist walk) அறிமுகப்படுத்தப்படலாம். அதனை தேக ஆரோக்கியத்துக்கும் , ஆனந்த மனத்துக்குமான ஒன்றாக முன்மொழிய முடியும். மதம் கடந்த வனத் தியான கூடங்கள், நீர் மலர்த் தடாகங்கள் எல்லாம் இதன் பகுதியாகலாம்

அதனைப் போலவே இத்தகை இயற்கைச் சூழல் சார்ந்த வன்னியின் ஆற்றுகைக் கலைகளது (கோவலன் கூத்து பறைமேளக் கூத்து மகிடிக் கூத்து தொடக்கம் பன்றிப் பள்ளு கண்ணகி வழக்குரை உள்ளிட்ட அனைத்தும்) மடுவங்களை அமைக்கலாம். அவை மேலும் சுற்றுலாவின் தரத்தையும் முழுமையையும் அதிகரிக்கும்.

இவற்றின் பகுதியாக பாரம்பரிய உணவுகள் பானங்களது மையங்கள் ஆகியவற்றை உருவாகலாம். சுருக்கமாச் சொன்னால், மேற்படி இயற்கை மரபுரிமை - அதன் விரிவாக்கமாகப் பண்பாட்டு மரபுரிமை என்பவற்றைக் காத்தல் மற்றும் குறிப்பாக பொருளாதார மேம்பாட்டிற்காக அவற்றை முன்மொழிதல் அதற்காக வன்னியை ஒரு சூழல் சுற்றுலாத் தலமாக உருவாக்குதல் (அதேசமயம் உல்லாசப் பயணத்தின் வேண்டத்தகாத விளைவுகளில் இருந்து அதனைப் பாதுகாக்கும் பொறிமுறை உட்பட)என்பதை முன்னிறுத்தும்போது கவனிக்கக் கூடிய இன்னொரு விடயம் அதன் பகுதியாக 2000ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அமெரிக்காவை மையப்படுத்தி உருவாகிய 'ஓய்வுத் தங்கிடம்'(staycation) எனும் கோட்பாட்டு நிலையிலும் எமக்குரிய முறையில் அதனை விருத்தி செய்யலாம்.

குறிப்பாக அதனைப் பாரம்பரியமான உல்லாசப் பணிகள் தங்கிடங்கள் போலன்றி அதன் நாட்டுப்புறத்துப் பண்புகளோடு கூடிய மாற்றுப் பண்புகள் நிறைந்த ஒன்றாக நிலை நிறுத்தல் வேண்டும்.

# நலம் அறிய...


மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



**எனது அப்பாவுக்கு அடிக்கடி இரவில் சிறுநீர் கழிப்பதில் சிக்கல் உள்ளது. கட்டுப்பாடின்றி கழிக்கின்றார். வயது-60. வைத்தியர் பரிசோதித்து புரொஸ்டேட் சுரப்பியின் வீக்கத்தால் இக்குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். அப்பா புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறி என்று கேள்விப்பட்டு மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார். இந்த நோயைக் குணப் படுத்த இயலாதா?**


**சி.மனோகரன், சிலாபம்.**

மருத்துவ சம்பந்தமான விடயங்களில் மருத்துவரின் அறிவுரையை, முடிவை மட்டுமே நாடுங்கள். மற்றவர்கள் கூறுவதையிட்டு தேவையில்லாமல் குழம்பாதீர்கள்.
உங்கள் மருத்துவர், சரியாக, தெளிவாக BPH- புரொஸ்டோ சுரப்பியின் வீக்கம் என்று கூறியுள்ளார். இதற்கும் புற்றுநோய்க்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.!!!!




### Benign Prostatic Hyperplasia
### புரொஸ்டேட் சுரப்பியின் வீக்கம்

- இது ஆண்களில் மட்டுமுள்ள உறுப்பு
- அளவில் பெரிதாகும்போது சிக்கல்கள் ஏற்படும்.
- சிறுநீர் கழிப்பதில் சிரமமுண்டாகும்
- பெரும்பாலும் 50 வயதை அடைந்த பிறகே ஏற்படும்.
- 60 வயதைத் தாண்டிய 50 வீதமான ஆண்களுக்கு இது ஏற்படுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன.
- மிகச் சிறிய பருப்பின் அளவில் காணப்படும் இவ்



வுறுப்பு யூரேத்திராவின் ஆரம்பப் பகுதியை சுற்றிக் காணப்படும். (சிறுநீர்ப்பைக்கு கீழாகவும் குதத்துக்கு சற்று மேலாகவும் அமையப் பெற்றுள்ளது)

### Benign prostatic Hyperplasia

புரொஸ்டேட் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினை அபாயமற்றது. இதனால் அங்கத்துக்கு புற்று நோய் இல்லை என்று பொருள்படும். வயதுடன் புரொஸ்டேட்டின் பருமன் அதிகரிப்பதால், யூரேத்திராவை அழுத்துவதால் பல்வேறு சிறுநீர்கழித்தலுடன் சம்பந்தமான பிரச்சினைகள் உருவாக்குகின்றது.

## அறிகுறிகள்

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல்ஆரம்பநிலை
2. இரவில் கட்டுப்பாடின்றி சிறுநீர் கழித்தல் ஆரம்பநிலை
3. சிறுநீர் கழிக்கும்போது தாங்கவியலாத வலி
4. சிறுநீர்ப்பை நிரம்பியது போன்று அடிக்கடி உணர்தல்
5. விட்டுவிட்டு வெளியேறும் சிறுநீர் கசிதல்

ஆரம்பகாலத்தில் உரிய கவனமெடுக்காதுவிடின் சிறுநீர் தேக்கமடைந்து ஒரு நாள் சிறுநீர் வெளியேற்ற இயலாமல் (Urine retention) வைத்தியசாலை கதீட்டர் (Cathetorization) செலுத்தப்பட்டு சிறுநீரை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும். இதன் இறுதிக் கட்டம் சிறுநீரக செயலிழப்பு வரை கூடச் செல்லலாம் என்பது குறிப்பிடத்தக்கது.
சிறுநீர் தேக்கத்தினால் தொற்றுக்கான சாத்தியக் கூறுகளும் (சிறுநீர்ப்பையில் )கற்கள் உண்டாகுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்துகிறது.

**ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். BPH என்பது புரொஸ்டேட்டில் உண்டாகும் புற்றுநோய்க்கான சாத்தியக்கூறை அதிகப்படுத்துவதில்லை.**

## மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள்

**1. DRE - (digital rectal examination)**
**மருத்துவர் மலவாசலூடாக விரலை செலுத்தி (புரொஸ்டேட்டினை) பரிசோதிப்பர்**

**2. PSA - (Prostate specific antigen)**
**இரத்தத்தில் மாதிரி பெறப்பட்டு செய்யப்படும் சோதனை (புற்றுநோய்க்கான வாய்ப்புள்ளதா என்றறிய மேற்கொள்ளப்படுகிறது)**

**3.இவை தவிர நோயாளியைப் பொறுத்து Prostate Biopsy Intravenous pyelogram Uroflowmetry & Urodynamic Studies cystoscopy CT urogram என்பன மேற்கொள்ளப்படலாம்.**

இந்நோய்க்கான சிகிச்சை நோயாளியின் வயது, எம்மை அணுகும் போது உள்ள அறிகுறிகள்/ சிக்கல்களைப் பொறுத்து வேறுபடும்.

**1. கவனத்தோடு காத்திருந்து வாழ்க்கைமுறையை மாற்றியமைத்தல் (Life style modifications)**


சிறுநீர்கழித்தலில் ஒழுங்கும் கட்டுப்பாடுகளும்

பருகும் திரவ அளவில் கணிப்பீடு. அடிவயிற்றுப் பகுதிக்குரிய உடற்பயிற்சிகள்

மலச்சிக்கல், மன அழுத்தத்தை தவிர்க்கும் நடைமுறைகள்

**2. மருத்துவ சிகிச்சை**

- alpha Blockers - eg: tamsulosin
- 5 alpha inhibitors - eg : finasteride




புரொஸ்டேட் சுரப்பியை சுற்றியுள்ள தசைநாரை முதலாவது வகை மருந்து தளர்த்துகிறது.
சிறுநீரை தடையின்றிச் செல்ல வழிவகுக்கிறது.
இரண்டாவது மருந்து - புரொஸ்டேட் சுரப்பியின் பருமனைக் குறைக்கிறது. இந்த மருந்து வெளியேறும் சிறுநீரின் அளவையும் அதிகரிக்கிறது

**3. அறுவைச் சிகிச்சை**

- மருத்தவ சிகிச்சை பயனளிக்காமை
- மிக மோசமான அளவு சிறுநீர் தேக்கம்
- மீண்டும் மீண்டும் சிறுநீர்ப் பாதையில் தொற்று ஏற்படுதல்

- சிறுநீருடன் இரத்தக் கசிவு
- சிறுநீக செயலிழப்பு
- சிறுநீரகக்கற்கள் + BPH

மேற்கூறிய ஏதுமொரு சந்தர்ப்பங்களில்...
பெரும்பாலும் TURP (Transurethral resection of prostate) மேற்கொள்ளப்படும். மிகவும் மோசமான நிலமையில் Prostatectomy மேற்கொள்ளப்படும்.

புரொஸ்டேட்டில் புற்றுநோய் ஏற்படினும் ஓரளவுக்கு இவ்வாறான அறிகுறிகளே தென்படும். மருத்துவரை ஆரம்பக் கட்டத்திலேயே அணுகுங்கள். DRE, PSA, Prostate Biopsy பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உங்களுக்கு BPH அல்லது புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என்று துல்லியமாக அறியத் தருவார். குழப்பமடையத் தேவையில்லை.





**ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு, வேறு பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண்கள் குறித்து...?**

விதுசா, சுன்னாகம்

சிலர் தாம் வளர்த்த கடா, சேவல் என்பவற்றைத் தாமே சாப்பிடமாட்டார்கள். வேறுயாருக்காவது விற்று விடுவார்கள். அந்த மரபின் தொடர்ச்சியோ?

**வித்தூ... எதிர் எதிராக விளையாடும் இருவரில் எவரும் வெல்லாமல், எவரும் தோற்காமல் முடிவடையக் கூடிய விளையாட்டு எது?**

கதிர், கட்டுடை

சீச்சீ. சொல்ல வெட்கமாக இருக்குது. அது அந்த 'மாட்டர்'



**மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றால் கணவன் அமைவதெல்லாம்...?**

மீனாட்சி, இணுவில்

இறைவனாலும் கொடுக்க முடியாத வரம்.

# நீதிக்காக ஏங்கும் ஆதிசிவன்..!

பா.குமுதன்

தமிழர்களின் தாயகப்பகுதிகளில் உள்ள தொன்மைகளையும், மரபுரிமைகளையும் சிதைத்து உருமாற்றும் செயற்பாட்டில் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. அரசின் நிர்வாகக் கட்டமைப்புகளான தொல்பொருள் திணைக்களம், பொலிஸ் என்பவற்றின் துணையோடு, சட்டத்தின் பேரால் இந்த நிலப்பறிப்பு நிகழ்ந்தேறி வருகின்றது. இத்தகைய ஆக்கிரமிப் பின் ஓர் அங்கமே வெடுக்குநாறிமலை மீதான ஆக்கிரமிப்புகளும், அரசின் மேலாதிக்கமும்.

## ஆக்கிரமிக்கப்பட்ட ஆதிலிங்கேஸ்வரர்

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத்தலமாக அமையப்பெற்றிருந்தமைக்கு பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன. அதனை சிரேஷ்ட பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய **tamil brahl isncirptions from vedukkunari malia** என்ற கட்டுரை மேலும் தெளிவூட்டுகின்றது.

குறித்த மலையைச் சுற்றி வெடுக்குநாறி என்று அழைக்கப்படும் ஒருவகை 'வெடுக்கு' மணத்தை ஏற்படுத்தக் கூடிய மரங்கள் பரந்தளவில் இருக்கின்றமையாலேயே மலையின் பெயரும் வெடுக்குநாறி என்று அழைக்கப்பட்டது. மலையில் செதுக்கப்பட்டுள்ள 'பிராமிய' எழுத்துக்கள் சிறிய குகை மற்றும் சில நில உருவங்கள் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயத்தின் தொன்மையை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இந்த நிலையில் கிட்டிய 40 வருடங்களுக்கு மேலாக ஆலயப்பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் அதனை வழிபட்டு வந்துள்ளனர். போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் அழிவடைந்திருந்த ஆலய வளாகத்தைச் சீர்படுத்தி தமது வழிபாட்டுச் சுதந்திரத்தை அனுபவித்து வந்திருந்தனர். எஞ்சியிருக்கும் மூத்த குடிமக்கள் அதற்கு சான்று பகிர்கின்றனர்.





## தடையில்லாத வழிபாடு

போர் முடிவுற்று மீள்குடியேற்றத்தின் பின்னர் குறிப்பாக 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம்ஆண்டு வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் எந்தவிதமான தடைகளும் இன்றி வெடுக்குநாறிமலையில் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொண்டுவந்தனர். அரசின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் இருந்த வெடுக்குநாறிமலையில் 7 வருடங்களாக சுதந்திரமாகவே வழிபாடுகளை பொதுமக்கள் மேற்கொண்டு வந்திருந்தனர். அப்போதெல்லாம் தொல்பொருட் திணைக்களமோ அல்லது நெடுங்கேணிப் பொலிஸாரோ பொதுமக்களின் வழிபாட்டுக்கு எந்தவிதமான தடைகளையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. இப்படி ஒரு மலை இருப்பதைக்கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை.. இந்த சூழலில் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொல்பொருள் திணைக்க ளத்தின் கழுகுபார்வை வெடுக்குநாறி மலையின் மீது விழத்தொடங்கியது.

## ஆக்கிரமிப்பு ஆரம்பம்

“2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தால் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது. தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான நிலத்தில் உரியஅனுமதி இன்றி குறித்த பகுதியை சிலர் அடாத்தாக ஆக்கிரமித்து வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்” என்பதே அந்த முறைப்பாடு.

ஆலயத்தின் அறங்காவலர் சபையையும் பரம்பரை பூசாரியையும் மறுநாள் 10 ஆம் திகதி நெடுங்கேணி பொலிஸார் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணையில் ஆலயத்தைச் சார்ந்தோருக்கு கட்டுப்பாடுகளும், எச்சரிக்கைகளும் அதிகமாகவே விதிக்கப்பட்டன. அனுமதி இல்லாமல் குறித்த பகுதிக்குள் நுழைபவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் ,ஆலயச்சூழலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும், புதிய கட்டடங்களை அமைப்பதற்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டு, இதனை மீறுவோர் மீது சட்டம் பாயும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்தனை காலமும் சுதந்திரமாக வழிபட்டு வந்த தமது ஆலயச் சூழல் முழுமையாக தம்மிடம் இருந்து பறிபோகின்றது என்பதை ஆலய நிர்வாகத்தினர் அன்று அறிந்திருக்கவில்லை. ஆதிசிவனின் மேல் பாரத்தைச் சுமத்திவிட்டு, கிடைத்த உத்தரவைப் பெற்றுவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து அவர்கள் வெளியேறிச் சென்றனர்.


அன்றிலிருந்து ஆலயச்சூழலுக்குள் செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் போராடியே பழக்கப்பட்ட தமிழ்மக்கள், தமது வழிபாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தக்கோரி பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். அதன் பலனாக வழிபடுவதற்கான அனுமதி மாத்திரம் பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஆலயச் சூழலில் கட்டுமானங்களையோ பராமரிப்புப் பணிகளையோ மேற்கொள்வதற்கான தடை நீடித்தது. அன்றிலிருந்து வெடுக்குநாறி மலையில் நெடுங்கேணிப் பொலிஸாரும் நிரந்தரமாகக் குடியேறினர்.

## ஒருங்கிணைப்பு குழு அனுமதி

கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில். வெடுக்குநாறிமலையில் படிக்கட்டுகள் பொருத்தப்படாமல் இருக்கும் விடயம் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தை முன்னிறுத்தி ,மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, ஆலயத்துக்கு படிக்கட்டுகள் அமைக்கப்படுவதற்கான அனுமதியை உத்தியோகபூர்வமாக வழங்கியது. இந்தவிடயத்தை உடனடியாக மத்திய கலாசார அமைச்சுக்குத் தெரியப்படுத்துமாறும் அன்றைய அரச அதிபருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்புக் குழுவின் உத்தரவு கிடைத்ததால் படிக்கட்டுகளைப் பொருத்தலாம் என்ற நம்பிக்கை அனைவருக்கும் துளிர்த்தது.

ஆனால் நடந்ததோ வேறு.. ஒருங்கிணைப்புக்குழுவின் உத்தரவைத் தூக்கி எறிந்த நெடுங்கேணிப் பொலிஸார், படிக்கட்டு அமைப்பதற்கு தடை மேல் தடை போட்டனர்.

இந்த நிலையில்தான் நீண்ட இடைவெளியின் பின்னர் ஆலயத்தின் வருடாந்தப்பொங்கல் விழா, 2019 செப்ரெம்பர் மாதம் 10 நாள்கள், பல்வேறு கட்டுப்பாடுகளுடன் நடந்தேறியது. வடக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் ஆதிசிவனுக்குப் பொங்கலிட்டு, படையல் செய்து வழிபட திரண்டு வந்தனர். திருவிழா வின் ஒரு நாளில் அந்த மலையில் படிக்கட்டு பொருத்தப்பட்டது. இதுபொலிஸாருக்கு புகைச்சலைக் கிளப்ப, “ “படிக்கட்டை அகற்றுங்கள். அத்தோடு ஆலய நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்துக்கு நாளை வரவேண்டும்” எனச்சொல்லிவிட்டுச்சென்றனர். படிக்கட்டு அமைக்க ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அனுமதி உண்டு என ஆலய நிர்வாகத்தினர்பொலிஸாரிடம் ஆதாரங்களைக் காட்டியபோதும், அவற்றை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை.


பழைய ஏணி...


பொருத்தப்பட்ட புதிய ஏணி...

## படிக்கட்டினால் வந்த வில்லங்கம்

மலையின் உச்சிப்பகுதிக்கு செல்வதற்கு படிக்கட்டுகள் இருக்கவில்லை. இதனால் மரங்களின் உதவியுடன் கயிற்றைப் பயன்படுத்தியே வழிபாட்டுக்கு மக்கள் செல்லவேண்டியிருந்தது. எனவேதான் மலைப்பகுதியில் ஒரு படிக்கட்டை அமைப்பதற்கு ஆலய நிர்வாகிகள் தீர்மானம் எடுத்திருந்தனர். அதற்கான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்த நிலையில் பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நான்கு இலட்சம் ரூபாவை படிக்கட்டுகள் அமைப்பதற்காக ஒதுக்கியிருந்தது. அதனையும் சேர்த்து 8 இலட்சம் ரூபா செலவில் கடந்த 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இரும்பினாலான படிக்கட்டு உருவாக்கப்பட்டது. ஆனால் அதனைப்ம் பொருத்த பொலிஸார் அனுமதிக்கவில்லை. அதனை அமைத்த வியாபாரி முதல் ஆலய நிர்வாகத்தினர் வரை ஒருவரையும் தவறவிடாமல் "படிக்கட்டுகளை மலையில் பொருத்தினால், அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பலவருடங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள் " என்று பொலிஸார் மிரட்டினர். இதனால் நிர்வாகத்தரப்பினர் அச்சமடைந்தனர். படிக்கட்டைப் பொருத்தும் நடவடிக்கையைக் கைவிட்டனர். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட படிக்கட்டுகள் பொருத்தப்படாமல் 7 மாதங்களுக்கும் மேலாக கிடப்பிலேயே கிடந்தது.

(மறுபக்கம் பார்க்க)



## முதலாவது வழக்கு

அத்துமீறி ஏணிப்படி அமைத்த விடயத்தை முன்னிறுத்தி ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக தொல்பொருள் திணைக்களத்தால் வவுனியா நீதிமன்றில் முதலாவது வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் வெடுக்குநாறிமலை விடயம் நீதிமன்றுக்கு சென்றது. குறித்த வழக்கு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளபட்டது. இதன்போது ஆலயத்தின் சார்பில் து.தமிழ்செல்வன், சசிகுமார், மதிமுகராசா ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர். படிகள் அமைக்கப்பட்ட விடயத்தில் நிர்வாகத்தினரை கைதுசெய்யுமாறு பொலிஸாரால் விண்ணப்பம் கோரப்பட்டது, அவர்களது விண்ணப்பத்தை நிராகரித்த நீதவான் வெடுக்குநாறிமலை ஆலயம் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமானதென வர்த்தமானி அறிவித்தல் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டு 50 ஆயிரம் ரூபாபெறுமதியான சொந்தப்பிணையில் பிரதிவாதிகளான ஆலய நிர்வாகத்தினரை விடுவித்திருந்தார். வழக்கு 2020 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு ஒத்திவைக்கபட்டது.

குறித்த தினத்தில் நிர்வாகத்தினர் மீண்டும் மன்றில் முன்னிலையாகினர். ஆனால் அவர்களது வழக்கு அழைக்கப்படாமல் புதிய பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அழைக்கப்பட்டது.

தொல்பொருள்கள் சார்ந்த சட்டஏற்பாடுகளின் பிரகாரம் அவற்றுக்கு சிதைவை ஏற்படுத்தியமையை என்ற விடயத்தை கோடிட்டு குற்றவியல் சட்டக்கோவையின் 106 ஆவது பிரிவின் கீழே பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அல்லது சமாதானக்குலைவை ஏற்படுத்தியமை போன்ற விடயத்தை முன்னிறுத்தி அந்தப் புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்தவழக்கிலும் எதிராளிகள் மூவரும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், வழக்கு 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றும் ஆலய நிர்வாகத்தினர் மன்றுக்கு சமுகமளித்திருந்தனர். அப்போது பொலிஸார் ,"தொல்பொருள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு முடிவடையும் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க வேண்டும்" என்று நீதவானிடம் கோரினர். எனினும் ஆலயநிர்வாகத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் வாதத்தையடுத்து மீண்டும் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. வழக்கு நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. நவம்பர் மாதமளவில் கொவிட்19 தாக்கம் அதிகரித்திருந்தமையால் பல்வேறு வழக்குகள் மன்றில் அழைக்கப்படாமல் தவணையிடப்பட்டிருந்தன. அந்தவகையில் வெடுக்குநாறிமலை வழக்கும் 2021 ஆம் ஆண்டு தைமாதத்துக்கு ஒத்திவைக்கபட்டது. எனினும் அந்தவழக்கை மன்றில் அழைக்குமாறு தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிசார் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் ஒன்று மன்றில் அணைக்கப்பட்டது. எனினும் இது குறித்து பிரதிவாதிகளுக்கு தகவல் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் வழக்கு அழைக்கப்பட்டது. ஆயினும் ஆலய நிர்வாகத்தினர் முன்னிலையா காமையால் , அவர்களுக்கு எதிராக மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அந்தவகையில் தை மாதம் 22 ஆம் திகதி மன்றில் ஆஜராகிய ஆலய நிர்வாகத்தினரின் பிணை நிபந்தனை ரத்துச் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 5 நாள்கள் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## நிராகரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை

இந்த நிலையில் இந்தமாதம் 27 ஆம் திகதி குறித்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆலய நிர்வாகத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பொலிஸாரால் முன்வைக்கப்படவிருந்த குற்றப்பத்திரிகை தொடர்பாக ஆட்சேபனைகளை முன்வைத்தனர்.

- தொல்பொருள்களை ஆலய நிர்வாகத்தினர் சேதப்படுத்தியிருந்தால் அது யாரால்? எங்கே? எப்போது நிகழ்த்தப்பட்டது ? என்ற விடயங்கள் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்படவில்லை.
- ஆலய நிர்வாகத்தினர் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும் ஊகத்தின் அடிப்படையில் அவர்கள் மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளது.
- ஏணிப்படி அமைக்கும் செயற்பாட்டில் அரசாங்கத் திணைக்களங்களும் அனுமதிகளை வழங்கியிருந்தன.

என்ற விடயங்கள் மன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டன.



யார் எவ்வாறான சேதத்தை விளைவித்தார்கள் என்ற ஆதாதரங்கள் இன்மையால் ஆலய நிர்வாகத்தினர் என்ற காரணத்தால் மாத்திரம் அவர்களுக்கு எதிராக இவ்வாறான குற்றப்பத்திரிகையை சமர்ப்பிக்க முடியாது. எனவே குறித்த விடயத்தினை தொடர்ச்சியாக புலன்விசாரணை செய்யுமாறும், இதனை யார் செய்தது என்று நீதிமன்றுக்குச் சரியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டு அந்தக் குற்றப்பத்திரிகை நீதவானால் நிராகரிக்கப்பட்டது. நிர்வாகத்தினருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பிணையை நடைமுறைப்படுத்துமாறும் உத்தரவு வழங்கப்பட்டது. அவர்களும் சிறைவாசம் முடித்து வெளியில் வந்தனர்.

தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்தவிடயங்கள் சமர்ப்பிக்கப்படாமையை சுட்டிக்காட்டியே அன்று அந்தக் குற்றப்பத்திரிகை நிராகரிக்கப்பட்டது. மாறாக இந்த குற்றப்பத்திரிகை வேறுவடிவத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனவே இந்தப்பிரச்சினை இத்துடன்முடிவடையப்போவதில்லை, தொடரத்தான் போகின்றது. இதேவேளை இந்த விடயத்தில் வழிபாட்டு சுதந்திரத்தை முன்னிறுத்தி அடிப்படைஉரிமைமீறல் மனுஒன்று மிகவிரைவில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### முதற்கட்ட ஆராய்ச்சி

வெடுக்குநாறிமலையில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்போடு, தொல்பொருள்திணைக்களத்தின் 10 பேர் கொண்ட குழுவினரால் 2019 ஆம் ஆண்டு தை மாதம் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருந்தது. மலையில் செதுக்கப்பட்டுள்ள "பிராமி" எழுத்துக்கள் தொடர்பாகவே ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்றிருந்தன. திடீர் என்று முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளால் பொதுமக்கள் மற்றும் ஆலயநிர்வாகத்தினர் மத்தியில் அச்சம் நிலவியிருந்தது. அதன் பின்னர் இன்று வரை அங்கு எந்தவிதமான ஆராய்ச்சிகளும் முன்னெ டுக்கப்படவில்லை. மாறாக அடக்குமுறைகளே விஸ்தரிக்கப்பட்டன.

## வடக்கில் 383 தொல்லியல் பகுதிகள்

வடக்கில் 383 இடங்கள் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவில்176, கிளிநொச்சியில் 18, யாழ்ப்பாணத்தில்79, வவுனியாவில் 50 மற்றும் மன்னாரில் 60 பகுதிகளையும் தொல்பொருட் திணைக்களம் தமது ஆராய்ச்சியின் மூலம் தொல்லியல் பகுதிகளாக அடையாளப்படுத்தியுள்ளது, எனவே எதிர்வரும் காலங்களில் ஏனைய பிரதேசங்களும் தமிழ்மக்களிடம் இருந்து பறிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. வெற்றிடமாகியுள்ள தமிழர்களின் அரசியல் ஸ்திரத்தன்மை அதனை மேலும் இலகுவாக்கும்.

## அரசின் திட்டமிட்ட செயற்பாடு

வெடுக்குநாறி மலைப்பகுதி தமிழர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய ஒன்று. நெடுங்கேணியின் கிழக்கு பகுதியில் மகாவலி' எல் வலயம்' என்ற போர்வையில் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களான கொக்கச்சான் குளம், வெடிவைத்தகல் மயிலங்குளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளான மண்கிண்டிமலை, ஆமையன்குளம், முந்திரிகை குளம், சிலோன்தியேட் டர் போன்றவை எப்படி பரவலான சிங்களக் குடியேற்றங்கள் நிறு வப்பட்டு சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டனவோ, அவ்வாறு வெடுக்குநாறிமலையையும் மாற்ற அரசாங்கம் திட்டமிடுகின்றது போலும்.

திருகோணமலையில் உள்ள கோணேசர் ஆலயம், வெந்நீர் ஊற்று, மன்னாரில் உள்ள கேதீஸ்வரம் போன்ற இந்துக்களின் புராதன ஆலயங்களுக்கு அருகில் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைத்து அதன் தனிச்சிறப்புத்தன்மையை சீர்குலைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுவரும் பேரினவாத அரசு தற்போது நீராவிப்பட்டி, குருந்தூர் மலை, சமளங்குளம் கல்லுமலைமுருகன் ஆலயம் ஒட்டுசுட்டான் சிவன்கோவில் மற்றும் வெடுக்குநாறிமலையையும் கபளீகரம் செய்யும் நீண்டகாலத் திட்டத்தை ஆரம்பித்து, அதற்கு செயல்வடிவமும் கொடுத்துள்ளது.

## வேறு வேறு நீதிகள்




தெற்கில் அபயகிரி, ஜேதவனராம, சிறிமகாபோதி ருவன்வெலிசாய, போன்ற தொல்பொருள் சிறப்புவாய்ந்த இடங்களில் பௌத்தமக்கள் வழிபடுவதற்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பின் 14(1)எ பிரிவின் அடிப்படையில் நாட்டின் பிரஜைகள் தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை சுதந்திரமாக அனுபவிப்பதற்கு இலங்கை அரசியலமைப்பு இடம்கொடுத்துள்ளது. எனவே தெற்கில் ஒரு நீதியையும் வடக்கில் வேறு நீதியையும் அரசாங்கம் கடைப்பிடிக்கின்றமை அரசமைப்பையும் மீறும் ஒரு செயற்பாடே. உலகிலேயே மரபுரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, சிறுபான்மையினரின் நிலங்களை விழுங்கும் ஆட்சியை இலங்கையில் மட்டுமே காண்முடியும்.

வெறுமனே நாடாளுமன்றக் கதிரைகளை மாத்திரம் அலங்கரித்துக்கொண்டிருக்கும் தமிழ்த்தரப்புகள் செயற்பாட்டுஅரசியலுக்குள் கால்பதிக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்துகொள்ள வேண்டும் .அதன்போதே எமது நிலத்தையும் அடையாளத்தையும் எம்மால் பாதுகாக்கமுடியும். புத்தர் அடாத்தாக நுழைவதற்காக வெடுக்குநாறிமலை ஆதிசிவனுக்கல்லவா அநீதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாவம், சிவன்!

சுழியன்

# அறிந்தும் அறியாமலும்



## பச்சை வீட்டு குழப்பங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிப்பார்கள் என எதிர்ப்பார்க்கப்பட்ட நவீன் திஸநாயக்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தாம் கட்சியில் இருந்து வெளியேறப் போவதில்லை என அறிவித்துள்ளனர். அத்துடன் கட்சிக்குள் இருந்துபோராடி, கட்சியை கட்டியெழுப்பப்போகிறோம் எனவும் சூளுரைத்துள்ளனர். அதேபோல தலைமைப்பதவியில் கட்டாயம் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் இடித்துரைத்துள்ளனர். எனவே, தலைமைப்பதவியை ரணில் விக்கிரமசிங்க தகுதியான ஒருவருக்கு விட்டுக்கொடுக்காத பட்சத்தில் இவ்விருவரும் மாற்று நடவடிக்கையில் இறங்கக்கூடும் எனத் தெரியவருகின்றது. சிலவேளை இவர்களின் உறுப்புரிமையை ஐ.தே.க. பறிக்கும் பட்சத்தில் புதியதொரு அணியை உருவாக்குவார்கள் என நம்பப்படுகின்றது.

அதேவேளை அடுத்துவரும் தேர்தல்களை கூட்டணியாக எதிர்கொள்வதற்கே இவர்கள் இருவரும் விரும்புகின்றனர். இதற்காக ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி உறவு வைத்துக்கொள்வதற்கும் இருவரும் பச்சைக்கொடி காட்டியுள்ளனர்.

இதன்காரணமாகவே அடுத்த ஜனாதிபதி, எதிரணியின் பொதுவேட்பாளராக இருக்கவேண்டும் என்ற அறிவிப்பையும் அவர்கள் விடுத்துள்ளனராம்.

## சஜித் அணியின் கன்னிக் கூட்டத்தில் நடந்தது என்ன?


ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பின் பிரகாரம் அந்தக்கட்சியின் முதலாவது மத்திய செயற்குழுக் கூட்டம், கட்சித் தலைமையகத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது 2021 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை, தெரிவுசெய்யப்பட்டது. இதன்படி கட்சியின் தவிசாளராக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியல்ல, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, ரவிந்திரசமரவீர,இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் சிரேஷ்ட உப தவிசாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தலதா அத்துகோரள, பி. ஹரிசன், கயந்த கருணாதிலக்க, திலிப்வெதஆராச்சி, அலீம், சுஜீவ சேனசிங்க, சந்ராணி பண்டார, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் உப தவிசாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பொருளாளராக ஹர்ஷ டி சில்வாவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாக அஜித் பி பெரேராவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திதுறைசார் செயலாளராக எராக் விக்கிரமரத்னவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்திக பத்திரண பிரதி தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் ஊடகப் பேச்சாளர் பதவி மரிக்கார் மற்றும் மனுச நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நளின் பண்டார, உமாசந்திர பிரகாஷ் ஆகியோர் உப செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தலைவராக சஜித் பிரேமதாசவும், செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவும், தேசிய அமைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்கவும் தொடர்ந்து செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் கட்சியின் சம்மேளனம் கூட்டப்பட்டு மேற்படி நியமனங்களுக்கான இறுதி அங்கீகாரம் பெறப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பு ஜனநாயக வியூகத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் தலைவர் பதவியில் மாற்றம் செய்வதற்கான ஏற்பாடும் உள்ளது. தலைவர் தன்னிச்சையாக அல்லாமல் செயற்குழு ஊடாகவே முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது செயற்குழுக் கூட்டத்தில் சம்பிக்க ரணவக்க பங்கேற்றிருந்தாலும் அவருக்கு பதவி எதுவும் வழங்கப்படவில்லை. அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் அவருக்கு முக்கிய பதவியொன்று வழங்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.





## இடியப்ப சிக்கல்!

கொழும்பு துறைமுகத்தின் ‘கிழக்கு முனையம்’ விவகாரத்தால் ராஜபக்ச அரசுக்கு பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளது. எட்டுத்திக்கில் இருந்தும் எதிர்ப்பலைகள் உருவாகியுள்ளன. 51 சதவீத பங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் வசம் வைத்துக்கொண்டு மீதமுள்ள 49 சதவீத பங்கை இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கும் திட்டத்துக்கு பௌத்த தேரர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், தொழிற்சங்க உறுப்பினர்களும் கூட்டாக போர்க்கொடி தூக்கியுள்ளனர். தொழிற்சங்க நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

குறிப்பாக கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கு இரவுபகல் பாராது பாடுபட்ட தேரர்களும், கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் இது விடயத்தில் அரசு மீது சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துவருகின்றனர்.


முதலீடு என்ற போர்வையில் எக் காரணம் கொண்டும் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு இடமளிக்கக்கூடாது எனவும், அவ்வாறு விற்பனை செய்தால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிவரும் எனவும் மிரட்டல் விடுத்துள்ளனர். ஆனால் கிழக்கு முனையம் மேம்படுத்தப்பட வேண்டுமானால் முதலீட்டுக்கான வாய்ப்பை வழங்கவேண்டும், அதனையே அரசாங்கம் செய்யும் என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் விளக்கமளித்து வருகின்றனர்.

கிழக்கு முனையத்தை வழங்கினால் உள்ளூரில் அடி உறுதி. வழங்காவிட்டால் டில்லியிடமிருந்து கடும் இராஜதந்திர அழுத்தங்கள் குவியக்கூடும். எனவே, கிழக்கு முனையம் விவகாரத்தில் ராஜபக்ச அரசு இடியப்பச் சிக்கலில் சிக்கியுள்ளது.

‘தேசப்பற்றை’ முன்னிலைப்படுத்தியே ராஜபக்ச தரப்பு வாக்கு வேட்டை நடத்தும் நிலையில், கிழக்கு முனையத்தை தாரைவார்த்தால் வாக்குவேட்டைக்கான பலமான அஸ்திரத்தையும் ராஜபக்சக்கள் இழக்க நேரிடும். ஆக, கடைசி நேரத்தில் முடிவுகளில் ‘பல்டி’கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை. அதனை வைத்தே சரிந்துள்ள செல்வாக்கை சமநிலைக்குக் கொண்டுவருவதற்கான பரப்புரைகளும் இடம்பெறலாம். என்ன நடக்கின்றது என்பதைக் காத்திருந்து பார்ப்போம்.

அதேவேளை, ஜெனிவாத் தொடர் நடைபெறும் காலப்பகுதியில் தேசப்பற்று பல்லவி பாடுவது ராஜபக்ச தரப்புக்கு கைவந்த கலை. இம்முறை கிழக்கு முனையம் விவகாரத்தால் ஜெனிவா விவகாரத்தை வைத்தும் அனுதாப அரசியல் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## 1000 ஊத்துக்கள்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கோரி வரும் நிலையில்,அதனை பெற்றுக்கொடுப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்கவேண்டிய தொழிற்சங்கங்களோ, அடிப்படை அல்ல, எப்படியாவது ஆயிரம் ரூபா கிடைத்தால் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளன. அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள தோட்டக்கம்பனிகள், அனைத்துக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வகையிலான சூழ்ச்சிகரமான சம்பள உயர்வுத் திட்டத்தை முன்வைத்து அதற்கான சந்தைப்படுத்தலில் தற்போது தீவிரமாக இறங்கியுள்ளன. நாளொன்றுக்கு ஆயிரத்து 25 ரூபாவை சம்பளமாகப் பெறலாம் எனக் கூறினாலும் அது அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியே. அதுமட்டுமல்ல கூட்டு ஒப்பந்தத்தின் ஆயுள்காலம் 2 வருடங்களாக இருக்கும் நிலையில் அதனை நான்கு ஆண்டுகளாக அதிகரிப்பதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் 4 ஆண்டுகளுக்கு ஒருதடவையே தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் சூழ்நிலை உருவாகும். கம்பனிகள் இவ்வாறு திட்டத்தை முன்வைத்திருந்தாலும், தமது தரப்பு முன்மொழிவு என்னவென்பதனை தொழிற்சங்கங்கள் உரிய வகையில் முன்வைக்கவில்லை.

ஆயிரம் ரூபா தா என கத்திப் பேசினாலும், அதனை எவ்வாறு வழங்கலாம் என்பதற்கான திட்டத்தை முன்வைக்கவில்லை. சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளம் நிர்ணயிக்கப்ப டும் என அரசு கூறினாலும், அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்கப் போவதில்லை. ‘ஆயிரம் ரூபாவரையான சம்பள உயர்வுக்கான சாத்தியப்பாடுகள்’ குறித்தே இச்சபை ஆராய்ந்து முடிவெடுக்கும்.

ஆனால் அமைச்சரவை முடிவை வைத்துக்கொண்டு ஆயிரம் ரூபா கிடைத்துவிடும், வெற்றிபெற்றுவிட்டோம், கூட்டு ஒப்பந்தத்தில் இருந்துகூட வெளியேறுவதற்கு தயார் என்றெல்லாம் தற்போது ஆயிரம் ரூபா விடயத்தில் ஆயிரம் அரசியல் கூத்துக்களும் அரங்கேற்றப்பட்டுவருகின்றன.



# திருவள்ளுவரின் தேநீர்க்கடை



இங்கிலாந்தின் சிறுநகர வீதியொன்றில் காலை நேர நடைப் பயிற்சிக்காகச் சென்றான் இளைஞன் ஒருவன். சாலையோரத்தில் ஓலைச்சுவடியொன்றை வாசித்தவாறு சிந்தனையில் மூழ்கியிருந்த முதியவரை அவன் கண்ணுற்றான். அவன் அறிந்திராத மொழியொன்றிலே எழுதப்பட்ட சுவடியிலுள்ளவற்றை மீண்டும் மீண்டும் உச்சரித்தவாறு அந்த முதியவர் சிந்தனையில் மூழ்கியிருந்தமை அவனை வியப்பில் ஆழ்த்தியது. மிகுந்த ஆர்வத்துடன் அதிலுள்ள விடயத்தை தனக்கும் ஆங்கிலத்திலே கூறுமாறு வேண்டினான்.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கை பிழையாதற்று''

என்ற 307ஆவது திருக்குறளை தமிழிலே தெரிவித்து விட்டு, அதற்கான விளக்கத்தை ஆங்கிலத்திலே தெளிவுபடுத்தினார் அந்த முதியவர் . அதன் பொருளைக் கேட்ட மறுகணமே அந்த இளைஞன் மகிழ்ச்சியிலே துள்ளி குதித்தான்.

"கையினை நிலத்திலே மோதுகின்ற போது நிலமானது மறுதாக்கத்தைச் செலுத்தி வலியை தருவதைப் போல சினமும் ஒருவனுக்குத் துன்பத்தைத் தரும்" என்ற அந்த விளக்கம் அந்த இளைஞனை மேலும் சிந்திக்கத் தூண்டியது. மகிழ்வோடு நடைப்பயிற்சியைத் தொடர்ந்த இளைனஞனிடம் "உங்கள் பெயர் என்ன?" என்று முதியவர் கேட்டார். அவனுரைத்த பதில் அவரது காதுகளில் சரியாக விழவில்லை. எனினும் "நியூட்டன்" என்பதாக இருக்கலாம் என ஐயத்தோடு புரிந்து கொண்டார்.

இ.சு.முரளிதரன்

# ஆண்டவரின் ஆதரவாளர்



2

நடிகர் கமலஹாசனுக்கு தமிழகத்தில் ஆதரவாளர்கள் இருக்கிறார்களோ இல்லையோ இலங்கையில் ஒரு தீவிர ஆதரவாளர் இருக்கிறார். அவர் ஒரு கட்சியின் தலைவியும் கூட. ஒரு காலத்தில் மிகப்பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கி, பின்னர் சராசரி அரசியல்வாதியாக மாறிப்போன அந்தப் பெண், இப்போது தமிழர்களுக்காகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்காகவும் போராடுகிறாரோ இல்லையோ, சமூக வலைத்தளத்தில் அம்மணி 24 மணித்தியாலமும் களமாடுகிறார். அதிலும் கமலஹாசன் போடுகின்ற எல்லாப் பதிவுகளுக்கும் அம்மணி கொமண்ட்ஸ் போடாமல் விடுவதே இல்லை. அதிலும் ஈழத்தமிழர்களோடு தொடர்புபட்ட விடயங்கள் என்றால் இன்னும் ஒருபடி மேலே போய், ஏதோ கமலஹாசன் தான் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு தருவார் என்பது போல கெஞ்சத் தொடங்கிவிடுகிறார்.

அண்மையில் பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு, இந்திய மீனவர்கள் நால்வர் பலியானமை என்பது தொடர்பில் கமலஹாசன் போட்ட பேஸ்புக் பதிவுக்கு , "சேர், உங்களைத் தான் சேர் நம்பியிருக்கிறோம் சேர்" என்று ஒரே சேர் போட்டு அம்மணி கமலஹாச னையே திக்குமுக்காடச் செய்துவிட்டாராம். "ஆண்டவரே வருக! தமிழர்களுக்கு தீர்வு தரு!க" என்று பாடாத வரைக்கும் மகிழ்ச்சி.

# மதில் மேல் பூனையும் ஆட்டுவிக்கும் யானையும்


1

வலிகாமம் பகுதியில் ஒரு தபாலகத்துக்கு புதிதாக ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது, அதில் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைந்த செலவில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதால் , எஞ்சிய தொகைக்கு மதில் கட்டுவதென முடிவானது.
குறித்த தபாலகம் அமைந்துள்ள நகரத்தின், பட்டின அபிவிருத்திச் சங்கமே இந்த மதிலையும் கட்ட முடிவெடுத்தது. ஆனால் பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை. இதனால் மதிலைக் கட்ட வேண்டாம் என பிரதேச சபை அறிவுறுத்திய போதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் மதில் கட்டி முடிக்கப்பட்டது. இதனால் பெரும் சர்ச்சை வெடித்தது. ஒரு அரச நிறுவனமே இப்படி சட்டத்தை மீறலாமா? என்று கேள்விகள் எழுந்தன.
இது குறித்து பிரதேச சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்த போதும், சபைத் தவிசாளர் விட்டேத்தித்தனமாக இருந்தார்.
சபையின் செயலாளரும், தவிசாளரும் இணைந்து இது குறித்து சபையில் எழுப்பட்ட வாதங்களை சபைக்குறிப்பில் இணைக்காமல் தவிர்த்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சில உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பும் செய்திருந்தனர்.
இப்படிப்பட்ட பின்னணியில் கடந்தவாரம் அந்த மதில் திடீரென இடிக்கப்பட்டது. சபைத் தவிசாளரின் பணிப்பின் பேரிலேயே அது இடிக்கப்பட்டதாக ஊடகங்களுக்கும் செய்திகள் சொல்லப்பட்டன. ஆனால் மதில் அகற்றப்பட்டது மட்டுமே உண்மை. அது இடிக்கப்படவில்லை. பிரதேச சபை இடிப்பதாக இருந்தால் மதிலின் ஒருகல் கூட மிஞ்சியிருக்காது. அத்தோடு அத்துமீறி மதில் அமைத்தமைக்கு தண்டமும் அறவிட்டிருக்க வேண்டும். ஆனால் எந்தப் பட்டின அபிவிருத்திச் சபை மதிலை அமைத்ததோ, அதே அமைப்பினரே மதிலின் ஒவ்வொரு கல்லாக தட்டி, அகற்றிவிட்டு, மாலையில் தவிசாளரை அந்தப் பக்கம் ஒரு 'ரவுண்ட்' வரச் சொல்லிவிட்டு, 'தவிசாளரின் உத்தரவின் பேரில் மதில் இடிப்பு' என்று நம்பச் செய்துவிட்டார்களாம். இப்போது மதில் கட்டப் பயன்படுத்திய கற்களையும் காப்பாற்றி, தண்டத்தையும் கட்டாமல், தவிசாளருக்கும் நல்ல பிள்ளை பேர் வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.
சரி, ஏன் அந்த அமைப்பு சொல் கேட்டு தவிசாளர் ஆட வேண்டும்? அத்துமீறிக் கட்டப்பட்ட மதில் விவகாரத்தில் தவிசாளர் ஏன் கண்ணை மூடிய பூனையாக இருந்தார்? என்றெல்லாம் கேள்விகள் எழும். எந்தப் பட்டின அபிவிருத்திச் சபை மதிலை அனுமதி பெறாமல் கட்டியதோ, அதன் தலைவர் பிரதேச சபையின் யானைக்கட்சி உறுப்பினராம். அந்த உறுப்பினர் 'குணம்' கொண்டு 'வைன்' கொடுத்தால் தவிசாளர்'நடனமாடவும்' செய்கிறாராம். சொந்தக் கட்சிக்காரரை விடவும், யானைக் கட்சி உறுப்பினர்மீது தவிசாளர் காட்டும் கண்மூடித்தனமான கரிசனையே, மதில் விடயத்திலும் அவரைக் கண்மூடி இருக்கச் செய்ததாம்.
போதாக்குறைக்கு இவர்களோடு சபையின் செயலாளரும் சேர்ந்து ஆடுவதால், மக்கள் நலப்பணிகள் கிடப்பில் இருக்க, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் தேவையான திட்டங்களை இவர்கள் செய்கிறார்கள் என்பது அந்தப் பிரதேச மக்கள் சொல்லும் குற்றச்சாட்டு. இதற்கு இவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்?

# திரடி அரங்கு



- மின்னல்



எந்த வாய்க்கால்?

3

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் இணைத்தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் மக்கள் தமது பிரச்சினைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அப்படி தங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்ல ஒரு பொதுமகன் எழுந்தார்.


**பொதுமகன்:** ஐயா, எங்கட பக்கம் வாய்க்கால் எல்லாம் சேதமாகிட்டுது, அதைக் கட்டித்தர ஒழுங்கு செய்யுங்கோ....

**இணைத்தலைவர்:** அப்படியா? சரி. நீங்கள் சொல்வது கமநல சேவைகள் திணைக்கள வாய்க்காலா? அல்லது பிரதேச சபை வாய்க்காலா?

**பொதுமகன்:** இல்லை ஐயா, தண்ணி ஓடுற வாய்க்கால்!!!!!!

அவ்வளவுதான். எங்கும் கொல்லென்ற சிரிப்பொலியாம்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி




## வேலையில்லை, குடியுண்டு

ஆனாலும் மாலைதீவில் பாலமொன்று கட்டும் வேலை வந்தபோது, அங்கே சென்றான் ரூபஸ். ஆறு மாதம்வேலை, ஆறுமாதம் லீவு. லீவில் வீட்டுக்கு வரும்போதெல்லாம் ஏன், எதற்கு என்றில்லாமல் மனைவி மீது சந்தேகப்படுவதும், சண்டை பிடிப்பதுமாக காலம் கழியும். இதற்கிடையில் மூன்று பிள்ளைகள் வேறு. கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் மாலைதீவு வேலை. அது முடிந்ததும் பழைய குருடி கதவைத் திறவடி என்கிற கதையாக வீட்டிலேயே குந்தி விட்டான் ரூபஸ். மாலைதீவில் உழைத்து வந்த பணம் எத்தனை நாளைக்குத்தான் போதும்? தந்தையிடம் காசு கேட்க கீதாவுக்குத் தயக்கம்.
அதனால் குடும்பப்பாரத்தை முழுதுமாக சுமக்கத் தொடங்கினாள் கீதா. கச்சான் விதைப்பு, களை பிடுங்குதல், கூலி வேலை என்று கிடைக்கின்ற வேலைக்கெல்லாம் போய் உழைத்து, பிள்ளைகளின் கல்வி, சாப்பாடு போன்ற செலவுகளை சமாளிக்கத் தொடங்கினாள். அப்போதும் ரூபஸுக்கு வேலைக்குச் செல்லவேண்டுமென்ற புத்தி வரவேயில்லை. வேலைக்குப் போகாவிட்டாலும், சந்தேகம், குடி, சண்டை என்பவற்றுக்கு மட்டும் குறைவேயில்லை. ஒருநாள் சண்டையின் போது, கீதாவுக்கு செம்பால் அடித்து, பெரும் காயமும் ஏற்பட்டது.

**பிள்ளைகளுக்காக...**

கீதாவின் உறவினர்கள் எவரும் வீட்டுக்கு வரக் கூடாது என்று கட்டுப்பாடும் போட்டான் ரூபஸ். அதையும் மீறி யாரும் வந்துவிட்டுப் போனால், கீதாவுக்கு அடி, உதைதான். 'என் வீட்டுக்கு யாரும் வரவேண்டாம்' என எப்படி தன் உறவினர்களிடம் சொல்லமுடியும் கீதாவால்? அதனால் அடி, உதைகளை வாங்கிக் கொண்டே இருந்தாள். வீடு என்பது அவளைப் பொறுத்தவரை ஒரு சித்திரவதைக்கூடமாகவே மாறியிருந்தது. அவளின் ஒரே மகிழ்ச்சி பிள்ளைகள் மட்டுமே. மூத்த மகனுக்கு 15 வயது. மகளுக்கு 13 வயது. கடைக்குட்டி மகனுக்கு 8 வயது. அவர்களுக்காக மட்டுமே அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

## சந்தேகப் பிராணி

கீதாவின் சகோதரி ஒருவர் நல்லவசதியாக இருப்பதால், தன் சகோதரியின் நிலையைப் பார்த்து, அவர் கீதாவுக்கு அடிக்கடி பண உதவி செய்துள்ளார். அப்படி அவர்கள் பணம் கொடுப்பதைப் பார்த்த ரூபஸ், அந்தச் சகோதரியின் கணவனோடு கீதாவை இணைத்து சந்தேகப்பட்டு, தகாத வார்த்தைகளால் பேசி, அடித்து முரண்பட்டுள்ளான்.
கீதாவின் இன்னொரு சகோதரனுக்கு திருமணம். கீதாவை மணப்பெண்ணின் தோழியாக வருமாறு கேட்டனர். ஆனால் ரூபஸ் "அந்தக் கலியாண வீட்டுக்கு போகவே கூடாது. போனியோ அவ்வளவுதான்" என ஒரே போடாகப் போட்டான். பாவம் கீதா, கடைசிவரை அந்தத் திருமண வைபவத்துக்கு போகவேயில்லை.

## பகல் முழுதும் பற்றைக்குள் ஒளிந்திருந்த கீதா

ரூபஸ் முழுநேரக் குடிகார்ரனாக மாறிய கையோடு, அதேபோன்ற குடிகாரக் கூட்டம் அவனது நட்பு எல்லைக்குள் வந்தது. அந்தக் குடிகாரக் கும்பல் தனியே சாராயத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல், கஞ்சா, ஹெரோய்ன் என்று போதையில் மிதக்கத் தொடங்கியது. அப்படிக் குடித்து வெறிக்கும் போதெல்லாம் " என்ர மனுசியைக் கொல்லுவன்" என்று அடிக்கடி சொல்லத் தொடங்கினான் ரூபஸ். ஒருமுறை வீட்டில் சண்டை முற்றியதும், கீதாவைக் கொல்ல மண்வெட்டியைத் தூக்கி கொண்டு கலைத்திருக்கிறான் ரூபஸ். ஆனால் அன்றைக்கு கீதா தப்பியோடிவிட்டாள். ஆனாலும் எங்கு ஓடுவது? யார் வீட்டுக்கு போனாலும் அங்கே வந்து தன்னையும் அடிப்பதோடு, தஞ்சம் கொடுத்தவர்களையும் கேவலப்படுத்துவான் என்பதால் அன்று பகல் முழுவதும் பற்றைக் காட்டுக்குள் ஒளிந்திருந்துவிட்டு, மாலையில் தான் கீதா வீடு திரும்பினாள். இந்த நிலையில் தான் தைப்பொங்கலுக்காக தன் சகோதரன் வீட்டுக்கு பிள்ளைகளோடு சென்று திரும்பிய கீதாவை மிருகத்தனமாகத் தாக்கி, கத்தியால் குத்தி, தன் பிள்ளைகளின் கண்முன்னே கொடூரமாகக் கொலை செய்துள்ளான் ரூபஸ்.

## "கண்ணுக்கு முன்னால அம்மா துடிதுடிச்சு செத்தா!"

"வள்ளிபுனம், புதுக்குடியிருப்பில இருக்கிற மாமா(கீதாவின் உடன் பிறந்த சகோதரன்) தைப்பொங்கலுக்கு எங்களை வரச்சொல்லி, அப்பாட்டையும், அம்மாட்டையும் கேட்டவர். அதுக்கு அப்பா தானும் சேர்ந்து வாறன் எண்டுதான் சொல்லிக்கொண்டிருந்தவர் . 'அம்மாவையும் எங்களையும் முதலிலை போகச் சொல்லிட்டு, தான் பிறகு வாறன் எண்டு சொல்லி அனுப்பினார்.
ஆனால் பிறகும் அவர் வரேல்லை. அங்க நிக்கேக்க , இடைக்கிடை போன் எடுத்து என்னை இல்லாட்டி தம்பியைக் கதைக்கச் சொல்லுவார். அப்ப "வீட்டை ஆர் நிக்கிறது? ஆர் வாறவை எண்டுதான் விடுத்து விடுத்துக் கேட்பார் நாங்களும்" மாமாவும், மாமியும் தான் நிக்கினம் எண்டு உள்ளதைச் சொன்னாலும், "பொய் சொல்லக்கூடாது. உண்மையைச் சொல்லுங்கோ எண்டு திருப்பித் திருப்பிக் கேப்பார். பிறகு அம்மாட்ட போனைக் குடுக்கச் சொல்லிக் கதைப்பார்.

**சாப்பிடுறேலை**

போனில அம்மாவோட சண்டை பிடிப்பார். அம்மா அழுது கொண்டே சாப்பிடாமல் சில நேரம் படுத்திடுவா. வீட்டிலயும் கனநாள் எங்களுக்கு சாப்பாடு தந்திட்டு சாப்பிடாம அழுதுகொண்டே அவா படுத்திடுவா.
திங்கள் பள்ளிக்கூடம் எண்டதால மாமா வீட்டில இருந்து ஞாயிறு வந்தம். அண்ணான்ரை சைக்கிளை அம்மப்பா வீட்டை விட்டிட்டுத் தான் பஸ்ஸில போனனாங்கள். அதால அண்ணா முக்கொம்பனில இறங்கி சைக்கிள் எடுக்கப்போட்டான். நானும் அம்மாவும் தம்பியும் பஸ்ஸால இறங்கி வீட்டை போனம். அம்மா முகம் கழுவப் போயிட்டா.
நானும் தம்பியும் வீட்டுக்குள்ள போனம். அப்பா முன் ஹோலில இருந்தார். எங்களைக் கூப்பிட்டு, "ஏன் எனக்கு பொய் சொல்லுறீங்கள்? எல்லாரும் சேர்ந்து பொய் சொல்லுறீங்கள்? நீங்கள் ஆசைப்பட்டது இண்டைக்கு நடக்க போகுது" எண்டு கோபமாச் சொன்னார். அவர் அம்மாவோட சண்டை பிடிக்க போறார் எண்டு நினைச்சம். அம்மா முகம் கழுவிப்போட்டு, உடுப்பு மாத்த சாமி அப்போ அப்பாவும் சடாரெண்டு எழும்பி அந்த அறைக்குள்ள ஓடினார். நாங்களும் பின்னால கத்திக் கொண்டு ஓடிப்போனம். போன வேகத்திலை கதவை உதைஞ்சு சாத்தினார். டக்கெண்டு அலுமாரிக் கரையில அடுக்கி வைச்சிருந்த தலகாணி ஒண்டுக்கு கீழ இருந்து கத்தியை எடுத்திட்டார். அப்பிடியே அம்மான்ர கழுத்தைப் பிடிச்சார். அம்மா திமிற திமிற, இரண்டு கையையும் தன்ர ஒரு கையால அமத்திப் பிடிச்சார். அம்மா உதறியும் அவர் விடேல்லை. அப்பிடியே பிடிச்சுக்கொண்டு ரண்டு மூண்டு தரம் கத்தியால குத்தினார். ஆனால் குத்துப் படேல்லை. அந்தக் கோபத்திலை அம்மாவை அடிச்சார். அம்மா கீழ விழ, தலையையும் பிடிச்சு வேகமா மளமளவென சுவரில கொண்டுபோய் இடிச்சார்.

**மயங்கி விழுந்த அன்ரி**

பயங்கரமா இரத்தம் வரத்துடங்கிட்டுது. அம்மாவுக்கு பிறகு அம்மா கீழ விழுந்து கிடக்க அப்பா கத்தியை எடுத்து கண்டபடி குத்தினவர். நாங்கள் கத்தி குளறி அழுதும் ஒருத்தரும் காப்பாத்த வரேல்லை. பக்கத்து வீட்டு அன்ரியை கூப்பிடுங்கோ எண்டு அம்மா சொன்னவா. உடனை தம்பி ஓடிப் போனவன். போய் அன்ரியைக் கூட்டி வந்தவன். அவா வந்திட்டு அப்பா ரத்தக்கையோட நிண்டதைப் பார்த்து அங்கேயே மயங்கி விழுந்திட்டா. பொலிஸ்காரர் ஏதும் பிரச்சினை எண்டா கோல் எடுக்கச் சொல்லி நம்பர் தந்தவை. நான் அவசரத்தில தேடியும் அது கிடைக்கேல்லை. எங்கட கண்ணுக்கு முன்னால அம்மா துடிச்சுத் துடிச்சு செத்துப்போனா. எவ்வளவு நேரமாக் கத்தி அழுதனாங்கள். ஆனால் ஒருத்தரும் காப்பாத்த வரேல. "என்று 13 வயதான கீதாவின் மகள் இன்னும் அந்தப் பயங்கரத்திலிருந்து மீளாமல், திகிலும், அழுகையுமாகச் சொல்லி முடித்தார். இப்போது கீதாவின் மூன்று பிள்ளைகளும் கீதாவின் தந்தையின் அரவணைப்பில் இருக்கிறார்கள்.


## கொலைக்கு பின்...!

கீதாவைக் குத்தி கொலை செய்துவிட்டு , இரண்டு கைகளிலும் இர்த்தம் தோய்ந்த நிலையில்,சர்வ சாதாரணமாக பயமோ பதற்றமோ இல்லாமல் வீட்டுக்கு வெளியே வந்துள்ளான் ரூபஸ்.
தனது தாயாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு "அவளைக் குத்திப் போட்டன். பிள்ளைகளை நீங்கள் பொறுப்பெடுங்கோ"என்று சொல்லிவிட்டு, தன் நண்பன் ஒருவனுக்கும் அழைப்பெடுத்துள்ளான்..அவைனிடம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்தைப் பெற்று, பொலிஸாரோடு தொடர்பு கொண்டான்.
" நான் என்ரை மனுசியைக் குத்திக் கொண்டிட்டன்" என்று சொல்ல, சிறிது நேரத்திலேயே பொலிஸார் வந்து அவனைக் கைதுசெய்துள்ளனர். பின்னர் மனைவியின் சடலத்தை அடையாளம் காட்டுவதற்காக அவனை மருத்துவமனைக்குப் பொலிஸார் அழைத்து வந்தனர். அப்போது " ஏன் அவனை அழைத்து வந்தீர்கள்?" என கீதாவின் உறவினர்கள் ஆத்திரத்தோடு கத்தினர். "அவனுக்கு அடிச்சு ஏதும் பிரச்சினை ஆக்கினால் சடலத்தை இப்ப தரமாட்டம்" என்று பொலிஸார் எச்சரிக்காவிட்டால், ரூபஸை கீதாவின் உறவினர்கள் அங்கேயே அடித்திருப்பார்கள். "நல்லவேளையாக அவன் பொலிஸாரால் தப்பிவிட்டான்" என்கிறார் கீதாவின் உறவினர் ஒருவர்.

## விரட்டிய பொலிஸ்

கீதாவின் பிள்ளைகளோடு பூநகரி பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருக்கிறார் கீதாவின் தந்தை.
" அவனை வெளியில விட்டால் எங்களுக்குப் பாதுகாப்பில்லை" என்து அவர் அங்கு முறைப்பாடு செய்யமுயன்றார். ஆனால் அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் "வழக்கு கோர்ட்ஸுக்கு வரும். அப்ப லோயரைப் பிடிச்சு கதையுங்கோ. நாலைந்து பேர் சைன் வைச்சால் அவன் பிணையில வெளிய வந்திடுவான்" என்று கூறி முறைப்பாட்டைப் பதிவு செய்யாமல் அவர்களைப் பொலிஸ் நிலையத்திலிருந்து கலைத்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



# நீங்கள் நாவலா? நாணலா?

இருவகை மனிதர்கள்
எம்மிடை உள்ளனர்!
இருவகை எவையென்று
விளக்குவ தென்கடன்!!

நாணலைப் போன்றோர்
இருவகையினில் ஒருவகை!
நாவலைப் போன்றோர்
இருவகையினில் மறுவகை!!

எப்படியும் வாழலாமென
வாழ்வோர் நாணல் வகை!
இப்படித்தான் வாழ்வோமென
வாழ்வோர் நாவல் வகை!!
வ
காலநேரத்துக் கேற்ற வண்ணம்
தேவைகளுக் கேற்றபடி
தங்களை மாற்றிக் கொண்டு
வாழ்வோர் நாணல் வகை!

ஆற்றுக்கும் காற்றுக்கும்
சாய்ந்து கொடுத்தபடி
ஆட்டுவிப் பார்வைப் பாவையென
வாழ்கின்றோர் நாணல்வகை!

உயர் கொள்கைப் பற்றுடனும்
தளராமன உறுதியுடனும்
மற்றவர் மதிக்கும் வண்ணம்
வாழ்வோர்கள் நாவல்வகை!

கண்டதே காட்சியென்றும்
கொண்டதே கோலமென்றும்
எப்படியும் வாழ்வோம்
என வாழ்வோர் நாணல் வகை!

சீரிய உயர் நோக்குடனே
நேரிய நல் வழி நடந்து
சூரியமதி நுட்பத்துடனே
வாழ்வோர் நாவல்வகை!

தலையேதான் போனாலும் நான்
கொண்ட உயர்கொள்கையினைக்
கைவிடேனெனும் மனத்திடமுடனே
வாழ்பவர்கள் நாவல்வகை

நேரத்துக்கொரு நீதிசொல்லி
ஆளுக்கொரு நீதிசொல்லி
தேவைக்கேற்ப நீதிசொல்லி
வாழ்வோர் நாணல்வகை

உயர்கொள்கைப் பிடிப்மற்று
உயர்நோக்கு நெறியுமற்று
எவர்க்குமெப் பயனுமற்று
வாழ்வோர்கள் நாணல்வகை!

சாதனைகள் எதுவுமில்லை
போதிக்க எதுவுமில்லை
சாதிக்கத் திறனுமில்லை
நாணல் வகை வாழ்க்கையிலே!

வேதனைகள் மிகுந்திருக்கும்
சாதனைகள் நிறைந்திருக்கும்
போதனையும் மலிந்திருக்கும்
நாவல்வகை வாழ்க்கையிலே!

சோதனைகள் மிகுந்திருக்கும்
நாவல் வகை வாழ்க்கையிலே
சோதனைகள் எதுவுமில்லை
நாணல் வகை வாழ்க்கையிலே
உண்மைக்காய் வாழ்பவனை
சோதனைகள் வருத்திடவும்
உண்மைக்காய் வாழந்திருந்தான்
உண்மையாய் வாழ்ந்திருப்பான்!!

துன்பம் பல கடந்த பின்பு
கிடைக்கின்ற இன்பம் போல்
துன்பம்துயர் எதுவுமின்றிக்
கிடைக்குமின்பம் இன்பமல்ல!

நாணல் போல் வாழ்வதற்கு
எல்லாரும் விரும்பார்கள்!
நாவல் போல் வாழ்வதற்கும்
எல்லார்க்கும் இயலாது!!

நாவல் போல் வாழ்க்கையிலே
கிடைக்கின்ற மனதின்பம்
நாணல் போல் வாழ்க்கையிலே
கிடைக்காது அறிந்திருப்பீர்!

நாணல்போல் வாழ்க்கையா
வாழுகின்றீர் இல்லையேல்
நாவல் போல் வாழ்க்கையா
வாழுகின்றீர் மறைக்காதீர்!



-வயலூர் முருகன்

22ஆம் பக்கத் தொடர்ச்சி

## "விட்டிட்டு போயிருக்கலாம் நாங்கள் பாத்திருப்பம்"

"கலியாணம் முடிச்சு எங்களோடஇருக்கும்போதும் ஒரே சண்டை. நாங்கள் ஏதாவது கேட்டால் குடும்பத்துக்குள் பிரச்சினை வந்துவிடுமோ எண்டுதான் நாங்கள் அமைதியாக இருந்தம்.

பூநகரியிலை அவா இருக்க போன பிறகு, ஒவ்வொரு நாளும் எனக்கு கோல் எடுப்பா. புருசனுக்கு தன்னில ஒரே சந்தேகம் , சண்டை எண்டும், தனக்கு வாழ விருப்பமில்லை, பிள்ளைகள் தனிச்சிடுவினம் எண்டுதான் எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டு இருக்கிறன் எண்டு அக்கா சொல்லுவா. எப்பவுமே தலையில தான் அடிக்கிறவனாம். அதால அடிக்கடி தலைவலியிலை கஷ்டப்படுவா.

ரண்டு மாசத்துக்கு முதல் சண்டை பிடிச்சு பிள்ளைகளோட எங்கடை வீட்ட வந்திட்டா . எங்கடை வீட்டுக்குப் பக்கத்தில ஒரு காணி இருக்கு. அதைத் துப்பரவாக்கி அதுக்கை வீட்டைக் கட்டி அவா இருக்கட்டும் எண்டு நினைச்சம் . ஆனால் ஒரு நாள் ரூபஸ் ஓட்டோவில வந்து பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போட்டான். பூநகரி பொலிஸிலை போய் பிள்ளைகளை அக்கா கொண்டு போட்டா எண்டும் முறைப்பாடும் போட்டிருக்கிறான். பிறகு அக்கா பூநகரி பொலிஸுக்கு போய் "பிள்ளைகளை அவன் கூட்டிக் கொண்டு போட்டான். எங்களுக்கு ஏதாவது எண்டால் நீங்கதான் பொறுப்பு" எண்டு சொல்லிட்டு வந்தவா. பிறகு "அவன்ரை கூட்டாளியள் கசிப்பும் கஞ்சாவும் இவனோட சேர்ந்து பாவிக்கிறவங்கள். பொம்பிளப் பிள்ளைய அங்க தனிய விடேலாது" எண்டு சொல்லி தானும் வீட்ட திரும்பப் போயிட்டா. அவனுக்கு பிடிக்காட்டில் அவவை விட்டிட்டு போயிருக்கலாம். நாங்கள் பாத்திருப்பம்"

என்று கண்ணீரோடு கூறுகிறார் கீதாவின் சகோதரி.

### பொலிஸுக்கு பார்ட்டி!

"கீதா அமைதியான பெண். யார் வீட்டுக்கும் அவர் சென்று வருவதையோ, யாருடனும் தேவையில்லாமல் கதைப்பதையோ நாங்கள் கண்டதில்லை.

அதேபோல் நிம்மதியாக, குடும்பத்தில் அமைதியாகவும் இருந்ததை கண்டதில்லை. அடிக்கடி சண்டை பிடிக்கும் சத்தம் கேட்கும்.

தோட்ட வேலைகளுக்குச் சென்று வருவார். பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்க வேண்டும் என்பதை நினைத்து எல்லாத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டார்.

கீதாவின் கணவருடன் யாரும் கதைப்பதில்லை. அயலில் யாருடனும் சண்டையில்லை ஆனால் அவர் கஞ்சா, கசிப்பு பாவிப்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல் அவருடைய நண்பர்களும் கஞ்சாப் பாவனையாளர்கள். ரூபஸ் கஞ்சாவோடு மூன்றுதரம் பிடிபட்டு குற்றப்பணம் கட்டியுள்ளார். கீதா தாய் வீட்டுக்குச் சென்றால் விடிய விடிய வீட்டில் கூட்டாளிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சத்தம் போட்டு கும்மாளம் அடிப்பார்கள். அங்கு வரும் கூட்டாளிகளில் பலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு அடிக்கடிபொலிஸ் நிலையம் சென்று வருபவர்கள் தான். கீதாவின் வீட்டுக்கு அருகில் இருக்கும் வீடு ஒன்றில் வன பாதுகாப்பு பிரிவினர் உள்ளனர். அங்கு இந்தக் கஞ்சா குழுவினர் பொலிஸாருக்கு பார்ட்டி வைப்பார்கள். கொலை நடப்பதற்கு முதல் நாளும் ரூபஸ் வீட்டில் பார்ட்டி நடந்துள்ளது. பொலிஸில் சிலர் இவர்களோடு நல்ல பழக்கம். அதனால் பிடிபட்டாலும் விரைவில் ரூபஸ் வெளியில் வந்துவிடுவான்" என்று சொல்கிறார்கள் ஊரவர்கள்.



### தகாத உறவு

ரூபஸுக்கு சில பெண்களோடு தகாத உறவு இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

"கிளிநொச்சியில் சிப்பாய் ஒருவரை திருமணம் செய்து பின் அவனை விட்டுப் பிரிந்து வந்த பெண்ணோடு ரூபஸுக்கு தொடர்பு இருந்தது, அது வீட்டுக்குத் தெரியவந்து சண்டை நடந்தது. ஆனால் இப்போது அந்தப் பெண்ணுடன் பழக்கமில்லை என்று ரூபஸே சொன்னான்.

ரூபஸின் சகோதரி ஒருவர் முஸ்லிம் நபர் ஒருவரைத் திருமணம் செய்து தென்பகுதியில் இருக்கிறார். கொஞ்ச நாள் அங்கே சென்றிருந்த ரூபஸுக்கு முஸ்லிம் பெண் ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அவரைத் திருமணம் செய்யவே இப்படிக்கீதாவைக்கொலைசெய்தானோ தெரியவில்லை" என்கிறார் ரூபஸின் நண்பர் ஒருவர்.

"அவனை எங்கடை பிள்ளை எண்டு சொல்றதே அசிங்கம்"

"கீதாவை நாங்கள் மருமகளா நினைக்கேல்லை, மகளாத்தான் பாத்தம். அவவும் அப்பிடித்தான் இருந்தா. இப்ப அவளை இழந்திட்டம். இவன் இப்பிடிச் செய்வான் எண்டு ஆருமே எதிர்பாக்கேல்லை. ஏதும் பிரச்சினை எண்டால் நாங்கள் அவனைப் பேசுவம். அதால மகனுக்கு எங்களில கொஞ்சம் மனஸ்தாபம் இருந்தது. அதால அவரோட எங்களுக்குத் தொடர்பு பெருசா இருக்கல்ல. எங்கட சொல்லையும் அவர் கேக்கிறதில்லை.... கோபமும் அதிகமா வரும்..

மருமகள் தான் இருந்திட்டு வீட்டுக்குவந்துபோவா. அவா நல்ல பிள்ளை. அந்தப் பிள்ளையிலை குறைசொல்ல எதுவும் இல்லை.

வாழப்பிடிக்காட்டி விட்டிட்டுபோ எண்டு இவனுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறம். அதையும் செய்யாமல் கடைசியிலை இப்பிடி ஒரு அவமானத்தைத் தேடிவச்சிட்டான்.. என்ரை பிள்ளை செய்தாலும் பிழை பிழைதானே. தலை குனியிற ஒரு வேலையைச் செய்து போட்டான். அதால நாங்க அவனை போய்க்கூடப் பாக்கேல்லை. கொலை செய்தவன் தானும் செத்திருக்கலாம். இனி வாழ்றதில்லை என்னதான் இருக்கு? பிள்ளை எண்டு சொல்லவே அசிங்கமா இருக்கு.

மகன் போன் எடுத்து "அவளைக் குத்தி யிட்டன், பிள்ளைகள் அனாதையாகிட்டினம்" எண்டு சொன்னான்.. எங்களுக்கு ஒண்டுமே புரியல்லை.. அழுகைதான் வந்திச்சு... அதுவரைக்கும் என்ன நடந்தது எண்டு கூட தெரியேல்லை. ஏதும் காயப்பட்டு இருப்பாளோ என்று நினைச்சுத்தான் புறப்பட்டுப் போனம், அங்க போன பிறகு தான் எல்லாமே தெரிஞ்சுது.இவனுக்கு கூட்டாளிகள் கனக்க இருக்கு. அப்பிடி ஆராவது தூண்டி விட்டுத்தான் இதைச் செய்தானா எண்டும் சந்தேகமா கிடக்கு." என்கின்றனர் வவுனியாவில்வசிக்கும் ரூபஸின் பெற்றோர்.

குடியும், சந்தேகமும் ஒரு குடும்பத்தின் வாழ்வைச் சீரழித்துவிட்டன. கீதாவின் மூன்று பிள்ளைகளும் தான் பாவம் . சிறுவயதிலேயே கண்முன்னே தாய் கொல்லப்பட, தந்தை சிறை செல்ல, வயோதிபத் தாத்தாவோடு வாழும் நிலை. கீதாவின் ஆன்மா, அந்தக் குழந்தைகளின் வாழ்வை ஒளிமயமான பாதையில் வழிநடத்தட்டும்.





ஆர்.லயனல்

# இலங்கையணி மீண்டெழுமா?

இலங்கைக் கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக இரண்டாவது தொடரிலும் வழித்துத் துடைக்கப்பட்டிருக்கின்றது. இம்முறை அடைந்த தோல்வி மிகப்பெரியது. சொந்த மண்ணில் அதுவும் இலங்கை அணியின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் காலியில் இங்கிலாந்து அணியால் இம்முறை வழித்துத் துடைக்கப்பட்டிருக்கின்றது இலங்கை அணி.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் மத்தியூஸ், திரிமன்னே, எம்புல்தெனிய மூவரையும் தவிர்த்து வேறு எந்தவொரு இலங்கை வீரரும் இந்தத் தொடரில் பிரகாசிக்கவில்லை. டில்ருவான் பெரேரா ஓரளவு தன்னை நிரூபிக்க எத்தனித்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆனால் ஒரு வரியில் விமர்சிக்க வேண்டுமாயின் 'படுமோசம்' என்ற ஒற்றைச் சொல்லில் இலங்கை கிரிக்கெட் அணியின் பெறுபேற்றை அடக்கிவிடலாம்.

இந்தப் படுதோல்விகளை அடுத்து இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் பல உள்ளக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதும் நிர்வா கத்துக்குள் புகைச்சல் நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் வெள்ளிடை மலை. குறிப்பாக இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச சில விடயங்களை இறுக்கியுள்ளார்.

எவரும் எதிர்பாராதவிதமாக, 'வீரர்களின் பெறுபேறுகளை வைத்துத்தான் இனி ஊதியம்' என்று அவர் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அத்துடன் முன்னாள் வீரர்களான ரணதுங்க, மகேல, சங்கா ஆகியோரின் உதவியையும் இந்தச் சீரமைப்புக்காக அவர் நாடியுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாளர் பதவி விலகியமைக்கும் இந்தச் சீரமைப்பு நடவடிக்கைகள்தான் காரணம் என்றும் கருதமுடியும்.

இலங்கை அணிக்கு இந்த வருடம் மிகப்பெறுமதி வாய்ந்தது. அடுத்தடுத்துப் பல தொடர்கள் வரவுள்ளன. இந்த மாற்றங்களை மிகத் துரிதமாக மேற்கொண்டு மீண்டெழ வேண்டிய கட்டாயத்தில் இலங்கையணி உள்ளது. அந்த மீளெழுகை சாத்தியமா என்பதே இப்போது கேள்விக்குறி.

**'இன்னுமாடா இந்த உலகம்**
**இலங்கை ரீமை நம்பிக்கொண்டிருக்கு?'**

## ஏலம் மீதான எதிர்பார்ப்பு!




ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் அடுத்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இந்த ஏலம் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு அணி களும் இந்த ஏலத்துக்காக முழுவீச்சில் தயாராகி வருகின்றன. விடுவிக்கப்பட்ட வீரர்களின் அடிப்படையில் பஞ்சாப் அணி அதிகூடிய நிதியைக் கையிருப்பில் வைத்துள்ளது. அந்த அணியிடம் 53.20 கோடி ரூபா மீதமுள்ளது. சென்னையிடம் 23 கோடி ரூபா கையிருப்பில் உள்ளது. குறைந்த பட்சமாக ஹைதராபாத் அணியிடம் 10.75 கோடி ரூபா நிதி கையிருப்பில் உள்ளது.

பஞ்சாப் அணி ஏறக்குறைய பாதி அணியைக் கலைத்துவிட்ட நிலையில் அது எவ்வாறு மீண்டும் அணியைக் கட்டியெழுப்பப்போகின்றது என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

**"பாதி போனால் என்ன**
**ஏலம் இருக்கே, ஏலேலோ ஐலசா"**

உலக உலா

ஆர்.பிரகாஷ்



# புதிய சதுரங்க வேட்டை

உலக அரசியல் என்பது ஒரு சதுரங்க ஆட்டம். அதில் காய்களை நகர்த்துவதில் அமெரிக்கா என்றுமே கில்லாடி. ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் தனக்கேற்றவாறாக அமெரிக்கா காய்களை நகர்த்திக்கொண்டுதான் உள்ளது. எனினும் சில காய்கள் நகர்த்தப்படுவதில்லை. சில காய்கள் தேவைக்கு ஏற்றவாறு நகர்த்தப்படும். பைடனும் இதற்கு விதிவிலக்கல்லர்.

ட்ரம்ப் ஒரு ஜனநாயக சர்வாதிகாரி என்பதுதான் அவரின் ஆட்சிக் காலத்தில் பலரினதும் விமர்சனமாக இருந்தது. ட்ரம்பும் அவ்வாறுதான் நடந்துகொண்டார். ட்ரம்பின் கொடுங்கோல் ஆட்சியில் இடம்பெற்ற அராஜகங்கள் மிக நீளமானவை. இதனால் நடைபெற்று முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் "அமெரிக்காவில் ஆட்சிமாற்றம் இடம்பெற வேண்டும். பைடன் ஆட்சியமைக்க வேண்டும் "என்று உலகம் விரும்பியது. அதாவது பைடனை ஒரு மீட்பர் என்ற நிலையில் வைத்து இந்த உலகம் நோக்கியது. ஆனால் அமெரிக்காவில் என்னதான் ஆட்சிகள் மாறினாலும் சில காட்சிகள் மாறாது. அது பைடனின் ஆட்சிக் காலத்திலும் நடைபெற ஆரம்பித்துவிட்டது. அதுவும் மிக வேகமாக.

### ஈரானுடன் மாறாத கொள்கை

ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் ஈரானுடன் அமெரிக்கா உச்சக்கட்டமாக மோதியது, முரண்பட்டது. அடுத்ததொரு போர்முனையாக இந்த இரு தேசங்களும் காணப்பட்டன. பைடனின் ஆட்சிக்காலத்தில் இது மாறிவிடும் என்று பலரும் கருதினார்கள். ஆனால் ட்ரம்பின் தொடர்ச்சிதான் ஈரான் விடயத்தில் அமெரிக்க ஆட்சியாக அமைந்துள்ளது. அமெரிக்காவுடன் மேற்கொண்ட அணுவாயுத ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தினால் ஈரானுடன் இணங்கத் தயார் என்று பைடன் அறிவித்துள்ளார். காசிம் சுலைமானியை அமெரிக்கத் தாக்குதலுக்குப் பலிகொடுத்துள்ள ஈரான், குரோதங்களைக் கைவிட்டுவந்து அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்வது சாத்தியமற்றது. ஆக, ஈரானுடனான உறவென்பது மேற்கொண்டு தொடரப்பட முடியாதது என்பதுதான் பைடனின் நிலைப்பாடும்கூட.

### ரஷ்யாவுடன் ஒபாமாவின் கொள்கை

ஆனால், ரஷ்யாவுடன் ட்ரம்பின் கொள்கைகளைக் கைவிட்டு ஒபாமா காலத்துக் கொள்கைக்குச் செல்ல முடிவுசெய்துள்ளார் பைடன். அதாவது அணுவாயுதங்களைக் கட்டுப்படுத்தலும் பரவலாவதைத் தடுப்பதும் என்ற இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த பைடன் விரும்பியுள்ளார். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அணுவாயுத நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் மேற்கொண்டு அணுவாயுதங்களைத் தயாரிப்பதை மட்டுப்படுத்த வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கு பைடன் இணங்கினாலும், ரஷ்யாவால் அமெரிக்காவுக்கோ அதன் நட்பு நாடுகளுக்கோ பாதிப்பு என உணரும் பட்சத்தில் இந்த ஒப்பந்தம் கைவிடப்படும் என்றும் பைடன் எச்சரித்துள்ளார்.

### ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளுக்கே முதலிடம்

அதேநேரம் தான் பதவியேற்ற முதல் வாரத்திலேயே தான் சார்ந்த ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்களின் பரிந்துரைகளுக்கு ஏற்பவும் சில காய்களை பைடன் நகர்த்தியுள்ளார். குறிப்பாக உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் , பரிஸ் பருவநிலை ஒப்பந்தம் என்பவற்றில் மீண்டும் இணைந்தமை, அகதிகளுக்கான பயணத்



தடையை நீக்கியமை, மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைப்பதை நிறுத்தியமை, மூன்றாம் பாலினத்தவர்களை அமெரிக்க இராணுவத்தில் அனுமதித்தமை, கிறீன் கார்ட் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தியமை, அகதிகள் குடியுரிமையைப் பெற வழிகளை இலகுவாக்கியமை என்பவை இந்தப் பட்டியலில் உள்ளன.

ஆக, எதிர்பார்த்தைப்போலவே பைடனின் ஆட்சியின் முதல்வாரம் அமைந்துள்ளது. ட்ரம்பின் கொள்கைகளில் எதையெல்லாம் உலகம் வெறுத்ததோ அவற்றில் சிலவற்றை பைடன் தூக்கியெறிந்துள்ளார். சிலவற்றை பைடனும் தொடர்கிறார். ஆனால், போர் முனைகளைப் பொறுத்தவரையில் அவரின் நகர்வு என்னவாக இருக்கப்போகின்றது என்பதற்கு பென்டகனும் காலமுமே பதில் சொல்லவேண்டும்.